# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-13
Issue-12

டிசம்பர்-2020 (ரபியுல் ஆகிர்-1442)

விலை ரூ. 20/-




## தொடரும் உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் -2

உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் கடிதம்



புத்த மதத்திற்கு முன் அண்ணல் அம்பேத்கர் :

## இஸ்லாம்தான் தலீத் மக்களுக்கு ஏற்ற மார்க்கம் எனக் கருதினார் ஏன்...?

- முனைவர் ஆனந்த் டெல்டும்டே

## பாபரி மஸ்ஜித் 'என்றும் நம் நினைவில்'



بسم الله الرحمن الرحيم

“

தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டு, (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் திட்டமிட்ட மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்களே (வாக்குறுதி மீறி உங்களைத் தாக்க) முதல் முறையாக துவங்கினர்; நீங்கள் அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? (அப்படியல்ல!) நீங்கள் முஃமின்களாக இருப்பீர்களானால், நீங்கள் அஞ்சுவதற்கு தகுதியுடையவன் அல்லாஹ் ஒருவனேதான்

(அல்குர்ஆன் - 9:13)

”


தொடரும் உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் - 4

புத்த மதத்திற்கு முன் அண்ணல் அம்பேத்கர் : இஸ்லாம்தான் தலித் மக்களுக்கு ஏற்ற மார்க்கம் எனக் கருதினார் ஏன்...? - 12

அமெரிக்க தேர்தல் பிரச்சாரத்தில் ஒரு நிகழ்வு - 19

கஷ்மீர் கோயில்கள் இடிக்கப்பட்டனவா..? - 20

பெண்களின் நிலை ஓர் ஒப்பாய்வு..! - 24

பாபரி மஸ்ஜித் ‘என்றும் நம் நினைவில்’ - 27

இராமர் கோவில் அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் மோடி - 30

சிலுவைப் போர்கள் 2.0 - 33

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு லைவத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 35

கொரோனாவில் கற்றுக்கொண்டது என்ன? - 39

தலையங்கம் - 42

இந்திய வரலாற்றில் அர்மீனியர்களின் துரோகம் - 44

உலக கிறிஸ்தவ தீவிரவாதிகளின் (Templar knights) கனவை கொன்று புதைத்த அஜர்பைஜான் - 46

போர் நிறுத்த உடன்படிக்கையில் துருக்கி – ரஷ்யா அரசியலின் பங்கு - 50

நெருக்கடியில் இஸ்லாமா அல்லது பிரான்சு அரசா? - 52

கிறிஸ்தவர்களின் பிடியில் நொறுங்கி சிதைந்த வரலாற்று சின்னங்கள் - 56

கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்வுக்கு கிருஷ்ணய்யர் விருது - 58

ஒரு நூல் தொப்பிக்கு கிடைத்த மரியாதை! - 60

ஜெனிசிஸ் வசனங்களும் குர்ஆன் வசனங்களும் - 61

பீகார் தேர்தல் முடிவு, தமிழகத்திற்கு வரும் ஆபத்து. - 63



டிசம்பர்–2020

# வைகறை வெளிச்சம்

ரபியுல் ஆகிர்–1442

ஆசிரியர்

**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்

**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**கொள்கை வழியில் :**
செய்தி மடல், விடியல் வெள்ளி, ஆகியவற்றின் தொடர்ச்சி

http:/www.facebook.com/vaigarivelicham

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

# தொடரும் உச்ச நீதிமன்றத்தின்

# தாழ்ச்சியும் வீழ்ச்சியும் -2



## உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் கடிதம்

### பார் கவுன்சில் தலைவரின் கடிதம் : பின்னணி?

### அர்னாப் கோஸ்வாமி :

*நமது இந்தியாவின் ஊடக களத்தில் ஏறத்தாழ 2000 தொலைக்காட்சியின் சேனல்கள் இயங்குகின்றன. அவற்றுள் பல பாசிசப் பரிவாரத்தால் பாசிசத்திற்காக நடத்தப்படு கின்றன. இப்படி நடத்தப்படும் சானல்களுள் ஒன்றுதான் REPUBLIC TV என்ற ரிபப்ளிக் தொலைக்காட்சி. இது ஆங்கிலத்தில் வருவது. இது அர்னாப் கோஸ்வாமி என்ற பாசிசத் தீவிரவாதியால் நடத்தப்படுவது.*

*இந்த அர்னாப் கோஸ்வாமி இதற்கு முன்னால், இன்னொரு பாசிச தொலைக் காட்சியின் 'டைம்ஸ் நவ்' 'TIMES NOW' என்ற தொலைக் காட்சியில் வேலை செய்தார்.*

*டைம்ஸ் நவ் - Time Now என தொலைக்காட்சி வழி முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்புப் பிரச்சாரத்தில் மிகவும் முன்னணியில் நின்றார். அதேபோல் பாசிசத்தின் சார்பில் பொய்களையும் புனைந்துரைகளையும் அதிவேகமாகப் பரப்பி னார். இதனால் நமது சங்கி பாசிஸ்ட்டுகள் இவருக்குப் பின்னால் உறுதியாக நின்றார்கள்.*

அன்பார்ந்த வாசகர்களே!

"வைகறை வெளிச்சம்" அக்டோபர் 2020 ஆம் இதழில் உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் என்ற தலைப்பில், அட்டைப்படக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தோம்.

அந்த அட்டைப்படக் கட்டுரை முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி A.P. ஷா அவர்கள் ஆற்றிய உரை. படித்து பலர் அது நூல் வடிவம் பெற வேண்டும் என அவாவி உள்ளனர். அந்தக் கட்டுரையில், நமது உச்ச நீதிமன்றம் இதற்கு முன்னரும். 2014–க்குப் பின்னரும் பலமுறை வீழ்ந்திருக்கின்றது. தரம் தாழ்ந்து வீழ்ச்சியில் அதல பாதாளத்தைப் பிடித்திருக்கின்றது.

ஆனால், பின்னர் சற்றே எழுந்துமிருக்கின்றது. காலப்போக்கில் நிமிர்ந்துமிருக்கின்றது. அதுபோல் இப்போதைய நிலையிலிருந்தும் எழும், நிமிரும் என நம்பிக்கையோடு பேசியிருந்தார். தன் நம்பிக்கையை வெளிப்படுத்தி இருந்தார். ஆனால் நமது உச்ச நீதிமன்றம் தொடர்ந்து அதலபாதாளத்தில் வீழ்ந்துகொண்டிருக்கிறது என்பதே உண்மை.

இப்போது அதன் தாழ்ச்சியை வீழ்ச்சியை இடித்துக் காட்டி இருப்பது, உச்ச நீதிமன்றத்தின் பார்கவுன்சில் என்ற வழக்கறிஞரின் குழுமத்தின் தலைவர் "துஷாந்த் துபே" Bar Council of Supreme Court of India. இந்த சட்ட அவை - Bar Council அண்மையில், சுப்ரீம் கோர்ட்டுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அதன் தரம் தாழ்ந்த நடவடிக்கைகள் பலவற்றைச் சுட்டிக்காட்டியுள்ளது. அதனை இங்கே தமிழில் தருகின்றோம்.

இந்தக் கடிதத்தைப் புரிந்துகொள்வதற்கு அந்தக் கடிதம் எழுதப்பட்ட பின்னணியைப் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியம்.

பணத்தை அள்ளிக் கொட்டினார்கள்.

அவர்கள் தந்த பண பலம், விளம்பர உத்திர வாதம் இவற்றைக் கொண்டு இந்த ‘டைம்ஸ் நவ்’ என்ற தொலைக்காட்சியில் வெளியே வந்தார். ரிபப்ளிக் தொலைக்காட்சியைத் தொடங்கினார். இப்போதைய மோடி அரசு பணத்தையும் அரசு விளம்பரத்தையும் அள்ளிக் கொட்டுகின்றது.

இவர் சங்கப் பரிவாரத்திற்கும், பாசிசத்திற் கும் மிகவும் வேண்டியவராகி விட்டதால், இந்தப் பரிவாரத்தின் இன்னொரு கிளை என்றாகிவிட்டார். இதனால் நமது உச்ச நீதி மன்றத்திற்கும் வேண்டியவராகிவிட்டர்.

இவர், அதாவது ரிபப்ளிக் தொலைக் காட்சி யின் சொந்தக்காரராகிய அர்னாப் கோஸ்வாமி எந்த விதியை மீறினாலும் அவரை யாரும் எதுவும் செய்திட முடியாது. உச்ச நீதிமன்றம் பாய்ந்து வந்து அவரைக் காப்பாற்றிடும். இவர் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தனது தொலைக் காட்சி வழியாக காங்கிரஸ் கட்சி யின் அகில இந்திய தலைவர் சோனியா காந்தி மீதும் அவதூறு களை அள்ளித் தெளித்தார்.

## அவதூறு வந்த வழி

ஏப்ரல்–16, (2020) மராட்டிய மாநிலத்தி லுள்ள “பல்கர்” என்னுமிடத்தில் வைத்து மூன்று இந்துக்கள் கொலை செய்யப் பட்டார்கள். அவர்கள் மும்பை யிலிருந்து ‘சூரத்’ என்ற இடத் திற்கு ஒரு மரண நிகழ்வில் கலந்து கொள்வ தற்காகக் காரில் சென்று கொண்டிருந்தார்கள். இந்த மூவரில் ஒருவர் இந்து சாமியார் அல்லது சாது.

இவர்கள் பல்கர் பகுதியில் கிராமத்திற்குள் செல்ல முற்பட்ட போது, வனத்துறை பாதுகாப்பு அதிகாரி ஒருவர் காரை வழி மறித்தார். இவர்களை விசாரித் துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த கிராமத்தவர்கள் அவர்கள் மூவரையும் அடித்தே கொலை செய்து விட்டார்கள். காரணம், அங்கே திருடர்கள் சுற்றிக் கொண்டிருப்பதாக வாட்ஸ்ஆப் முதலாய சமூக வளைத்தலங்களில் செய்திகள் உலா வந்து, அந்த கிராமத்தவர்களை பீதிவயப்படுத்தி இருந்தது.

இந்தச் செய்தியை அர்னாப் கோஸ்வாமி சோனியாவின் தூண்டுதலால் தான் அந்தக் கொலைகள் நடந்தன என அள்ளிவிட்டார்.

“சோனியா சாதுக்களை கொலை செய்கின் றார், இத்தாலியின் பாராட்டுக்களைப் பெற்றிட. அவர் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும், இந்தியாவில் 80% இந்துக்கள் வாழும் நாடு. 20 சதவீதத்தினர் ஜாக்கிரதை.”

இப்படி ஒரு சாதாரண நிகழ்வை கிருஸ்த வர்கள் மீது மக்களை ஏவிவிடும் ஒரு பெரும் பொய்யை செய்தியாகச் சொன்னார். நாட்டில் குறிப்பாக மராட்டிய மாநிலத் தில், கிருஸ்த வர்கள், இந்துத்துவ தீவிரவாதிகளால் எந்த நிமிட மும் பயங்கரவாத தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்ற பதற்றமும் பீதியும் நிலவியது.

இதனால் நோய்வாய்ப்பட்டு இருக்கும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நொந்தார். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த வர்கள், நாடெங்கும் காவல்துறை யிடம் புகார் கொடுத்தார்கள்.

மொத்த நிகழ்வும் நடந்த மராட்டிய மாநில காவல்துறை பொய்யைப் பரப்பி நாட்டை பிளவுபடுத்த முனைந்த கோஸ்வாமியைக் கைது செய்யத் தயாரானது.

உடனேயே அர்னாப் கோஸ் வாமி தன்னைக் கைது செய்யக் கூடாது என உச்ச நீதிமன்றத்தில் 23, ஏப்ரல் (2020) அன்று இரவு 8 மணிக்கு ஒரு மனுவைத் தாக்கல் செய்தார். அடுத்த நாள் காலை (24,2020) 10.30 மணிக்கு வழக்கு விசாரணைக்கு வந்தது. உச்ச

> “ உடனேயே அர்னாப் கோஸ்வாமி தன்னைக் கைது செய்யக்கூடாது என உச்ச நீதிமன்றத்தில் 23, ஏப்ரல் (2020) அன்று இரவு 8 மணிக்கு ஒரு மனுவைத் தாக்கல் செய்தார். அடுத்த நாள் காலை (24,2020) 10.30 மணிக்கு வழக்கு விசார ணைக்கு வந்தது. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விழுந்தடித்துக் கொண்டு காலையில் வந்தார்கள். அதாவது உச்ச நீதிமன்றம், அர்னாப் கோஸ்வாமியின் செநர்த நீதிமன்றமாகச் செயல்பட்டது. விசாரணை காணொளி மூலம்தான் நடைபெற்றது. ”

நீதிமன்ற நீதிபதிகள் விழுந் தடித் துக் கொண்டு காலையில் வந்தார்கள். அதாவது உச்ச நீதிமன்றம், அர்னாப் கோஸ்வாமியின் செநர்த நீதிமன்றமாகச் செயல்பட்டது. விசா ரணை காணொளி மூலம்தான் நடைபெற்றது.

## வழக்கறிஞர்களின் உளக்குமுறல்

இதனை காங்கிரஸ் கட்சியின் மூத்த வழக்கறிஞர், கபில் சிபால் அவர்கள் மிகவும் கடுமையாகவே சுட்டிக் காட்டினார்.

தலீத்களும், இதர சிறுபான்மையினரும் இந்த நீதிமன்ற த்திற்கு வந்தபோது, நீதிமன்றம் இவ்வளவு சீக்கிரமாக வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவில்லை.

கஷ்மீரில், மத்திய அரசால் காணமலாக்கப்பட்ட, முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லா வுக்காக ஆட்கொணர் மனுவை இந்த நீதி மன்றத்தில் கொண்டு வந்தபோது, அந்த வழக்கு இத்துனை வேகமான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வில்லை. இந்த மனுவை தாக்கல் செய்த கோஸ்வாமி ஏன் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவருக்கென்ன அப்படி ஒரு தனிச்சிறப்பு?

**"தங்கா"** ஹரியானா மாநில வழக்கறிஞர்

அவர் செய்திருக்கும் குற்றம், அதாவது கோஸ்வாமி செய்திருக்கும் குற்றம் சாதாரணமானது அல்ல. அவர் தேசிய ஒருமைப்பாட்டையே சீர்குலைக்கும் அளவில் "இந்த நாட்டில் 80% சதவீதம் மக்கள் இந்துக்கள், 20 சதவிகிதம் மக்கள் எச் சரிக்கை" யுடன் வாழ்ந்திட வேண்டும் எனக் கூறியிருக்கின்றார். இஃது நாட்டின் ஒற்றுமை யைக் குலைக்கும் இன்னொரு பிரிவினையைத் தூண்டும். அதனால்தான், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 153/153A/ 153/B, 295 (மக்களுடைய மத உணர்வு களைத் தூண்டி, மோத விடுவது) ஆகியவற்றின் கீழ் அவர் குற்ற வாளி என்கின்றோம். அர்னாப் கோஸ்வாமி நாட்டில் இன்னொரு பிரிவனையைத் தூண்டும் விதத்திலேயே பேசிக் கொண்டிருக் கின்றார்.

அனைத்தையும் செவிமடுத்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், D.Y. சந்திரசூட் மற்றும் MR ஷா ஆகியோர். நாங்கள் எல்லா முதல் அறிக்கை களையும் – அதாவது அர்னாப் கோஸ்வாமி மீதுள்ள எல்லா வழக்குகளையும் ரத்து செய்கின்றோம். ஒரே ஒரு வழக்கைத் தவிர அந்த வழக்கு எது என்பதை அர்னாப் கோஸ்வாமியே முடிவு செய்யலாம் என கூறினார்கள். பின்னர் மும்பையிலிருந்த அர்னாப் கோஸ்வாமி அரித ஒரு புகாரை தேர்வு செய்யும் வரை காணொளியில் எல்லோரும் காத்திருந்தார்கள்.

காத்திருந்தவர்கள், இரண்டு உச்ச நீதிமன்ற நீதிபதிகள், அவர்களின் உதவியாளர்கள் பின்னர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மூத்த வழக்கறிஞர்கள், அர்னாப் கோஸ்வாமியின் வழக்கறிஞர்கள் ஆகியோர், பின்னர் குற்றவாளி கோஸ்வாமி



அர்னாப் கோஸ்வாமி

> "ஆயிரக்கணக்கான குடிமக்கள் பல வருடங் களாக – நீண்ட காலங் களாக சிறையில் வாடிக் கொண்டிருக்கின் றார்கள். அவர்களுடைய விவகாரங்கள், கண்ணியமிக்க இந்த நீதிமன்றத்தின் முன், மனுக்களாக வந்தபோது பல வாரங்களாக, மாதங்களாக, வருடங்களாக அவை விசாரணைக்காகப் பட்டியலி டப்படவில்லை. ஆனால் ஒவ்வொரு முறையும் அர்னாப் கோஸ்வாமி இந்த நீதிமன் றத்தை அணுகும்போது அது உடனுக்குடன் பட்டியலிடப் பட்டு விரைவில் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப் படுகின்றது. இது மிகவும் வருத்தமளிக்கின்றது. மன உளைச்சலை ஏற்படுத்துகினறது. எனக்கிருக்கின்ற மிகையான வருத்தத்தை மிகவும் மிருதுவான சொற்காளல் இங்கே வெளிப்படுத்துகின்றேன்."

தான் விருப்பம்போல் ஒரே ஒரு முதல் தகவல் அறிக்கையை தேர்வு செய்கின்றார். அவரை இப்போதைக்கு கைது செய்யக்கூடாது என ஓர் ஆணையைப் பிறப்பிக்கின்றார்கள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள்.

பின்னர் அந்த முதல் தகவல் அறிக்கையையும் மே–19,2020 இல் ரத்து செய்து விடுகின்றார்கள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள்.

இப்படி அர்னாப் கோஸ்வாமியின் எடுபிடியாகச் செயல்பட்டது உச்ச நீதிமன்றம். இதனிடையே ஏப்ரல்–22 அன்று சிலர் தன்னை தாக்கியதாக ஒரு போலி வீடியோவைத் தயார் செய்து அனுப்பினார். இதில் அவர் மீது புகார். ஆனாலும் யாரும் நீதிமன்றம் செல்லவில்லை. காரணம் நீதிமன்றம் அவர் பிடியில்.

## மீண்டும் தரம் தாழ்ந்த உச்ச நீதிமன்றம்

அதேபோல அண்மையில் அர்னாப் கோஸ்வாமி மீது, பல புகார்கள் பொதுமக்களிடமிருந்தும், அவரால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தாரிடமிருந்தும் வந்தது.

பொதுமக்களிடமிருந்து வந்த புகார்கள் என்னவெனில் அவர், தங்களுக்குப் பணம் தந்தார். எதற்கு எனக் கேட்டபோது, அதிகமான பார்வையாளர்கள் அல்லது நேயர்களைக் கொண்ட தொலைக்காட்சி தன்னுடைய ரிபப்ளிக் தொலைக்காட்சிதான் (REPUBLIC TV) எனக் காட்டிட வேண்டும். அதற்காக ஒரு கருவியை உங்கள் வீட்டில் பொருத்துகின்றோம். அந்தக் கருவியை நீங்கள் அகற்றக் கூடாது. அதற்காகத்தான் இந்தப் பணம் என்றார். எங்கள் விருப்பங்களுக்கு எதிரானது என மறுத்த போதும் கருவியை இரவோடு இரவாகப் பொருத்தி விட்டுச் சென்றார்கள் எனப் பொதுமக்கள் பலர் புகார்கள் செய்தார்கள்.

அடுத்து, 2018 இல் அவர் மீது தரப்பட்ட புகார் அது. ஒரு (INTERIOR DECORATIN) வீட்டு அலங்கார கம்பெனிக்கு இவர் 5 கோடியே 20 இலட்சம் ரூபாய் தர வேண்டும். ஆனால் தராமல் ஏமாற்றி விட்டார். மிகுந்த கடன் தொல்லையில் சிக்கி இருந்த அவர், அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், இதனால் குடும்பத் தலைவர் தற்கொலை செய்து கொண்டார். தற்கொலைக்கு அர்னாப் கோஸ்வாமிதான் காரணம் என அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் புகார் செய்தார்கள்.

அப்போது மராட்டிய மாநிலத்தில் பாரதீய ஜனதா கட்சி ஆட்சியிலிருந்ததால் கோஸ்வாமி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 2019 இல் பா.ஜ.க. ஆட்சியில் வழக்கு இழுத்து மூடப்பட்டது.

இப்போது உத்தவ்தாக்கரேயின் ஆட்சி நடைபெற்று வருகின்றது. இதனால் ஏதாவது நடவடிக்கை எடுக்க வாய்ப்புண்டு என்பதால் இந்த ஆட்சியில் அதே குடும்பத்தவர்கள் தங்கள் புகாரை விசாரிக்கச் சொல்லி மனுப் போட்டார்கள். அதனடிப்படையில் மராட்டிய உள்துறை அமைச்சர் அனில் தேஷ்முக் ஓர் சிறப்புக் குழுவை அமைத்து விசாரணைக்கு உத்திர விட்டார்.

இந்தச் சிறப்புப் பிரிவு விசாரித்தது. அன்வே நாயக் தற்கொலை செய்து கொண்டதற்குக் காரணம், அர்னாப் கோஸ்வாமியின் ஏமாற்று வேலைதான் என்பது நிரூபனமானது. அதனால் அவரை நவம்பர் 4–இல் கைது செய்தார்கள்.

இவர் கீழே உள்ள நீதிமன்றங்களையெல்லாம் புறந்தள்ளிவிட்டு நேர உச்ச நீதிமன்றம் சென்றார். உடனேயே இவருக்கு பிணை வழங்கப்பட்டது. இதையும் உடனடியாக உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. பல ஆயிரம் முக்கியமான வழக்குகள் நிலுவையில் இருக்கும் போது, பல அப்பாவிகள் சிறையில் எந்த முகாந்திரமுமில்லாமல் அடைக்கப்பட்டிருக்கும் போது, அந்த அப்பாவிகள் பலமுறை முறையிட்டும் அந்த வழக்குகளை விசாரணைக்கு எடுக்காமல் அர்னாப் கோஸ்வாமியின் வழக்கை அலறி அடித்துக் கொண்டு கையிலெடுப்பதும், அடாத செயல், அநியாயம் என பல ஆயிரம் மூத்த வழக்கறிஞர்களும் மனித உரிமை ஆர்வலர்களும் முன்னாள் நீதிபதிகளும் தங்கள் உள்ளக்குமுறலைக் கொட்டினார்கள். இந்நிலையில் தான் உச்ச நீதிமன்றத்தில் பார் கவுன்சில் தலைவர் இந்தக் கடிதத்தை உச்ச நீதிமன்ற தலைமை செயலாளருக்கு எழுதியுள்ளார்.

வரலாற்றில் வரையிட்டுக்காட்டப்பட வேண்டிய முக்கியக் கடிதம். அதனால் அதனை இங்கே தமிழில் தருகின்றோம்.

## உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம்

**SUPREME COURT BAR ASSOCIATION (Regd.)
SUPREME COURT OF INDIA. TILAK YARK, NEW DELHI-110 001. INDIA.**

பெறுநர்,

**பொதுச் செயலாளர்** – The Secretary General

இந்திய உச்ச நீதிமன்றம் – Supreme court of india

புதுடெல்லி – New Delhi.

பொருள் : ஸ்ரீஅர்னாப் கோஸ்வாமியின் சார்பில் சமர்பிக்கப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்பு மனுவின் மீதான வழக்கத்திற்கு மாறான உடனடியாக விசாரணைக்கு எடுத்தது குறித்து.

அன்புள்ள ஐயா,

"எந்த ஆராரமுமில்லாத குற்றச் சாட்டுகளின் மூலம், 3,30,000 பேர் நாட்டின் பல்வேறு கொட்டடிகளிலும் கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக் கின்றார்கள். இவர்களில் ஆயிரக்கணக் கான சமூக ஆர்வலர்களும் உண்டு. (SOURCE : EDITOR இணைய இதழ் – 27,NOV.-2020)

இவற்றையெல்லாம் விரிவான கள ஆய்வுகள் மூலம் மக்கள் மன்றத்தில் வைத் தவர். லெஹ் வர்கீஸ் என்ற சட்டத்துறை ஆய்வாளர் (SOURCE : IBID)"

நான் இந்தக் கடிதத்தை உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் என்ற அடிப்படையில் உங்களுக்கு எழுதுகின்றேன்.

இந்தக் கடிதம் நீங்கள் நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டியலிருக்கும் வழக்கை எதிர்த்து எங்களுடைய வலுவான எதிர்ப்பைக் காட்டிடவே! வழக்கு நாளை D.Y. சந்திர சூட், இந்திரா பானர்ஜி ஆகிய மேன்மை தங்கிய நீதிபதிகளின் அமர்வில் வருகின்றது. எனக்கு அர்னாப் கோஸ்வாமி மீது எந்தத் தனிப்பட்ட விரோதமுமில்லை. நாட்டில் உள்ள ஏனைய குடிமக்களைப் போல் அவருக்கும் இந்த நாட்டின் உச்சபட்ச நீதிமன்றத்தை அணுகி நீதிபெறும் உரிமை உண்டு. அதில் குறுக்கிடவும் நான் விரும்பவில்லை. இங்கேயுள்ள மிகவும் பாராதூரமான பிரச்சனை என்னவெனில், சில வழக்குகள் வேண்டுமென்றே இதர வழக்குகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு விரைவான விசாரணைக்கு பட்டியலிடப் படுகின்றன. இது உங்கள் தலைமையின் கீழ் இந்தப் பெருந்தொற்று COVID-19 அகால காலத்தில் நடக்கின்றது.

ஆயிரக்கணக்கான குடிமக்கள் பல வருடங்களாக – நீண்ட காலங்களாக சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய விவகாரங்கள், கண்ணியமிக்க இந்த நீதிமன்றத்தின் முன், மனுக்களாக வந்தபோது பல வாரங்களாக, மாதங்களாக, வருடங்களாக அவை விசாரணைக்காகப் பட்டியலிடப்படவில்லை. ஆனால் ஒவ்வொரு முறையும் அர்னாப் கோஸ்வாமி இந்த நீதிமன்றத்தை அணுகும்போது அது உடனுக்குடன் பட்டியலிடப்பட்டு விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இது மிகவும் வருத்தமளிக்கின்றது. மன உளைச்சலை ஏற்படுத்துகினறது. என க்கிருக்கின்ற மிகையான வருத்தத்தை மிகவும் மிருதுவான சொற்காளல் இங்கே வெளிப்படுத்துகின்றேன்.

இதுகுறித்து நமது கண்ணியமிகு இந்திய தலைமை நீதிபதியிடமிருந்து, அவர் (ரோஸ்டரின் மாஸ்டர்) எந்தெந்த வழக்குகளைப் பட்டியலிட வேண்டும் என்பதை தீர்மானிப்பவர் என்ற அடிப்படையில் ஏதேனும் உத்தரவுகள் இருக்கின்றதா? தலைமை நீதிபதியிடமிருந்து குறிப்பான உத்தரவுகள் இல்லாமல், வழக்குகள் உடனடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்பது ஊரறிந்த உண்மை. அல்லது உச்ச நீதிமன்ற நிருவாகத்தின் தலைவர் என்ற அளவில் நீங்களோ, தலைமைப் பதிவாளரோ கோஸ்வாமிக்கு அனைத்தையும் விஞ்சிய அதீத சிறப்புச் சலுகைகளைத் தருகின்றீர்களா?




உங்களுக்கு நன்றாகத் தெரியும், பல வழக்கறிஞர்கள் என்னிடம் வந்து பலமுறை முறையிட்டிருக்கின்றார்கள். சில வழக்குகள் உடனடியாக விசாரணைக்குப் பட்டியலிட வேண்டும் என்று. ஆனால் பல வாரங்களாகவும், பல மாதங்களாகவும், அவை பட்டியலி லேயே வரவில்லை. இவற்றில் பல வழக்குகள் பிணை (ஜாமீன்) சம்மந்தப்பட்டவை. அவர்கள் நீண்ட நாட்களாக வரிசையில் நின்று கொண்டிருக்கின்றார்கள்.

சில வழக்குகளில் அவை மிகவும் அவசரமானவை என்பதால் நீங்கள் அவற்றைப் பட்டியலிட உதவி செய்திருக்கின்றீர்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இங்கே பிரச்சனை என்னவெனில் நமது உச்ச நீதிமன்றத்தில் எல்லாமே மின்னனுவுக்கும் கம்ப் யூட்டர் செயலுக்கும் கொண்டுவந்து விட்டபின் எல்லாமே தானாகவே வரிசை பிரகார மாகத்தானே நடக்க வேண்டும்? அப்படியிருக்க சிலருடைய வழக்கு மட்டும் எப்படி முந்தி யடித்துக் கொண்டு வருகின்றது. எல்லாரும் சமமான, எல்லாக் குடிமக்களுக்கும் சமமாக எல்லா (AOR) என்ற வழக்கறிஞர்களும் சமமான முறை ஒன்று ஏன் செயலில் வரவில்லை? நான் அடிக்கடி உங்களிடம் ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்டி இருக்கின்றேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அது கொரோனா–19, வழக்கறிஞர்கள் பலரை மிகவும் துன்பங்களுக்கு ஆளாகி இருக்கின்றது. இந்த உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்களின் குழுமம் இயன்றவரை அவர்களுக்கு உதவிகளைச் செய்திருக்கின்றது. இந்த உதவிகளும் பெரிய அளவில் நீடிக்க தேவையான பொருளாதாரப் பின்னணி இந்த பார் கவுன்சிலுக்கு இல்லை. இதை நீங்கள் அறிவீர்கள். இதற்கு ஒரே தீர்வு சிறந்த தொழில் நுணுக்கம் கொண்ட (ONLINE வீடியோவின்) ஒரு நவீன முறையை உச்ச நீதிமன்றத்தில் செயலில் கொண்டு வருவதே (இதன்மூலம்) அதிகமான வழக்குகளை விசாரணைக்கு எடுத்து வழக்கறிஞர்களின் வாழ்க்கைச் செலவுகளுக்கு வகை செய்வதே!

இதுகுறித்து (அதாவது ஆன்லைன் வீடியோவின் நவீன முறைகுறித்து) பல முன்னணி நிறுவனங்களுடன் பேசி மிகவும் நவீனமுறை ஒன்றை உங்களுக்குப் பரிந்துரைத்தேன். அதேபோல் (கமிட்டிகளும்) மின்னனு குழுவுக்கும் பரிந்துரைத்தேன். இதை நான் செய்து பல மாதங்கள் ஆகிவிட்டன. பின்னர் நான் கேட்டபோது அது பரிசீலனையிலி ருக்கின்றது எனச் சொன்னீர்கள். பின்னர் நீங்கள் டெண்டர் (ஏலம்) விட்டீர்கள். ஆனால்

நம் நாட்டில் இயங்கும் பல உயர் நீதிமன்றங்கள், டெண்டர் முறைக்குப் போகாமலே நல்ல நவீன வீடியோ முறைகளை நிறுவி சிறந்த முறையில் நீதிபரிபாலனம் செய்து வருகின்றார்கள். அதேநேரத்தில் நமது தலைமை நீதிபதி அவர்கள் செய்த செயல் ஒன்று என்னையும் வழக்கறிஞர் சங்கத்தையும் (பார் அசோசியேசனையும்) ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. அது ஒரு வழக்கின் விசாரணையின் போது "ரிலையன்ஸ் ஜியோ" நிறுவனம். மிக நவீன முறை ஒன்றை தருகின்றோம் எனக் கூறியபோது, நமது தலைமை நீதிபதி அவர்கள் அதைத் தட்டிக் கழித்தார்கள். உச்ச நீதிமன்ற பதிவாளரை சந்தியுங்கள் என்றார். இது எங்களுக்கு வானமே இடிந்து விழுந்ததைப் போலிருந்தது. (அதிர்ச்சி அடைந்தோம்) ஆக, நமது உச்ச நீதிமன்றம் ஒரு சிறந்த நவீன வீடியோ முறைக்கு மாறிடுவதில் தோற்றுப் போய்விட்டது. இதனால் வழக்குகளின் விசாரணை குறைந்துபோனது. நடக்கும் விசாரணையும் தடுமாமறிக் கொண்டிருக்கின்றது.

தினமும் மிகவும் குறைந்த அளவு, அமர்வுகளே நடக்கின்றன. அவற்றில் சில நீதிமன்ற நேரத்திற்குள் நடப்பதில்லை. அதற்கான காரணம் தெரியவில்லை. ஒருவேளை அது, வீடியோக்களில் உள்ள குளறுபடுகளோ, என்னவோ தெரியவில்லை. இவையெல்லாம் நீதி எல்லோருக்கும் கிடைப்பதில் பல ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்திவிட்டது. சாதாரண குடிமக்களின் நிலை 'அதோகதிதான்". கோஸ்வாமி போன்றவர்களுக்கு சிறப்பான சலுகைகள், சிறப்பான உபச்சாரம் எல்லாம் (வேண்டியதெல்லாம்) கிடைக்கின்றது. சாதாரண இந்தியர்கள் செத்து சுண்ணாம்பாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். பல ஆண்டுகள் செய்வதறியாமல் வாடி வதங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த சிறை வாசம் பெரும்பாலானவர்கள் விவாகரத்தில் சட்டடத்திற்கு எதிரானது. (ILLEGAL) இன்னும் பலரது விவகாரத்தில் முற்றலும் தவறானது.

திரு. ப.சிதம்பரம் போன்ற மரியாதைக்குரிய மூத்த வழக்கறிஞரின் வழக்குகள் கோஸ்வாமியின் வழக்கின் அளவுக்கு வேகமாகப் பட்டியலிடப்படவில்லை. இதனால் அவர் அதிகமான மாதங்கள் சிறையிலிருக்க வேண்டியதாயிற்று. கடைசியில் களமிகு இந்த நீதிமன்றம் அவருக்கு பிணை தேவையானது எனக்கூறியது. ஐயா, கோஸ்வாமியின் வழக்கு நேற்று பதிவு செய்யப்பட்டது. அது உடனேயே டைரி நாட்குறிப்பு எண் பெற்றது. அந்த டைரி எண் அறுதியானது அல்ல. எனினும் அந்த வழக்கு நாளை வருகின்றது. இது நிருவாக அதிகாரத்தின் முழுமையான துஷ்பிரயோகமாகும். இந்த அதிகார வரம்பு மீறலை செய்தது யார்? இது சில வழக்கறிஞர்களின் கட்சிக்காரராக ஆகிவிட்டால், வழக்கு உடனேயே விசாரணைக்கு வந்துவிடும். அந்த வழக்குகள் உச்ச நீதிமன்றத்தின் சிறப்புக் கவனத்தைப் பெற்றுவிடும் என்ற எண்ணங்களை ஏற்படுத்துகின்றது. இது உச்ச நீதிமன்றத்தின் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்துகின்றது.

நீங்கள் நவம்பர்–10 ஆம் நாளுக்கு முன் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை உடனடி விசாரணைக்குப் பட்டியலிடாமல் இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்கக்கூடாது எனக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் இது விஷயத்தில் அதாவது, வழக்குகளை விசாரணைக்கு வரிசைப்படுத்தும் விவகாரத்தில் ஒரு குறையற்ற நெறிமுறையை செயல்படுத்தும் வரை இந்த வழக்கை கோஸ்வாமியின் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது.

இந்த எனது கடிதத்தை நாளை கோஸ்வாமியின் வழக்கை விசாரிக்கும் அமர்வின் முன் (அதாவது நீதிபதிகளின்) முன் வைத்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் உண்மையுள்ள,
துஷாந்த் தேவ்,
தலைவர்
உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம்

நவம்பர்,10–2020
புதுடெல்லி
8.15 PM

## ஆனாலும் திருந்தவில்லை நீதிமன்றம்

*துஷாந்த் தேவ் அதாவது உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் குழுமத்தின் தலைவர் அவர்கள் இத்துணைக் கடுமையானதொரு கடிதத்தை எழுதிய பின்னரும், உச்ச நீதிமன்றத்தின் செல்லப் பிள்ளையாக அர்னாப் கோஸ்வாமியின் வழக்கு உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. அவர் விரும்பியதைப்போல் தீர்ப்பும் தயாரித்து அவரிடம் சமர்பிக்கப்பட்டது. அவர் ஒரு குடும்பத்தையே கொலை செய்திருக்கின் றார் என்ற குற்றச்சாட்டை எதிர்கொள்பவர்.*

*தற்கொலை செய்து கொண்டவர் தெளிவாக தற்கொலைக் குறிப்பில் தன் தற்கொலைக்கு அர்னாப் கோஸ்வாமி தன்னை 5½ கோடிக்கு ஏமாற்றியதுதான் எனத் தெளிவாக குறிப்பிட்டி ருந்தார். இது 2018இல் நடந்தது. அப்போது மராட்டிய மாநில முதல்வராய் ஆர்.எஸ்.எஸ். –இன் தேவேந்திர ஃபண்டாவிஸ் இருந்தார். இவர் அர்னாப் கோஸ்வாமி ஆர்.எஸ்.எஸ்.–இன் செல்லப்பிள்ளை (அதனால்தான் உச்ச நீதிமன்ற த்திகும் செல்லப்பிள்ளை). இதனால் அன்று அந்தத் தற்கொலை நடந்த அந்த நாட்களில் எந்த நடவடிக்கையுமில்லை. பின்னர் 2019 இல் அந்தப் புகாரை மூடிவிட்டார்கள்.*

*இப்போது மராட்டிய மாநிலத்தில் ஆர்.எஸ். எஸ். ஆட்சி இல்லை. அதனால் மீண்டும் அந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என வந்த புகாரின் பேரில், வழக்கு விசாரிக்கப்பட்டு அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் உச்ச நீதிமன்றம் அர்னாப் கோஸ்வாமிக்கு உச்ச நீதிமன்றம் விரைந்து தீர்ப்பு வழங்கியபோது, அதேபேரில் 60,000 பேர் அதே நீதிமன்றத்தில் பிணைகளுக்காகக் காத்துக்கிடக்கின்றனர்.*

*எந்த ஆராரமுமில்லாத குற்றச் சாட்டுகளின் மூலம், 3,30,000 பேர் நாட்டின் பல்வேறு கொட்டடிகளிலும் கொடுமைகளை அனுபவித் துக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களில் ஆயிரக் கணக்கான சமூக ஆர்வலர்களும் உண்டு.* (SOURCE : EDITOR இணைய இதழ் - 27,NOV.-2020)

*இவற்றையெல்லாம் விரிவான கள ஆய்வுகள் மூலம் மக்கள் மன்றத்தில் வைத்தவர். லெஹ் வர்கீஸ் என்ற சட்டத்துறை ஆய்வாளர்* (SOURCE : IBID)

*ஆனால் யாருக்குமில்லாத முன் உரிமை அர்னாப் கோஸ்வாமிக்கு வழங்கப்பட்டது.*

*அதே நேரத்தில் பேராயர் "FATHAR" ஃபதர் ஸ்டேன்சாமி என்பவர். 84 வயதான முதியவர். அவர் ஆதிவாசிகளிடையே வேலை செய்து கொண்டிருப்பவர். வேறெந்த ஆட்சியாக இருந் தாலும் அவர் ஆதிவாசிகளுக்காகச் செய்த சேவைகளுக்காகப் பதக்கங்களையும் பட்டங் களையும் பெற்றிருப்பார்.*

*ஆனால் மோடி அரசு அவரை 'NIA' என்ற தேசிய முகமையை ஏவிவிட்டு கைது செய்தது. 'ஊபா' என்ற தடை செய்யப்பட்ட செயல்களின் தடை சட்டத்தின்கீழ் அவர் நீதிமன்றம் சென்றார். அவர் அங்கே கேட்டதெல்லாம் எனக்கு கை, கால்கள் உதறும் நோய் இருக்கின்றது.*

*அதாவது "பார்க்கின் சன்ஸ்" நோய் இருக்கின்றது. என்னால் குவளையில் தரும் நீரைக் கையால் பிடித்து அருந்த முடிவதில்லை. ஆகவே எனக்கு தண்ணீர் அருந்த வசதியாக ஸ்ட்ரா – STRAW என்ற உறிஞ்சி குடிக்கும் சிறு குழாய்கள் வேண்டும் எனக் கேட்டார். இதைத் தரமறுத்த நீதிமன்றம், வழக்கு விசாரணையை 20 நாட்களுக்கு ஒத்திப்போட்டது.*

*அதேபோல் நாவல்கார், சுதா பத்வராஜ் வரரராவ் ஆகியோர் – அறிவாளிகள், சிந்தனையாளர்கள் – சமூக ஆர்வலர்கள். இவர்களெல்லாம் நீண்ட நாட்களாக சிறையில் வாடுகின்றார், இவர்களின் பிணை மனுக்கள் நாம் மேலே குறிப்பிட்ட 60,000 (அறுபதாயிரம்) வழக்குகளோடு நீர்த்துப்போய் கிடக்கின்றன.*

**இவர்கள் கோஸ்வாமிக்குப்**
**பிணை வழங்கப்பட்டபோது**
**தங்களுக்கும் பிணை வழங்கிட**
**வேண்டும் எனக் கேட்டபோது,**
**உச்ச நீதிமன்றம், இந்த வழக்குகளை**
**எட்டிப் பார்க்க மாட்டேன் எனக் கூறியது.**

**உச்ச நீதிமன்றத்தின், இதுபோன்ற**
**பாரபட்சங்கள், அடுத்தடுத்த**
**இதழ்களில் பட்டியலிடப்படும்.**

- MGM





டிசம்பர்–6
அம்பேத்கர்
நினைவு
கட்டுரை

## புத்த மதத்திற்கு முன் அண்ணல் அம்பேத்கர் :

# இஸ்லாம்தான் தலீத் மக்களுக்கு ஏற்ற மார்க்கம் எனக் கருதினார் ஏன்...?

– முனைவர் **ஆனந்த் டெல்டும்டே**

அக்டோபர்–13, 1935, மராட்டிய மாநிலம், நாசிக் மாவட்டத்தில் இயோலா (Yeola) என்னுமிடம் மகார் மாநாடு.

இங்கே பாபாசாஹேப் அம்பேத்கர் ஒரு பெரும் வரலாற்றுப் பிரகடனத்தைச் செய்தார். அது, நான் இந்து மதத்திலிருந்து வெளியேறுவது என உறுதியாக முடிவெடுத்துவிட்டேன்' என்பதாகும். அம்பேத்கரின் இந்த அறிவிப்பு, பலதரப்பாரிடம் அதிர்வுகளை ஏற்படுத்தியது.

பழைமைவாத இந்துக்கள், சற்றும் அசைந்துக் கொடுக்கவில்லை. பக்கத்து நாசிக் நகரில் பலர் பரவசப்பட்டார்கள். அங்கேதான் “காலா ராம் கோவில்” சத்தியாகிரகம் பழைமைவாத இந்துக்களைக் கலவரப்படுத்திக் கொண்டிருந்தது. (ஆனால், அம்பேத்கரின், நான் இந்துவல்ல என்ற அறிவிப்பு அவர்களைப் பரவசப்படுத்தியது.)

அரசியல் சிந்தனைக் கொண்ட, இந்துக்கள் அச்சமடைந்தார்கள். சிலர் அம்பேத்கருக்கு, கொலை மிரட்டல் விடுத்தார்கள். அம்பேத்கரின் மக்களில் சிலர் குழப்பமடைந்தார்கள். சிலர் எதிர்க்கவும் செய்தார்கள்.

சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த சிலர், உற்சாகப்பட்டார்கள். அம்பேத்கர் அவர்களைத் தங்கள் மார்க்கத்திற்கு இழுத்திட முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

பாபாசாஹேப் அம்பேத்கர் அவர்கள், தான் செய்த பிரகடனத்தைச் செயல்படுத்திட, ஒரு செயல்திட்டத்தை வரைந்திட, ஒரு மாநாட்டைக் கூட்டினார். அது மும்பை மண்டல “மகார் மாநாடு” என அழைக்கப்பட்டது.

இந்த மாநாடு மும்பையில் 1936ஆம் ஆண்டு, மே திங்கள் 30 ஆம் நாள் முதல் ஜூன் திங்கள் 1–ஆம் நாள் வரை நடந்தது.

அந்த மாநாட்டில் அம்பேத்கர் அவர்கள் உணர்ச்சி பொங்கும் உரை ஒன்றை நிகழ்த்தினார். அது பின்னர் ‘எந்த வழியில் விடுதலை’ முக்தி கோன் பாத்தி : Which Path To Salvation எனத் தலைப்பிட்டு, நூலாகவும் வெளியிடப்பட்டது.

இதில், தலீத்கள் தங்கள் மதத்தை மாற்றிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை முறையாக – அனைவருக்கும் புரியும்படி விளக்கினார்

அம்பேத்கர். அங்கே பேசிய கருத்துக்களை அவர் தன்னுடைய 'ஜாதி ஒழிப்பு – Annihilation Caste' என்ற உரையில் வளர்த்துக் கொண்டிருந் தார். 'ஜாதி ஒழிப்பு' என்ற நூலில் அம்பேத் கரின் முடிவு என்னவெனில் ; ஜாதிகள், இந்து மதத்தின் மிக முக்கியமான பகுதி. ஜாதிகள், தர்ம சாஸ்த்ராஸ் – என்ற தர்ம சாஸ்திரங்கள் ஸ்மிருதிகள், புராணங்கள், இவற்றை ஆதார மாகக் கொண்டவை. தர்ம சாஸ்திரங்களை அழிக்காதவரை ஜாதிகளை அழிக்க முடியாது.

அண்ணல் அம்பேத்கர், இந்து மததிலுள்ள வேதங்களை சாஸ்திரங்களை இரண்டாகப் பிரித்தார். 1) சட்டங்களைச் சொல்லும் சாஸ்திரங்கள். 2) இன்னொன்று கொள்கைகளை சொல்லும் சாஸ்திரங்கள். கொள்கைகளை, வேதங்கள், உபநிஷங்கள் ஆகியவை தருகின்றன. அம்பேத்கரின் கணிப்பின்படி இவற்றிற்கு (கொள்கைகளுக்கு) நடைமுறையில் எந்த ஆதிக்கமுமில்லை. அவரது கணிப்பின்படி இந்துக்கள் ஒதுபோதும் தர்ம சாஸ்திரங்களை அழிக்க தயாராக மாட்டார்கள். அதனால் அவர் இந்து மதத்தை விட்டு வெளியேற முடிவு செய்துவிட்டார். ஆகவே தீண்டத்தகாதவர்கள், இந்து மதத்திற்குள் கண்ணியமானதொரு வாழ்க் கையை வாழ்ந்திட முடியும் என்ற நம்பிக்கை அவருக்கில்லை. ஜாதிய அடிமைத்தனத்திலி ருந்து தப்பிக்க ஒரே வழி இந்து மதத்தை விட்டு வெளியேறுவதுதான்.

"எந்த வழியில் விடுதலை" என்ற மாநாட்டு உரையில் அண்ணல் அம்பேத்கர் மதமாற்றம் குறித்து இரண்டு எண்ணங்களை முன் வைத்தார். ஒன்று யதார்த்த வாழ்வை கருத்தில் கொண்ட சிந்தனை. இன்னொன்று ஆன்மிக தேட்டங்களை முன் வைத்த சிந்தனை.

## யதார்த்த வாழ்வை கருத்தில் கொண்ட சிந்தனையில் – அண்ணல் அம்பேத்கர்

தலீத் மக்களின் அன்றாடம் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் அவலங்களைச் சுட்டிக் காட்டினார். தலீத்கள் ஜாதிய கட்டமைப்பில் ஆதிக்க ஜாதியினர் விரித்த காட்டுப்பாடுகளை சற்றே மீறிவிட்டாலும் குரூரமான தண்டனை களை அனுபவிக்க வேண்டி வருகின்றது.

அம்பேத்கர் இதனை வர்க்க பேத சண்டை என்றே அழைத்தார். அதில் அவர் தனது கருத்தை இப்படி விளக்கினார்.

"இந்த – ஜாதி சண்டை, இரண்டு தனி மனிதர்களுக்கோ, அல்லது இரண்டு குழுக் களுக்கோஇடையேயுள்ளசண்டைஅல்ல. இது இரண்டு வர்க்கங்களுக்கு இடையே யுள்ள சண்டை. இது ஒரு தனி மனிதர் மீது மற்றொரு தனி மனிதர் ஆதிக்கம் செலுத்துவதோ அல்லது ஒரு குழுவின் மீது இன்னொரு குழு அநியாயம் செய்வதோ என்றில்லை. இது ஒரு வர்க்கத்தின் மீது இன்னொரு வர்க்கம் ஆதிக்கம் செலுத்துவ தோடு சம்மந்தப்பட்டது.

அது ஒரு வர்க்கத்தின் மீது இன்னொரு வர்க்கம் அடுக்கடுக்காய் அநீதிகளை கட்டவிழ்த்து விடுவது சமந்தப்பட்டது. தொடர்ந்து இழைக்கப்படும் அநீதிகளெல் லாம் ஒரே ஒரு கொள்கையைத்தான் நிரூ பிக்கின்றன. அது இந்த வர்க்கச் சண்டை எங்கே தொடங்குகின்றது என்றால், நீங்கள் உயர் வர்க்கத்தாரிடம் சமத்துவத்தை வேண்டும் போதெல்லாம் தொடங்கு கின்றது. அவர்களுடைய (உயர் வர்க்கத்தா ருடைய) கோபங்களெல்லாம், நீங்கள் அவர்களுடன் சமம் எனச் சொல்வதிலி ருந்துதான் தொடங்குகின்றது. ஏனெனில் அது அவர்களுடைய சுய மரியாதையை ஊனப்படுத்துகின்றது" (என அவர்கள் அழுத்தமாக நம்புகின்றார்கள்)

அம்பேத்கர் பின்னர் இப்படிக் முடிக்கின்றார் :

"தீண்டத் தகாதவர்களுக்கும், தீண்டத்தகுந்த வர்களுக்குமிடையே உள்ள தகராறு நிரந்தரமா னது. அது முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஏனெனில் அவர்களின் கூற்றுப்படி உங்களை மிகவும் தாழ்ந்த நிலையில் வைத்துக்கொள்வது "சனாதனம்" (இது ஆதியோ அந்தமோ இல்லாதது.) இதில் எந்த மாற்றமும் வர முடியாது.

யாதார்த்த வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை வாழ்க்கை நடைமுறை பிரச்ச னையைப் பொறுத்தவரை தலீத்களிடம் (எண் ணிக்கை) பலமில்லாததே இந்தப் பிரச்சனைகள் தொடர்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம். மனிதர்கள் கொண்டிருக்க வேண்டிய மூன்று

பலங்களில் ஒன்றும், அவர்களிட மில்லை. அந்த மூன்று பலங்கள் எண்ணிக்கை பலம். (செல்வ பலம்) பண பலம், மன பலம்.

அவர்களிடம் (தலீத்களிடம்) எண்ணிக்கை பலமில்லை, கார ணம் அவர்கள் சிறுபான்மையி னர். அவர்கள் தங்களுக்குள் பல உள்ஜாதிகளாகப் பிரிந்து, கிராமப் புரங்களில் அங்கொன்றும் இங் கொன்றுமாகக்கிடக்கின்றார்கள்.

அவர்களிடம் (தலீத்களிடம்) பணபலம்/செல்வவளமுமில்லை. காரணம் அவர்களிடம் நில புலன்களில்லை. அவர்களிடம் வியாபார மில்லை. அதேபோல் கண்ணியமான வேலை களிலும் அவர்கள் இல்லை.

> “
> இந்த விவாதத்தின் வழி, அவர்கள், யதார்த்த வாழ்க்கைக்காக, தலீத்கள் மதம் மாறியே ஆக வேண்டும் என்பதை நியாயப்படுத்துகின்றார். இதனை யதார்த்தவாழ்த் தேட்டங்களின் அடிப்படையில், மத மாற்றம் அவசியம் என வலியுறுத்துகின்றார்.
> ”

அவர்களிடம் (தலீத்களிடம்) மனபல மில்லை. காரணம் அவர்கள், நூற்றாண்டுகளாக, அவமானம், அநீதி, ஒடுக்குமுறை இவற்றிற்கு ஆளாகி வருகின்றார்கள்.

தலீத்கள் தங்கள் சொந்தப் பலத்தையே நம்பி நிற்பார்கள் என்றால், அவர்கள் இந்த குரூரமான நிலையிலிருந்து தப்பிக்கவே முடியாது. மீள முடியாது.

அதன்பின் அவர் (டாக்டர் அம்பேத்கர்) அவர்களை (தலீத்களை) முஸ்லிம்களோடு ஒப்பிட்டார். இவர்களும் (முஸ்லிம்களும்) தலீத்களைப் போலவே சிறுபான்மையினர். ஆயினும் இந்துக்கள், முஸ்லிம்களை, தலீத் களைப் போல் நடத்திட துணிய மாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு முஸ்லிமிற்கும் அந்த முழு சமுதாயத் தின் பாதுகாப்புமுண்டு. ஒருவரைத் தொட்டால் அந்த மொத்த சமுதாயமும் உதவிக்கு வரும். கஷ்மீரிலிருந்து கன்னியாகுமரிவரை உள்ள முஸ்லிம்கள் அவரை ஆதரிப்பார்கள்.

ஆனால், இந்துக்கள் மிகச் சாதாரண காரணங்களுக்காகக் கூட தலீத்களை அவமான ப்படுத்துவார்கள், அடுக்காக குரூரமான தாக்கு தலை நடத்துவார்கள். ஏனெனில் அவர்களுக்குத் தெரியும், தலீத்களுக்கு உதவியாக யாரும் வரமாட்டார்கள். அவர்களுக்கு யாதொரு ஆதரவும் கிடையாது என்பது. தலீத்களும், அவர்களைக் கொடுமைப்படுத்துபவர்களும், இந்துக்கள் என்றே அறியப்படு வதால், இந்த விவகாரத்தில் வெளியே இருந்து யாரும் தலையிட விரும்புவதில்லை.

ஆகவே, தலீத்கள் தங்கள் பலத்தை வெளியிலிருந்துதான் பெற்றிட வேண்டும் என அம்பேத் கர் அழுத்தமாக நம்பினார்.

இந்த பலங்களை இதர மதத்தைச் சார்ந்த சமூகங்களுடன் இணைவதில் மூலமே பெற்றிட இயலும். அதாவது அந்த மதத் திற்கு மதம் மாறிட வேண்டும்.

இந்த விவாதத்தின் வழி, அவர்கள், யதார்த்த வாழ்க்கைக்காக, தலீத்கள் மதம் மாறியே ஆக வேண்டும் என்பதை நியாயப்படுத்துகின்றார் அம்பேத்கர். இதனை யதார்த்தவாழ்த் தேட்டங் களின் அடிப்படையில், மத மாற்றம் அவசியம் என வலியுறுத்துகின்றார்.

இந்த முடிவின் வழி பெறப்படும், உண்மை என்னவெனில், அவர்கள் எந்த மதத்திற்கு மாறுகின்றார்களோ அந்த மதம், எண்ணிக்கை பலமுள்ள மதமாக இருக்க வேண்டும். அது நம் நாட்டை பொறுத்தவரை அந்த மதம் இஸ்லாம் அல்லது கிறிஸ்தவம் அல்லது சீக்கிய மதம் இந்த மதங்கள்தாம் அவருடைய (அம்பேத்கருடைய) மனதில் இருந்தன.

> *அண்ணல் அம்பேத்கர் (அவர்) 1928 முதல் இஸ்லாத்தைப்பற்றியேபேசிக்கொண்டிருந்தார். அதேபோல், நாம் இங்கே இந்தக் கட்டுரையில் விவாதித்துக் கொண்டிருக்கும் உரையிலும் இஸ் லாத்தையே விவாதித்தார். இதனால் இஸ்லாமே அவர் தேர்ந்தெடுத்த மதமாக இருந்தது. (என்ற முடிவுக்கு நாம் வரலாம்)*

**ஆன்மீகத் தேட்டங்கள் ஒரு தனி மனிதனின் உள்ளார்ந்த மதிப்பை உயர்த்துவதாகும். இந்து மதத்தில் தனி மனிதனுக்கென எதுவுமில்லாத தால், அது எந்த மனிதனதும் ஆன்மீகத் தேட்டங்களையும் நிறைவு செய்யாது.**

அம்பேத்கரைப் பொறுத்தவரை ஒரு மதத்தின் உண்மையான நோக்கம், தனி மனிதனுடைய ஆன்மிக வளர்ச்சி, ஒரு தனி மனிதனின் பிறப்பு, சமுதாயத்தின் சேவைக்காக அல்ல. மாறாக அவனுடைய விடுதலைக்காக! ஒரு மதம் தனி மனிதனுக்கு முதன்மையான முக்கியத்துவத்தை கொடுக்கவில்லை என்றால், அந்த மதம் அவருக்கு (அம்பேத்கருக்கு) ஏற்புடையதல்ல. தனி மனிதனின் வளர்ச்சிக்கு மூன்று விஷயங்கள் தேவையானவை என அவர் கருதினார். அவை, அன்பு, சமத்துவம், சுதந்திரம் அல்லது விடுதலை. இந்து மதத்தில் இவற்றில் எதுவுமில்லை என அவர் கூறினார்.

தனிப்பட்ட முறையில் அம்பேத்கர், ஒரு மதத்தின் ஆன்மீகத் தேட்டங்களே, யதார்த்த வாழ்க்கையின் தேட்டங்களை விட முக்கியமானது எனக் கருதினார். எனினும் தலீத்களுக்காக அவர் யதார்த்த வாழ்க்கையின் தேட்டங்களை நிறைவு செய்வதையே அவர் வலியுறுத்தினார்.

அண்ணல் அம்பேத்கருடைய போக்கிலிருந்து நாம் புரிந்துகொள்ள முடிந்தது என்னவெனில், அவர் இந்தியாவிலிருக்கும் ஏதேனும் ஒரு மதத்தில்தான் இணைவார் என்றே பட்டது. அந்த மதம் தலீத்களுக்கு இந்து மதத்தின் ஒடுக்கு முறையிலிருந்து விடுபட தேவையான பலத்தைத் தருவதாக இருந்திட வேண்டும் என்றே எண்ணத் தோன்றியது.

“யோலா” பிரகடனம் – யோலாவில் 1936–ல் மகார் மாநாட்டில் செய்த பிரகடனம்

1935–இல் தான் வந்தது, என்றாலும், அவர் பல்வேறு வேளைகளிலும், மத மாற்றத்தையே, ஜாதிய ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை அடையும் வழியாக பரிந்துரைத்துக் கொண்டே இருந்தார். இதை அவர் நடத்தி வந்த “பகிஷ்கரத் பாரத்” என்ற பத்திரிகையின் வழி செய்து வந்தார்.

“பகிஷ்கிரத் பாரத்” பத்திரிகையில் பல அத்தாட்சிகள், அனைத்தும் அவர் இன்னொரு மதத்திற்கு மாறுவதை முடிவு செய்து விட்டார், ஜாதிய ஒடுக்கு முறைகளிலிருந்து விடுபட என்பதை நிலை நிறுத்தின.

மதம் மாறுதல் என்ற விவாதத்தைக் கடந்து அவர் எந்த மதத்திற்கு மாறுவது தலீத் மக்களுக்குச் சிறந்தது என்பதை விவாதித்தார். அதில் அவர் புத்த மதத்தையும், ஆரிய சமாஜ் ஆகியவற்றிற்கு செய்வதை பரிந்துரைக்கவில்லை. மாற்றாக கிருஸ்துவத்திற்கு அல்லது இஸ்லாத்திற்கு செல்வதிற்கே முதலிடம் தந்தார்.



“பௌத்தர்களாகவோ, ஆரிய ஜமாஜிகளாகவோ மாறுவதால் மேல் ஜாதியினர் கொள்ளும் மாச்சர்யங்களில் எந்த தாக்கமும் ஏற்படாது. அதனால் இந்த மதங்களுக்கு செல்வது புத்திசாலித்தனமாகத் தெரியவில்லை. நாம் இந்துக்களின் மாச்சர்யங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும், கிருஸ்துவத்திற்கோ அல்லது இஸ்லாத்திற்கோதான் மாறிட வேண்டும். இது எதிர்த்து கிளர்ச்சி செய்யும் சில சமுதாயங்களின் ஆதரவைப் பெற்றிட வகை செய்யும். இதன் பிறகுதான் தலீத்கள் மீது படிந்திருக்கும், தீண்டத்தகாதவர்கள் என்ற கறை கழுவப்படும்.”

**இரண்டாண்டுகளுக்குள் அவர் கிருஸ்தவத்தை தன் பட்டியலிருந்து அகற்றினார். இஸ்லாத்தை ஏற்பதில் நிலை கொண்டார்.**

அண்ணல் அம்பேத்கர் அவரது “பகிஷ்கிரித் பாரத்” இதழில் மார்ச்சு திங்கள் – 15, 1929, இல் தலையங்கம் ஒன்றை எழுதினார்கள். தலைப்பு – இந்து மதத்திற்கு ஒரு தாக்கீடு Notice to Hinduisim கொட்டை எழுத்துத் தலைப்பில் அம்பேத்கர் **“நீங்கள் மதம் மாற வேண்டும் என்றால் முஸ்லிம் களாக மாறுங்கள்”** என ஏவினார். "If you have to convert become Musalman"

புத்த மதம், ஆரிய சமாஜ் ஆகியவற்றிற்கு மாறுவதன் பயனில்லாமையை விளக்கிவிட்டு, கிருஸ்தவத்திற்கு மாறுவதும் பயனற்றது என அதையும் விட்டெறிந்தார். காரணம், கிருஸ்தவமும், இந்தியாவில் ஜாதிய கட்டமைப்பிலிருந்து தப்பிக்க முடியாது என்றார்.

தலீத் மக்கள் கிருஸ்தவத்திற்கு மாறுவதன் மூலம் அவர்களின் சமுதாய அந்தஸ்து கொஞ்சமும் மாறாது என்பதை அவர் (அம்பேத்கர்) அறிந்திருக்கலாம். (அறிந்திருந்தார்). கிருஸ்தவத்திற்கு மாறிய பின்னரும் அவர்கள் அதே தீண்டத்தகாதவர்களாக இருப்பார்கள் என அவர் விளக்கம் சொல்வார். முஸ்லிம் சமுதாயம் மட்டுமே அவர்களை (தலீத்களை) ஆதரிக்க முடியும். அவர்களுக்கு முழு பின்னணியைத் தந்திட இயலும். ஆனாலும் அவர் (அம்பேத்கர்) அந்நிலையில், நான் இப்போது இந்து மதத்திலிருந்து வெளியேறுவது என்று மட்டுமே முடி வெடுத்திருக்கின்றேன் என்றார். தான் எந்த மதத்தில் சேருவது என்பது பற்றி எந்த முடிவும் இன்னும் எடுக்க வில்லை என்றார்.

**ஆனால் அறிவுப்பூர்வமாக அவர் இஸ்லாத்தைத்தான் தெரிவு செய்தார் (தேர்ந்தெடுத்தார்) என்பது மிகவும் தெளிவாகவே தெரிந்தது. 1936 வரை இந்த நிலையே தொடர்ந்தது.**

இது, இந்துக்கள் தங்கள் மதத்தில் சீர்த்திருத்தைத் கொண்டு வந்திட, தரப்பட்ட ஓர் அழுத்தமாகக் கூட இருக்கலாம். இதை ஒரு உத்தியாகக் கூட (இஸ்லாத்திற்கோ அல்லது கிருஸ்துவத்திற்கோ மாறுவதை) அவர் பயன்படுத்தி இருக்கலாம். இது அவர் மகார் மாநாட்டில் அவருடைய நியாயமான எதிர்ப்பார்ப்பாகவுமிருந்தது. ஆனால், அவர்களிடமிருந்து (இந்துக்களிடமிருந்து) வந்த எதிர் வினையுமில்லை. இது அம்பேத்கரை முற்றிலும் விரக்தியில் ஆழ்த்தியது. அடுத்து டிசம்பரில் வந்த சத்தியா கிரக மாநாட்டில் அவர்கள் மிகவும் நரித்தனமாக சீர்த்திருத்தத்தை விட்டு விட்டார்கள். மகார் மாநாடு முடிந்தவுடனேயே அம்பேத்கர் மத மாற்றத்தைப் பற்றிப் பேசிட தொடங்கினார்.

> “ இந்தியன் கவுன்சில் சட்டம் (Indian Council Act.1909) 1909–இல் கொண்டு வரப்பட்டது. அதாவது சில நிருவாகக் கட்டமைப்பில் இந்திய மக்களின் பிரதிநிதித்துவத்தை சற்று அதிகப்படுத்தலாம் என்ற நிலை இந்தச் சட்டத்தால் கொண்டுவரப்பட்டது. அப்போது முஸ்லிம் லீக், தலீத்களையும், ஆதிவாசிகளையும், இந்துக்களாகப் பார்க்காமல் அவர்களுக்குத் தனி அந்தஸ்தைத் தந்திட வேண்டும் என்பதை நாசுக்காகச் சுட்டிக் காட்டியது. இந்தச் சூழ்நிலையில் அம்பேத்கர், இந்துக் கட்டமைப்பிலிருந்து வெளியேறி விடுவேன் எனக்கூறி இந்துக்களை சற்று வளைந்துக் கொடுக்கச் செய்யலாம் எனக் கருதினார். ஆனால் இந்துக்கள் இயோலா பிரகடனம் செய்யப்படும் வரை எதையும் கண்டுகொள்ளவில்லை. ”

## மோர்லி – மின்றே சீர்த்திருத்தத்தின் அடிப்படையில், Morely - Mintu Reforms (Indian Councils Act. 1909)

இந்தியன் கவுன்சில் சட்டம் (Indian Council Act.1909) 1909–இல் கொண்டு வரப்பட்டது. அதாவது சில நிருவாகக் கட்டமைப்பில் இந்திய மக்களின் பிரதிநிதித்துவத்தை சற்று அதிகப் படுத்தலாம் என்ற நிலை இந்தச் சட்டத்தால் கொண்டு வரப்பட்டது. அப்போது முஸ்லிம் லீக், தலீத்களையும், ஆதிவாசிகளையும், இந்துக்களாகப் பார்க்காமல் அவர்களுக்குத் தனி அந்தஸ்தைத் தந்திட வேண்டும் என்பதை நாசுக்காகச் சுட்டிக் காட்டியது.

இந்தச் சூழ்நிலையில் அம்பேத்கர், இந்துக் கட்டமைப்பிலிருந்து வெளியேறி விடுவேன் எனக் கூறி இந்துக்களை சற்று வளைந்துக் கொடுக்கச் செய்யலாம் எனக் கருதினார். ஆனால் இந்துக்கள் இயோலா பிரகடனம் செய்யப் படும் வரை எதையும் கண்டு கொள்ளவில்லை.

**எது எப்படியானாலும் அண்ணல் அம்பேத்கர் 1956 மத மாற்றத்தின் போது தேர்ந்தெடுத்த மதம் அவருடைய சொந்தக் கொள்கையான “யதார்த்தத் தேட்டங்களின் தேவை” கொள்கைக்கு எதிரான**

தானது முரணானதாக இருந்தது.

(முடிவில்) அவருடைய (அண்ணல் அம் பேத்கருடைய) ஆன்மீகத் தேட்டங்கள், யதார்த்த வாழ்வின்தேட்டங்களைவிட மேலோங்கிவிட்ட தாகப்படுகின்றது. புத்த மதம் அவர் மதம் மாறு வதற்கு தேர்ந்தெடுத்த ஒன்றாக ஆனது. ஆனால் அந்நிலையில் புத்த மதம், இந்தியாவில் இல்லாத ஒரு மதமாகிப் போனது. வட கிழக்கு பகுதியிலுள்ள மலைப் பாங்கான இடங்களிலும், (மேற்கு வங்கம் – அசாம், சிக்கிம், பிஸோரம், திரிபுரா) இமாலயப் பள்ளத்தாக்கு, ஜம்மு கஷ்மீரிலுள்ள லடாக் மாவட்டம், ஹிமாச்சல பிரதேசம் வடக்கு உத்திரப்பிரதேசம் ஆகிய இடங்களில் மட்டுமே அது தென்பட்டது. இங்கும் மிகக்குறுகிய எண்ணிக்கையிலான பௌத்தர்கள் வாழ்ந்தார்கள். அதுவும் கால காலமாக வாழ்ந்த பௌத்தர்களின் வாரிசுகளே அங்கே வாழ்ந்தார்கள்.

இது தலீத்களின் யதார்த்த வாழ்க்கையின் தேட்டங்களை எந்த நிலையிலும், திருப்தி அடையச் செய்யவில்லை. இந்த யதார்த்த வாழ்வின் தேட்டங்களைத் திருப்தி அடைய செய்வதையே அவர் (அம்பேத்கர்) காலமெல் லாம் பரிந்துரைத்தார். அம்பேத்கர் இரண்டு பத்தாண்டு புத்த மதத்தைப் படித்துவிட்டு விட்டுத்தான் இந்த முடிவை எடுத்தார்.

புத்த மதம் அவர்மீது ஏற்படுத்திய தாக்கம் என்பது பொது அறிவின் பாற்ப்பட்டது. அது அவருடைய இளமைக் காலத்தோடு சம்மந்தப் பட்டது. அப்போது புத்தரை அவருடைய வாழ்க்கை வரலாற்றோடு அவருக்கு அறிமுகப் படுத்தினார். ஒருவர் அப்போது அவருடைய மெட்ரிகுலேசன் தேர்வை தொடங்குவதற்கு அன்பளிப்பாகத் தரப்பட்ட நூலாக புத்தருடைய வாழ்க்கை வரலாறு இருந்தது.

அந்நூலை எழுதியவர் கெல்சுகர் குருஜி. அப்போது அவர் (கெல்சுகர் குருஜி) மிகவும் பிரபல்யமானதோர் சமூக ஆர்வலர். அவர்தான் அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். அது முதல் புத்த மதத்தின் தாக்கம் அம்பேத்கருடைய மனதில் அவ்வப்போது வந்துபோய்க் கொண்டி ருக்கும்.

(முக்தி கோன் பாத்) விடுதலை எவ்வழி? என்ற


அண்ணல் அம்பேத்கர் அவர்களின்
மதமாற்றம் – முழு வரலாற்றுப் பின்னணியும்
அறிந்திட படியுங்கள்

**“அண்ணல் அம்பேத்கர்
மத மாற்றம் பின்னணி என்ன?”**
– டி.எம்.மணி (எ) டி.எம்.உமர் ஃபாரூக்

வெளியீடு : **வேர்கள் பதிப்பகம்**
52/1, மண்ணடித் தெரு, மண்ணடி,
சென்னை – 600 001,
தொடர்புக்கு : 8148129887, 7401213374


உரையில் அவர் இஸ்லாத்தைத்தான் புகழ்ந்து பேசினார். அதன்மூலம் அவர் இஸ்லாத்திற்குத் தான் மதம் மாறுவார் என்ற எண்ணத்தை ஏற்படுத்தினார். ஆனால் அவர் தன்னுடைய உரையை முடிக்கும்போது, புத்தர் மகாபரினி பானாவில் கூறிய ஒன்றை சொல்லித்தான் முடித்தார். “அப்போ டீப்போ பாவா” இதன் பொருள் “நீயே உன்னுடைய விளக்காக இரு.”

யதார்த்த வாழ்க்கைத் தேட்டத்தில், தலீத்களுக்கு மதமாற்றம் உதவி செய்ய வேண்டும், (அதற்காக அவர்கள் இஸ்லாத்தை ஏற்றிடுவதே சிறந்தது) என்று தான் முன் வைத்த அறிவுப்பூர்வமான ஆதாரங்களைப் புறந்தள்ளி விட்டு, அவர் இறுதியாக புத்த மதத்திற்கு மாறியதில் எந்த ஆச்சர்யமுமில்லை.

(Source : DIB Yangshu Sarkar / AFP. MTJH-2018)

அண்ணல் அம்பேத்கர் புத்த மதத்தை ஏற்று ஏறத்தாழ 65 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும் இந்தியாவில் புத்த மதம் ஒரு சமூகக் கட்டமைப்பாகத் தலையெடுக்க வில்லை. ஆனால், அதே காலக்கட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் முன்றாவது தலை முறை இப்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

இந்த மூன்றாவது தலைமுறைக்கு, இரண்டு தலைமுறைகளுக்கு முன்னால் தாங்கள் தீண்டத் தகாதவர்களாக இருந்தோம் என்பது தெரியாது. ஏனெனில் அவர்கள் ஆதி தலைமுறையாக இஸ்லாமியத் தலைமுறையோடு இணைந்து, இரண்டறக் கலந்துவிட்டார்கள்.

இதை அண்மையில் முனைவர் திருமா வளவன் அவர்கள் தனது முனைவர் பட்டத்திற் காக மேற்கொண்ட ஆய்வில் தெளிவுபடுத்தி இருந்தார்.

நமது முனைவர் திருமாவளவன் அவர்கள் நடத்திய அணியாய் திரள்வோம் என்ற நூல் வெளியீடு மற்றும் ஆய்வரங்கத்திலும் இதே கருத்தை வெளியிட்டார் ஆனந்த் டெல்டும்டே.

## ஆனந்த் டெல்டும்டே ஓர் அறிமுகம்

இவர் வாழும் தலீத் சமூகத்தின் மிகச் சிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர், படைப்பாளர்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் கருத் துக்களை – எழுத்துகளைப் பல்வேறு வழிகளில் பரப்பிக் கொண்டிருப்பவர். கருத்துகளில் மாறுபட்டால் அதை நயம்பட இங்கிதமாக சொல்லிவிடுவார்.

அம்பேத்கர் அவர்களின் பேத்தியான ரமா அம்பேத்கரைதிருமணம்முடித்துக்கொண்டவர். இதனால் இவர் அம்பேத்கரின் நேரடி வாரிசு என சான்றோர்களாலும், அம்பேத்கரியவாதி களாலும் அழைக்கப்படுபவர்.

இவர் பிறந்தது 15, ஜூலை 1950–இல் மராட்டிய மாநிலத்தின் “ரஜிர்” என்னுமிடத்தில் பிறந்தவர். (B.Tech) Bachelor of Technology பி.டெக் படிப்பை விஷ்வேஸ்வரா தேசிய நுண்ணியியல் நிறுவனத்தில் கற்றார். Visveswara National Institute of Technology.

பின்னர் அஹமதாபாத்தில் எம்.பி.யே வியாபார நிர்வாக முதுநிலைப் பட்டம் Master of Business Management படித்தார். பட்டம் பெற்றார். இரண்டு (டாக்டர் பட்டங்கள்) முனைவர் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

பெட்ரோலியம் குறித்த விவகாரங்களில் இவர் நுண்மான் நுழை புலம் மிக்கவர். பெட்ரோலியம் தொடர்பான பொறியியலும், ஓர் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

இதனால் “பாரத் பெட்ரோலியம்” “பெட் ரோலியம் இந்தியா” போன்ற நிறுவனங்களில் உயர் பதவிகளில் இருந்தவர்.

பின்னர் இந்தியன் இன்ஸ்டியூட் ஆஃப் மேனேஜ் மெண்ட், காரக்பூர் இல் பேராசிரி யராகவும் பணியாற்றினார். பின்னர் கோவா விலும் பணியாற்றியவர்.

## மோடி அரசின் அடாவடியானது

மிகப்பெரிய தலீத் சிந்தனையாளரான இவர், ஆங்கிலத்தில் வெளிவரும் பல ஆராய்ச்சி இதழ்களிலும் கட்டுரைகளை எழுதி வருகின்றார். (eg) Economic and Political Weekly, Seminar, Outlook)

இவர் தலீத் மக்களின் விடுதலைக் காக தொடர்ந்து போராடி வருவதால் இன்றைய இந்திய பாசிச அரசு இவர் மீது பல பொய் வழக்குகளைப் புனைந்து சிறைப்பிடித்து வருகின்றது. ஆனால் சற்றும் சளைக்காமல் தனது போராட்டங் களை தொடர்ந்தார்.

ஆனால் இப்போது உயிர்க்கொல்லி சட்டமாகிய “ஊபா” (UAPAA) என்ற தடை செய்யப்பட்ட செயல்களின் தடுப்புச் சட்டத்தால் கைது செய்யப்பட்டு, பிணை இன்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த கைதுக்கு எந்த முகாந்திரமு மில்லை. மோடியின் நீதி மன்றங்கள் பிணை மறுத்துவிடுகின்றது.

இவரது கைதை கண்டித்து உள் நாட்டிலும், சர்வதேச அளவிலும் கண்ட னங்கள் எழுந்துள்ளன.

பல சர்வதேச மனித உரிமை அமைப் புகள் அவரை உடனேயே விடுதலை செய்யவேண்டும்எனக்கூறிஇந்தியபாசிச அரசுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளன. இன்றைய கொடுங்கோலர்கள் அதைச் செவிமடுப்பதாக இல்லை.

இவரது கைது அகில இந்திய அளவில் நமது நாட்டை தலைகுனிய செய்து விட்டது. சிறையிலும் மனந்தளராமல் தலீத் மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்து வருகின்றார்.

- MGM



# அமெரிக்க தேர்தல் பிரச்சாரத்தில் ஒரு நிகழ்வு

அமெரிக்காவின் முன்னாள் பிரதமர் பரக் ஹூஸைன் ஒபாமா ஜனநாயக கட்சியின் வேட்பாளருக்காக பிரச்சாரம் செய்து வந்தார்.

ஒரு கட்டத்தில் கறுப்பின இளைஞர்கள், வெள்ளை நிற காவல்துறையில் சுட்டுக் கொலை செய்யப்பட்டு வருவதை கோரமாகச் சுட்டிக் காட்டினார். அப்போது அரங்கத்திலிருந்தவர்களை நோக்கி ஒரு கேள்வியை வைத்தார் ஒபாமா. இது தானா நம்மவர்களை – (கறுப்பின இளைஞர்களை நடத்திட வேண்டிய முறை? என்பதே அந்தக் கேள்வி.)

இதற்கு அரங்கத்திலிருந்த ஒரு பத்திரிகையாளர் இப்படிக் கேட்டார்...

நீங்கள் உங்கள் ஆட்சியின்போது (2009 – 2017 வரை) பல ஆயிரம் முஸ்லிம்களை – குழந்தைகளை, பெண்களை, முதியவர்களை, இளைஞர்களை – குண்டு போட்டுக் கொலை செய்தீர்களே? அதற்கென்ன சொல்லுகின்றீர்கள் என்றார்? – AlJazeera : Ty : 1-11-2020

இன்னொரு நிகழ்வு :

அதேபோல் ஓர் கல்லூரியில் உரையாற்றும் போது, ஜனநாயகவாதிகள் (Democrats) எப்போதுமே முஸ்லிம் நாடுகளுடன் மிகவும் நேசமாகவே நடந்து வருகின்றார்கள் என்றார்.

அங்கே ஒரு மாணவி எழுந்து, நீங்கள் முஸ்லிம் நாடுகளில் ஜனநாயகத்தைப் பேசுவதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈரானின் ஆட்சியர்களை குறிவைத்துத் தாக்கிக் கொண்டே இருந்தீர்கள். பாகிஸ்தானையும் தீவிரவாத நாடு எனச் சொல்லிக்கொண்டே இருந்தீர்கள்.

அங்கேயும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி ஒன்றே இருக்கின்றது. ஒரு பக்கம் பாகிஸ்தானின் ஆட்சியாளர்களுக்கு கோடிக் கணக்கான டாலர்களை கொட்டிக் கொடுத்தீர்கள். இன்னொரு பக்கம் அதனை தீவிரவாத நாடு என்றீர்கள்?

இது ஜனநாயகவாதிகளுக்கு அழகா? என்றார்.

ஒபாமா அந்த மாணவியின் கூர்மையான அரசியல் பார்வையைப் பாராட்டினார். ஆனால், அந்த மாணவியின் கேள்விக்கு பதில் சொல்லாமல் வேறு விவகாரங்களை விவாதித்தார். (IBID)

**கறுப்பின இளைஞர்களை ஒபாமாவின் ஆட்சியின்போதும் வெள்ளை நிறவெறி காவல் துறையினரால் நடுத் தெருவில், நடுப் பகலில் சுட்டுக் கொலை செய்தார்கள். அப்போது ஒபாமாவால் செய்ய முடிந்தது எதுவுமில்லை. அப்போது அவர் கூறியது, என்னுடைய மகனாகவே இருந்தாலும், இதுதான் நடந்திருக்கும்.**

**இவற்றையெல்லாம், வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு நிரம்பவே அப்போது 2009 முதல் 2017 வரை தந்திருக்கின்றோம்.**

**அமெரிக்காவின் மிகப்பெரிய சொல்லேர் உழவன் – ஜான் எஃப் கென்னடிக்குப்பின், மிகச்சிறந்த சொல்லேர் உழவன் பரக் ஹூஸைன் ஒபாமாதான்.**

# கஷ்மீர் கோயில்கள் இடிக்கப்பட்டனவா..?

இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் நான் 8.5.91 அன்று 'கஷ்மீரில் இந்து கோயில்கள்' என்றொரு கட்டுரையை எழுதினேன்.

இந்தக் கட்டுரை எஸ்.பி.அம்பாஸ்தா, சோம் நாத் தார், ராதிர் ஜெயின் ஆகியோர் இடையே பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

இவர்கள் எனது கட்டுரையைப் பல்வே றாகப் பழித்துரைத்தனர்.

கஷ்மீரில் களைகட்டி நிற்கும் அடிப்படை வாதத்திற்குப் பணிந்து போய்விட்டேன் நான் என்றும், சாய்வு நாற்காலியில் ஓய்ந்திருக்கும் ஒருவரின் கடிவாளமற்ற கற்பனைச் சித்திரமே எனது கட்டுரை என்றும்,

'மதச் சார்பற்றவர்கள்' என்ற போர்வையில் நாடகமாடும் நபர் ஒருவரின் நாடகமே அந்தக் கட்டுரை என்றும், பழிமொழிகளை என்மீது பாய்ச்சினர்.

இவற்றைச் செவிமடுத்ததும் கஷ்மீர் நோக்கிப் பயணமானேன்.

நான் மேற்கொண்ட பயணம், நேரடி விசா ரணை ஆகியவற்றின் அடிப்படையில் ஆணை யிட்டுச் சொல்வேன். 'எனது கட்டுரையில் இடம் பெற்ற அத்தனையும் அப்பட்டமான உண்மைகள்''

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் மூத்த முக்கிய மான துணைத் தலைவர் ஒருவர் என்னிடத்தில் ஒரு பட்டியலைத் தந்தார்.

அன்பார்ந்த வாசகர்களே!

காலாகாலமாக இந்த நாட்டின் பாசிஸ்ட்டுகளான சங்கிகள், கஷ்மீர் பற்றி பல அவதூறுகளைப் பரப்பி வருகின்றார்கள். அவற்றுள் ஒன்று கஷ்மீரிலுள்ள பல கோயில்கள் முஸ்லிம்களால் இடிக்கப்பட்டுவிட்டன என்பதே.

இதன்மூலம் இங்கு வாழும் முஸ்லிம் அல்லாதவர் களை கஷ்மீர் மக்களுக்கு எதிராகத் திருப்பினார்கள். இதனால், கஷ்மீர் மக்கள் மீது, என்ன அடக்குமுறை யை கட்டவிழ்த்துவிட்டாலும், நாட்டின் இதரப் பகுதியில் வாழும் மக்கள் அதைக் கண்டுகொள்வதில்லை. இந்நிலையில் தேசிய விருதுகள் பல பெற்ற தேசிய பத்திரிகையாளர் ஆ.எ. வர்கீஸ் அவர்கள், ஒரு கள ஆய்வை மேற்கொண்டு ஒரு கட்டுரையை எழுதினார். அதனை இங்கே இடம்பெற செய்கின்றோம். இதுவும் 1990–களில் இடம்பெற்ற விவாதம் அன்றைய நாட்களை விட இன்றைக்கு கஷ்மீர் அதிக அளவில் மக்கள் மன்றத்தில் கூர்ந்து கவனிக்கப்படுகின்றது.

அன்றைக்கு கஷ்மீர் மக்களுக்கு எதிராக இருந்த மனநிலை மிகப்பெரிய அளவில் மக்கள் மன்றத்தில் மாறி இருக்கின்றது. ஆகவே அன்றைக்கு இன்றிலிருந்து 30 ஆண்டுகளுக்க முன் கட்டவிழ்த்திட்ட பொய்ப் பிரச் சாரத்தை மக்கள் மன்றத்தில் வைப்பது மக்களிடையே கஷ்மீர் நிகழ்வுகள் பற்றிய தெளிவான பார்வை ஒன்று பதியும்.

இன்று மொத்த அழிவையே எதிர்நோக்கி நிற்கும் கஷ்மீர் மக்களின் பிரச்சனைகளை மக்கள் புரிந்திட வகை செய்யும். இதனை வாசிப்பவர்கள் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களிடம் கொண்டு சேர்த்திட வேண்டும் என அன்பாய் கேட்டுக் கொள்கின்றோம்.

– மு. குலாம் முஹம்மத்.



அந்தப் பட்டியலில் "1990 ஆம் ஆண்டு கஷ்மீர் பயங்கரவாதிகளால் பழுதாக்கப்பட்ட மற்றும் எரிக்கப்பட்ட கோயில்கள்" எனத் தலைப்பிடப்பட்டிருந்தது.

இந்தப் பட்டியல் –

ஸ்ரீநகரிலுள்ள கணபதியார் கோயில் இடித்து வீழ்த்தப்பட்டுவிட்டது என்று குறிப்பிட்டுக் கூறியது.

அதேபோல் தாஷ்மணி கோயில், அதோடு சார்ந்த தர்மசாலை ஆகியவை நெருப்பிடப்பட்டு விட்டன என்றும் கூறியது.

இத்தோடு மாதா கிர்பவானி மந்திர் என்ற கோயிலும் தீக்கிரை ஆக்கப்பட்டுவிட்டது என்று சோம்நாத்தர் அறிவித்தார். இதை பி.டி.ஐ.யும் PTI என்ற செய்தி நிறுவனமும் கூறி இருப்பதாகக் குறிப்பிட்டார்.

பட்டியல் கைவரப் பெற்றோம்

நான் இத்தனை கோயில் களையும் நேரில் சென்று பார்வையிட்டேன்.

அனைத்திந்திய அடிப்படை யிலும் இவை கீர்த்தி மிக்கவை. இவை எதுவுமே எந்தப் பாதிப்பு களுக்கு உள்ளாகவில்லை. இருந்த படியே இருக் கின்றன.

கணபதியார் கோயில் பூசாரியை நான் நேரில் விசாரித்தேன்.

அவர், "இந்தக் கோயிலுக்கு எதுவும் நேர்ந்து விடவில்லை. 200 ஆண்டுகளாக இருந்துவரும் இந்தக் கீர்த்திமிகு ஆலயத்தில் பூஜா புனஸ்கா ரங்கள் தங்கு தடையின்றி நடந்து வருகின்றன" எனக் குறிப்பிட்டார்.

இந்தக் கோயில் எல்லைக்குள் மத்திய சிறப்புப் பாதுகாப்புப் படையின் முகாம் ஒன்று இருக்கின்றது.

இந்த முகாமைத்தான் போராளிகள் 1990–இல் தாக்கினார்கள். இதனால் கோயிலுக்கு எந்தப் பாதிப்புமில்லை என்பதைக் கோயில் பூசாரி மோகன்லால் றிலூ அழுத்தமாகக் கூறினார்.

பூசாரி மோகன்லால் றிலுவோடு இருந்த ஏனையவர்களும் இந்தக் கோயில் எப்போதும் போராளிகளின் இலக்காக இருந்ததில்லை. மத்திய சிறப்புப் பாதுகாப்புப் படையின் முகாம் மட்டுமே போராளிகளின் இலக்காக இருந்திருக் கின்றது என்பதை உறுதிபடுத்தினார்.

இந்தக் கருத்தையே மத்திய சிறப்புப் பாதுகாப்புப் படையினரும் கூறினர்.

'புத்துஷா சவ்க்'–கிலுள்ள 'தாஷ்மணி அக்காரா' எந்தத் தாக்குதலுக்கும் எப்போதும் ஆளானதில்லை. வருடந்தோறும் நடைபெறும் அமர்நாத் யாத்திரை எப்போதும்போல் நடைபெற்று வருகின்றது.

இங்கேயும் மத்திய சிறப்புப் பாதுகாப்புப் படையினர் முகாம் அமைத்துள்ளனர். இந்த முகாம் ஓரிருமுறை தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளது.

> "1991–ஆம் ஆண்டு MNP சார்பில் வெளியிடப்பட்ட ஈத் மலரிலிருந்து எடுக்கப்பட்டது. அதுபோது அது MNP என பெயர் சூட்டப்படாத காலம்."

நான் அங்கிருக்கும்போதே குண்டுவீச்சு ஒன்று நடந்ததாக கேள்விப்பட்டேன். மீண்டும் அங்கு சென்று பார்த்தேன்.

கோயிலுக்கோ, அதில் அ மை மக் க ப் ப ட் டு ள் ள சிலைகளுக்கோ தர்ம சாலைக்கோ எந்தப் பாதிப்பும் இல்லை.

ஆனால், கோயிலின் வெளி வாசலுக்கு வெளியே சில துப்பாக்கிக் குண்டுகளின் சிதறல்கள் பட்டிருந்தன.

இங்கேயுள்ள அமரேஷ்வர் மகாதேவ் மந்திர் என்ற கோயில் மகத், மகாதேவ் கிரி அறக் கட்டளையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இந்த அறக்கட்டளையின் மேலாளர் பூரான் ஷா என்பவரைக் கேட்டேன்.

அவர், கோயிலில் நித்திய பூஜை எந்தத் தடையுமின்றி நடைபெற்று வருகின்றது என்றும், கோயிலும், கோயில் சார்ந்த இடமும் எப்போதும் தாக்குதலுக்குள்ளாவதில்லை என்றும், கோயில் எப்போதும் போராளிகளின் இலக்காக இருந்ததில்லை என்றும் உறுதிபடக் கூறினார்.

மத்திய சிறப்புப் பாதுகாப்புப் படையினரின்

முகாம் மட்டுமே போராளிகளின் இலக்காக இருந்தது என்றும் குறிப்பிட்டார்.

இந்தக் கோயில் கஷ்மீர் போராளிகள் தலைவர் யாசின் மாலிக்கின் பாரம்பரிய வீட்டுக்கு பக்கத்தில் இருக்கின்றது என்றாலும் இந்தக் கோயில் எந்த நிலையிலும் எந்தத் தாக்குதலுக்கும் ஆளானதில்லை.

இந்தக் கோயில் அல்லாமல் ஸ்ரீநகர் பகுதியிலுள்ள வேறு எந்தக் கோயிலாவது போராளிகளின் தாக்குதலுக்கு அல்லது வேறு வகையான இடிமானங்களுக்கு ஆளாகியுள்ளதா? என்று கேட்டேன், மேலாளர் பூரான்ஷாவை.

'அப்படியேதுமில்லை' என்று அடித்துக் கூறிவிட்டார்.

அங்கிருந்த ஓரிரு பண்டிட்கள், ஜீலம் நதியின் இருமருங்கும் அமைந்திருந்த பல்வேறு கோயில்களைச் சுட்டிக் காட்டினார். இந்தக் கோயில்கள் எந்தப் பாதுகாப்புமின்றிக் கிடந்தன.

> “
> **ஆதாரங்களோடு நாம் செய்திகளைச் சொல்லுகின்றபோது சிலர் இப்படிக் கேட்கின்றனர்**
>
> **ஜம்மு மற்றும் கஷ்மீர் நிர்வாகம் ஏன் இன்னும் கோயில்கள் தாக்கப்பட்டன என்ற செய்தியை மறுக்கவில்லை என்பதே அந்தக் கேள்வி?**
>
> **உண்மை என்னவெனில் கோயில்கள் தாக்கப்பட்டன என்ற செய்தி கஷ்மீருக்கு வெளியேதான் விற்பனையாகின்றன. கோயில்கள் இருக்குமிடங்களிலோ, ஸ்ரீநகரிலோ இப்படிப் பேசுவார் யாருமில்லை.**
> ”

அதேநேரத்தில் இவை எந்தத் தாக்குதலுக்கும் எப்போதும் உள்ளானதில்லை என்றார்.

எந்தப் பாதுகாப்பும் இல்லாத கோயில்களே தாக்கப்படவில்லை என்பதை வைத்துப் பார்த்திடும்போது கோயில்களை தாக்கும் எண்ணம் எப்போதும் போராளிகளுக்கு இருந்ததில்லை என்பதும்,

அவர்கள் பாதுகாப்புப் படையின் முகாம்களையே தாக்கியுள்ளனர் என்பதும் தெளிவாகத் தெரியவரும்.

எங்களிடம் சுட்டிக்காட்டப்பட்ட கோயில்களில் மிகவும் முக்கியமானவை :

1) பளபளப்பானவேலைப்பாடுகள்கொண்ட கடாஹார் மந்திரி. (இது பழைய தலைமைச் செயலகத்தின் வளாகத்திற்குள் அமைந்துள்ளது.

2. மிலியார் சிவமந்திர்.

3. கட்லிஸ்வர் சிவமந்திர் ஆகியனவாகும்.

இந்தக் கோயில்கள் எதற்கும் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. ஆனாலும் இவை எந்தத் தாக்குதலுக்கும் உள்ளாகவில்லை.

இந்தக் கோவில்களைப் பார்வையிட்ட பின் நாங்கள் அங்கிருந்து 22 மைல்கள் காரில் சென்றோம்.

வழியில் ஸ்ரீஇராஜேஸ்வரி ஸ்ரீகிர்பிவானி ஸ்ரீமந்திர் என்ற பழம் பெருமைமிக்க கோயிலைக் கண்டோம். இது 1612ல் புனரமைக்கப்பட்டது என்றாலும் வேதகால இலக்கியங்களோடு தொடர்புடையது. துல்முல்லா என்ற கிராமத்தில் அமையப்பெற்ற இந்தக் கோயில் ஒரு பெரும் புனித ஸ்தலமாக கருதப்படுகின்றது.

இந்தக் கோயிலைச் சுற்றி விசாலமானதோர் மைதானம் உள்ளது. அதனுள் தர்மசாலை ஒன்றும் உள்ளது.

இந்தத் தர்மசாலை – இந்த மைதானம் இரண்டையும் மத்திய சிறப்புக் காவல் பிரிவினர் தங்களுடைய முகாம்களாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஏப்ரல் மாதம் 4–ம் தேதி இந்தச் சிறப்புக் காவல் படையினர் ஒரு ராக்கெட் தாக்குதலுக்கு இலக்காக்கினர். இந்த ராக்கெட் கோயில் கருவறையிலிருந்து 200 மீட்டர் தொலைவிலேயே வீழ்ந்தது.

கோயிலின் விரிந்த வளாகத்தின் வெளிச் சுவர்கள் சற்றுப் பாதிக்கப்பட்டிருந்தன.

கோயிலும் அதிலுள்ள நீர்ச்சுனையும் எந்தப் பாதிப்பிற்கும் உள்ளாகவில்லை என்பது மட்டுமல்ல, அவை எல்லாவிதமான தாக்குதலுக்கும் அப்பாற்பட்டு நின்றன.

இந்த கோயிலுக்கு வெகுதூரத்திற்கு அப்பால் அமைந்த வளாகத்தின் வெளிச்சுவர்கள்

பாதிப்புக்குள்ளானதைக் கூட அங்கு உள்ள முஸ்லிம்கள் பொறுத்துக் கொள்ளவில்லை.

முஸ்லிம்கள் ஊர்வலங்களை நடத்தி தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளனர்.

ஆதாரங்களோடு நாம் செய்திகளைச் சொல்லுகின்றபோது சிலர் இப்படிக் கேட்கின்றனர்

ஜம்மு மற்றும் கஷ்மீர் நிர்வாகம் ஏன் இன்னும் கோயில்கள் தாக்கப்பட்டன என்ற செய்தியை மறுக்கவில்லை என்பதே அந்தக் கேள்வி?

உண்மை என்னவெனில் கோயில்கள் தாக்கப்பட்டன என்ற செய்தி கஷ்மீருக்கு வெளியே தான் விற்பனையாகின்றன. கோயில்கள் இருக்குமிடங்களிலோ, ஸ்ரீநகரிலோ இப்படிப் பேசுவார் யாருமில்லை.

கோயில்கள் இருக்குமிடங்களிலும், ஸ்ரீநகரிலும் உண்மை எல்லோருக்கும் தெரிந்து இருப்பதால் அங்கு பொய் விலை போகவில்லை.

எனினும் நான் ஸ்ரீநகரிலிருக்கும் அதிகாரியிடம், “கோயில்கள் தாக்குதலுக்கு உள்ளாகின என வெளியே பேசப்படுகின்றது. நீங்கள் ஏன் அந்தச் செய்தியை மறுக்கவில்லை” எனக் கேட்டேன்.

அதற்கு அவர்கள், “தாக்குதல்களுக்கு உள்ளானதாகப் பேசப்படும் கோயில்களின் பெயர்கள் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளனவா” எனக் கேட்டனர்.

“இல்லை!” என்றேன் நான்.

“வெற்று வதந்திகளைப் பொருட்படுத்த தேவையில்லை” என்று கூறிவிட்டனர்.

கோயில்கள் தாக்குதலுக்குள்ளாகின என்ற குற்றச்சாட்டை இனிமேல் பரப்ப விரும்புபவர்கள் அவற்றை ஸ்ரீ நகர் நிர்வாகத்திடம் முதன்முதலில் சொல்லட்டும்.

இன்னும் சொல்வதானால் ஸ்ரீநகர் தாசில்தார் பல கோயில்களை நேரில் சென்று பார்த்துள்ளார்.

அவரும் எந்தக் கோயிலும் எந்த விதமான தாக்குதலுக்கும் உள்ளாகவில்லை என்ற உண்மையை உறுதிப்படுத்துகின்றார். - MGM


இறைவனின் அழகியத் திருப்பெயரால்

நியூ மலேஷியா டிராவல் சர்வீஸ்



பதிவு எண் : 2015/33/018/10098/ANSP
அரசு அங்கீகாரம் பெற்றது

ஹிமை: S.B.S. பஷீர்

•பாஸ்போர்ட் ஆன்லைன்
•விமான டிக்கெட்
•விசா சர்வீஸ்
•ECNR & PCC
•எம்பஸி அட்டெஸ்டட்
•GCC மெடிக்கல் சர்வீஸ்

ECR நீக்கி ECNR மாற்றிட

கிளை அலுவலகம்:
12, கலைமகள் வீதி, MRF டயர்ஸ் பின்புறம்)
7வது குறுக்குத் தெரு,சுப்பையா நகர்,
பாஸ்போர்ட் அலுவலகம் அருகில்,
புதுச்சேரி - 605001.
செல்: 9894303789 | 9445907389

68, பெரிய கடை தெரு, பரங்கிப்பேட்டை,
கடலூர் மாவட்டம் - 608502
E mail ID: newmalaysiapno@gmail.com |Web : www.newmalaysiatravelservice.com

தொலைப்பேசி:
04144 243267
04144 243440

செல்:
7708803789
7708503789

# பெண்களின் நிலை ஓர் ஒப்பாய்வு..!



வேண்டுமென்றே திரித்துக் கூறுதல், அபாண்டங்களைச் சுமத்துதல், அவதூறுகளை கண்ணை மூடிக்கொண்டு திரித்துக் கூறுதல் இவற்றிற்கு இஸ்லாம் இன்ற ளவும் இலக்காகி வருகின்றது.

இந்த அபாண்டங்கள், அவதூறுகள் இவற்றை இடைவிடாமல் அள்ளி வீசுபவர்கள் மேலை நாட்டவர்கள்தாம்.

இந்த அடாத செயல்களை அவர்கள் பலநூறு ஆண்டுகளாக சளைக்காமல் செய்து வருகின்றார்கள்.

சிலுவைப் போர்களில் கட்டிக்கொண்ட தோல்விக்கு பழிதீர்க்க ஐரோப்பா கண்டுபிடித்த ஒரே மருந்து இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் அவதூறுகளை அள்ளி வீசுவதுதான்.

முஸ்லிம்களை எதிர்கொள்ள முடியவில்லை. தோற்றுப் போய்விட்டோம் என்ற பாங்கில் அவர்கள் எழுதித்தந்த தோல்விப் பத்திரங்களே அந்த அவதூறுகள்.

மேலை நாட்டவர்கள் – ஐரோப்பியர்கள் இவர்களெல்லாம் அனுதினமும் அள்ளித் தெளித்த அபாண்டங்களுக்கு முஸ்லிம்களும் பெரிய அளவில் பலியாகிவிட்டார்கள்.

மேலைநாட்டுக் கலாச்சாரங்களில் மோகங் கொண்டு அலையும் முஸ்லிம்களில் பலரும் இந்தப் பொய்ப் பிரச்சாரங்களால் பாதிக்கப் பட்டு விட்டார்கள்.

மேலை நாட்டவர்களைப் போலவே இந்த முஸ்லிம்களும் இஸ்லாம் வாழ்வின் எல்லா துறை களுக்கும் வழிகாட்டும் ஒரு மார்க்கம் என்பதை மறந்துவிட்டார்கள். அல்லது புரிந்துகொள்ள மறுக்கின்றார்கள்.

நாத்திகம் மேலை நாட்டவர்களின் பிடரி நரம்புகளில் ஏறி அமர்ந்து பயணம் செய்யத் தொடங்கியபோது, அவர்கள் ஒரு பெரும் குழப்பத்திற்கு ஆளானார்கள்.

இந்தக் குழப்பம் அவர்களை உண்மைகளைக் கண்டுகொள்ள முடியாதவர்களாக்கிவிட்டது. ஏற்கெனவே இஸ்லாத்தின் மீது இருந்த காட்பு, அவர்களின் கண்களைக் குருடாக்கிவிட்டது.

இவற்றால் அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப அடிப்படைகளைக் கூட அறிந்திடவில்லை. ஆனால் அவதூறுகளைக் மட்டும் அள்ளித் தெளித்துக் கொண்டே இருந்தார்கள்.

இந்த அவதூறுகளுக்கு ஆளாகிவிட்ட பலர் "இஸ்லாத்தில் பெண்களுக்கு ஆத்மா என்றொன்று இல்லை" என்று அபாண்டத்தை

எடுத்துப் போட்டார்கள்.

## கிருஸ்தவ உலகில் பெண்கள்

"மந்தி பழித்ததாம் மயிலைப் பார்த்து ஆடத் தெரியுமா? உனக்கு" என்று. அதேபோல்தான் சிலர் கண்ணாடி கூட்டுக்குள் இருந்துகொண்டு கல்லெறிகின்றார்கள் இஸ்லாத்தின் மீது.

ஆமாம் இஸ்லாத்தில் பெண்களுக்கு ஆன்மா என்றொன்று இல்லை என்பவர்கள் இந்தத் தவறைத்தான் செய்கின்றார்கள்.

பெண்களை "பேய்" என்றும் பிசாசுகள் என்றும் பழித்தவர்கள் இந்தப் பழியைச் சுமத்தியே அவர்களின் உயிரைப் பறித்தவர்கள், பெண்களுக்கு உயர்வையும் இலட்சிய உற்சாகத்தையும் தந்த இஸ்லாத்தைப் பார்த்து பழி சொல்வது மேலே நாம் சொன்னவற்றை உண்மைப்படுத்துகின்றன.

கிருஸ்துவத்தின் பெயரால் பெண்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளை எழுத ஏடு தாங்காது.

ரோமர்கள் அதிகாரத்தின் உச்சியிலே நின்று கொண்டிருந்தபோது அவர்கள் பெண்களுக் கிழைத்த கொடுமைகளை எழுதினால் ஏடுகளும் கண்ணீர் சிந்தும்.

கொதிக்கும் எண்ணெய்யை அவர்களின் தளிர் மேனிகளில் ஊற்றி வேகவைத்து வேடிக் கைப் பார்த்தார்கள். அவர்களை வேகமாக ஓடும் குதிரைகளின் வால்களோடு இறுகப் பிணைத் துக் கட்டி, அந்தக் குதிரையை ஓடவிட்டுப் பார்த்துக் கும்மாளம் போட்டார்கள். நெருப்புக் குண்டங்களை வளர்த்து அவற்றின் மேல் கைகளையும், கால்களையும் கட்டி தூக்கி வீசினார்கள்.

இவையெல்லாம் என்றோ நடந்த கொடுமைகள் அல்ல, மாறாக இவையெல்லாம் 17ஆம் நூற்றாண்டிலும் 18ஆம் நூற்றாண்டிலும் நடந்தவைதான்.

இந்த 17ஆம் நூற்றாண்டில்தாம் ஆன்றோர் களின் அவை, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப் பொன்றை வழங்கிற்று. ஆமாம், பெண்களுக்கு "ஆன்மா என்றொன்று இல்லை" என்ற தீர்ப்பு அப்போதுதான் வழங்கப்பெற்றது.

இடைக்கால வரலாற்றில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை டாக்டர் ஆஸ்பிரிங் என்பவர் தான் எழுதிய நூலில் கோரமாக விளக்கி இருக்கின்றார்.

அவர் கூறுகின்றார் :

பெண்களை சித்திரவதைப் படுத்துவதற் கென்றே கி.பி. 1500 களில் ஒரு தனி குழு அமைக்கப்பட்டிருந்தது. பெண்களைச் சித்திர வதைச் செய்வதற்கும், அவர்களை அணுஅணு வாக வதைத்தும் கொலை செய்வதற்கான வழிமுறைகளைக் கண்டெடுப்பதற்கென்ற ஒரு கவுன்சில் குழு அமைக்கப்பட்டிருந்தது. இந்தக் குழு கண்டெடுத்துத் தந்த யுக்திகளின் விளைவாக 90 லட்சம் பெண்கள் எரிக்கப்பட்டார்கள்.

ஆண்கள் பெண்களின் மேல் இழைத்த இந்த அநீதிக்கு முன் உலகம் தலைகுனிந்தது. வரலாற்றில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளில் இதனை விஞ்சி எதுவுமில்லை. கிருஸ்தவம் கோலோச்சிய காலங்களில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு அளவே இல்லை.

இஸ்லாத்திற்கு முந்தைய காலக்கட்டத்தில் பெண்களின் நிலைமை கொடுமையும் குரூரமும் நிறைந்தனவாகவே இருந்தன.

எந்த மதமும் பெண்களுக்கு சமத்துவத்தை வழங்கிடவில்லை.

எந்த மதமும் அவர்களுக்குச் சொத்துக் களில் பங்கு தந்திடவில்லை. கணவனின் சொத் துக்களிலும் அவளுக்குப் பங்கு கிடைக்கவில்லை. பெற்றோர்களின் சொத்துக்களிலும் அவர்களுக் குப் பங்கு கிடைக்கவில்லை.

இவை மட்டுமல்ல, இஸ்லாத்திற்கு முன் பெண்கள் ஒருவித தீமை, சுமை என்பதாகவே பார்க்கப்பட்டார்கள். ஏன் அவர்களை அவமானச் சின்னங்கள் என்றே கருதினார்கள். உலகெங்கிலும் அவள் மிருகங்களைப் போலவே நடத்தப்பட்டாள். அவளது சம்மதத்தை அவளைப் பாதிக்கும் எந்த விவகாரங்களிலும் பெற்றிட வேண்டும் என அவர்கள் எண்ணிட வில்லை. திருமணங்களில் அவளுக்கும் இட முண்டு என அவர்கள் கருதிடவில்லை. வேண்டும் போது அவளை வைத்துக் கொள்வார்கள்.

வேண்டாதபோது அவர்களை எடுத்து வீசி விடுவார்கள். அவர்களிடம் பணமும், மன முமிருந்தால் வைத்துக் கொள்வார்கள். இல்லையேல் விட்டுவிடுவார்கள் என்பதுதான் பெண்களின் நிலை. பெண்களுக்கென எதுவுமில்லை. அவர்கள் எந்தத் தனியுரிமைக்கும் சொந்தக்காரரர்களாக இருந்ததில்லை. அவர்கள் சொத்துக்களை வைத்துக்கொள்ள முடியாது. குடும்பங்களில் அவர்களை ஒரு அங்கமாகவே கருதுவதில்லை. ஏனெனில் அவர்களை வாரிசு களாகவே எடுத்துக்கொள்ளவில்லை. அதனால் அவர்களுக்குச் சொத்துக்களிலும் பங்கு கொடுப் பதில்லை.



அரேபியாவில் இஸ்லாம் அந்த மக்களுக்கு அறிமுகம் ஆவதற்கு முன், அவர்கள் ஆட்படுத் தப்பட்ட அவலங்களுக்கு அளவே இல்லை. அவர்களை மனித இனத்தின் ஒரு பகுதி என்றே எடுத்துக் கொள்ளவில்லை. அவர்களை வீடுகளில் வளர்க்கும் கால்நடைகளைப் போலவே நடத்தினார்கள்.

## பெண்களின் நிலை இஸ்லாத்திற்கு முன்னும் பின்னும்

“பெண்கள் வாழ்க்கையின் சிறந்த பகுதி” என்றொரு அடைமொழியை அறிமுகப்படுத்தி யதே இஸ்லாம்தான்.

இதன்மூலம் அவளுக்கொரு சிறப்பையும் அந்தச் சிறப்பின் அடிப்படையில் ஓர் கண்ணி யத்தையும் வழங்கிற்று இஸ்லாம்.

பெண்களின் தனித்தன்மைக்கு தகத்தாயமாக அங்கீகாரத்தை வழங்கிற்கு இஸ்லாம்.

பெண்களின் கண்ணியத்தையும் உயர்த்திட வேண்டும் என்றால் ஆண்களை மட்டம் தட்டிட வேண்டும், அவர்களின் கண்ணியத்தைத் தாழ்த் திட வேண்டும் என்ற நிலைகள் இஸ்லாத்திற் கில்லை.

இஸ்லாம் இந்த உலகுக்கு உருவாவதற்கு முன்னால் பெண்களுக்கு சமுதாய அரங்கில் எந்த அந்தஸ்தும் இருக்கவில்லை.

அவர்கள் அங்காடியில் அறைகூவி விற்கப் படும் பொருள்களைப் போலவும், தேவைப்படும் போது பயன்படுத்திக் கொள்ளப்படும் மிருகங் களைப் போலவும் அவர்கள் நடத்தப்பட் டார்கள்.

ஆடவர்கள் எண்ணற்ற பெண்களோடு ஆடிமகிழ்ந்தார்கள்.

எத்தனை பெண்களை மணமுடித்துக் கொள்ளலாம் என்பதற்கு எந்த வரையறையும் இருக்கவில்லை. பெண்களை – மனைவியரை தங்கள் விருப்பம்போல் மணந்துகொள்ளலாம் என்பது.

– தொடரும்




நவம்பர்–9,2019 அன்று உச்ச நீதிமன்றம், பாபரி மஸ்ஜித் வழக்கில் தீர்ப்பு ஒன்றை வழங்கியது.

அதாவது உச்ச நீதிமன்றம் தரத்தில் தரையைத் தொட்டது. அன்று அது வழங்கிய தீர்ப்புப் பல்வேறு வினாக்களை எழுப்பியது வழக்கறிஞர்கள் வட்டத்தில்.

'ஓர் இடம் யாருக்குச் சொந்தம் என்ற கேள்விக்கு விடை கண்டிட வேண்டிய நீதிமன்றம், அதை விட்டுவிட்டது. மாறாக தனக்கு அதிகாரமில்லாத, தனக்கு உரிமை இல்லாத, நீதியின் எல்லைக்கு அப்பாற் சென்று, ஒரு தீர்ப்பை வழங்கியது. அது செல்லாது.

அந்த இடத்தில் வழக்கில் சற்றும் சம்மந்தப்படாத ஓர் அறக்கட்டளையை ஆரம்பிக்க வேண்டும் எனக் கூறியதும், அதன்மூலம் ஒரு கோயில் கட்ட வேண்டும் எனக் கூறியதும் அப்பட்டமான அநீதி'. (Front LIne,Dec-6,2019)

ஹிட்லரையும் – முசோலினியையும் பின்னுக்குத் தள்ளிய, ஒரு பாசிசம், நாசிசம்.

மேலே நாம் குறிப்பிட்ட பத்திரிகையில் கட்டுரை எழுதிய வரலாற்று ஆய்வாளர், மூத்த வழக்கறிஞர், பத்திரிகையாளர் A.G. நூரானி நீதித்துறையைப் பற்றி ஒரு தகவலைத் தருகின்றார். அது இந்தியாவின் இருண்ட காலம் என வரலாற்றில் நிரந்தரமாகப் பதிந்துவிட்ட நெருக்கடிக்காலத்தோடு தொடர்புடையது.

## நெருக்கடி காலம்

நெருக்கடி காலத்தில் 1975/76 இல் இந்திரா காந்தி தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய நாள். நாட்டுக்கே நெருக்கடி வந்துவிட்டதாக அறிவித்தார்கள்.

மனித உரிமைகள் அனைத்தையும் நாட்டு மக்கள்ஒட்டுமொத்தமாகஇழுந்தார்கள். இந்திரா காந்திக்கு எதிராக பேசியவர்கள், எழுதியவர்கள் மூச்சு விட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு கொட்டடிகளில் அடைக்கப்பட்டார்கள்.

பத்திரிகைகள் பல மூடப்பட்டன. பத்திரிகையாளர்கள் சிறை வைக்கப்பட்டார்கள்.

அடிப்படை உரிமைகள், குறிப்பாக கருத்துச் சுதந்திரம், பேச்சுச்சுதந்திரம், இவையெல்லாம் காற்றிலே பறந்தன. எங்கும் மக்கள் பீதிவயப்பட்டு நின்றார்கள்.



மக்கள் உச்ச நீதிமன்றத்தை நாடி ஓடினார்கள். உச்ச நீதிமன்றம், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 32-ன் கீழ் மக்களின் உரிமைகளை நிலை நாட்டிட இருக்க வேண்டும். அரசின் நடவடிக் கைகள் அடாத செயல் என அறிவித்திருக்க வேண்டும். ஆனால், மக்களின் அடிப்படை உரிமைகளை உச்ச நீதிமன்றம் அந்தரத்திலே தொங்கவிட்டது. ஆளும் கட்சியான காங்கிரஸ் அதன் சர்வாதி காரிபோல் செயல்பட்ட இந்திரா காந்தி. இவர்கள் விரும்பியதை யெல்லாம் தீர்ப் பாகத் தந்தது.

நாட்கள் நகர்ந்தன நெருக்கடி காலத்தால் உயிரிழந்தவர்கள் போக எஞ்சியோர் பட்டதும் கெட்டதும் போக, தலை நிமிர்ந்தார்கள்.

நெருக்கடி காலத்தில் இந்திரா காந்தி ஆடிய ஆட்டங்களெல்லாம் அம்பலமாயின. இந்திரா காந்தியும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களும் குனிந்த தலை நிமிராமல் வாழ்ந்திட வேண்டிய அவலம். இந்திரா காந்தி சிறைப்பிடிக்கப் பட்டார்.

இவர்கள் மட்டுமல்ல உச்ச நீதிமன்றத்தில் அன்று நீதிபதிகளாக அமர்ந்திருந்தவர்களும், தலை குனிந்தார்கள். தாங்கள் சோற்றால் அடித்தப் பிண்டங்களாக, ஆட்சியில் இருந்தவர் களுக்கு அடிமையாகிப் போனதை எண்ணி, வேதனைப் பட்டார்கள்.

தாங்கள் - உச்ச நிதிமன்ற நீதிபதிகள் - ஆட்சி யாளர்களுக்கு அடிமையாய் ஆனதால் நீதிபரி பாலனத்தில் உச்ச நீதிமன்றத்தின் மாண்புகளும் மண்மூடிப் போனதே என ஏங்கினார்கள்!

நீதித்துறையின் தாழ்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் நாம் சாட்சியங்களாக ஆகிப்போனோமே என்றெல்லாம் எண்ணி நொந்தார்கள்.

அப்போது இந்திரா காந்திக்கு ஒப்பற்ற ஜால்ராவாக வாழ்ந்த உச்ச நீதிமன்ற நீதிபதி Y.V. சந்திரசூடு 1978-ல் டெல்லியில் - இந்தியாவின் பத்திரிகையாளர்கள் கிளப்பில் வைத்து 'அப்போது - நெருக்கடி காலத்தில் நாங்கள் நீதிபதிகள் எல்லோரும், கோழைகளாய் இருந் தோம்' என்றார். தங்களது கோழைத் தனத்தை ஒத்துக் கொண்டார். (Front Line, Dec-6, 2019)

அதே நிலைதான் இன்றும் நிலவுகின்றது அதாவது 2014-க்குப் பின் நிலவுகின்றது.

## இன்ஷா அல்லாஹ் அந்த நாள் நிச்சயம் வரும்

ஹிட்லருக்கும் - முசோலினிக்கும் ஏற்பட்ட நிலை இன்றைய இந்திய ஹிட்லருக்கும் முசோலினிக்கும் நிச்சயமாக வரும்.

மக்கள் தங்கள் உரிமைகளை நிலை நாட்டிக் கொள்ளும் காலம் நிச்சயமாக வரும்.

நீதிமன்றங்களைப் பொறுத்தவரை - இன்றைய பாசிஸ்ட்டுகள் தங்கள் ஆட்களைத் தான் நீண்ட வரிசையில் வைத்திருக்கின்றார்கள் என்பது உண்மைதான். அவர்கள் சில காலம் அராஜகங்களையும், அநீதிகளையும் நீதி என்ற பெயரில் பிரகடனப்படுத்தலாம். ஆனால், நிச்ச யமாக "சத்தியம் வெல்லும் அசத்தியம் அழியும். அழிந்தே தீரும்" அந்த நாளில் நிச்சயமாக, இன்ஷா அல்லாஹ் அனைத்து அநீதிகளும் அழிக்கப்படும். நீதி நிலைபெறும். பாபரியும் மீளும். அதுவரை அநீதியை வீழ்த்தும் நெடும் பயணத்தைத் தொடருவோம்.

## பாபரி மஸ்ஜிதின் வழக்கின் தீர்ப்பு ஏகமனமானதா?

பாபரி மஸ்ஜித் வழக்கில், தீர்ப்பை வழங்கிய உச்ச நீதிமன்ற அமர்வில் இடம் பெற்ற நீதிபதிகள் 1) ரஞ்சன் கோகாய், 2) S.A. பாப்டி, 3) தனஞ் செய்யா Y. சந்திரசூடு, 4) அசோக் பூஷன், 5) அப்துல் நசீர்

இந்த ஐந்து பேரும் ஏகமனதாக தீர்ப்பை வழங்கியதைப் போல் வெளி உலகத்திற்கு காட்டிக் கொண்டார்கள். ஆனால், நிச்சயமாக ஒரு நீதிபதி முற்றிலும் கருத்து வேறுபட்டார். ஆனால் தீர்ப்பை எழுதியவர்கள் அதனைக் காட்டிக் கொள்ளவில்லை. அந்த மாறுபட்ட கருத்துக்கு எதிராக, அவர்கள் ஒரு விளக்கத்தைத் தீர்ப்பில் தருகின்றார்கள். அதனை "Addenda" (பின் இணைப்பு) என்ற கூடுதல் தகவல் அடிப்படையில் தந்து முடிக்கின்றார்கள்.

அடுத்து, இந்தத் தீர்ப்பைப் பற்றி மூத்த வழக்கறிஞர் வைகை சட்ட நிறுவனத்தின் தாளாளர் தீர்ப்பின் ஒருமித்தக் கருத்தைப் பற்றி இப்படிக் கூறியுள்ளார்.

929 பக்கங்கள், ஐந்து நீதிபதிகளும் ஒருமித்த கருத்தோடுதான் எழுதி இருக்

கின்றார்கள். மீதமுள்ள 116 பக்கங்கள் கொண்ட பின் இணைப்பை ஒரு நீதிபதி எழுதி இருக்கின்றார். அந்த 116 பக்கங்கள் கொண்ட பின் இணைப்பிற்கு மீதமுள்ள நான்கு நீதிபதிகளும் ஒப்புதல் அளிக்க வில்லை. இதில் வேடிக்கை என்னவெனில், அந்தப் பின் இணைப்பைத் தந்த அந்த நீதிபதி யார் என்றும், அதில் சொல்லப்பட வில்லை. எந்த நீதிபதி இதை எழுதினார் என்றும் சொல்லப்படவில்லை. (வழக் கறிஞர் லஜபதிராய் பேட்டி – வைகறை வெளிச்சம், டிசம்பர்–2019)

எந்த நீதிபதியும் எங்கும் கையெழுத்து இடவில்லை.

இதனால்தான் இந்தத் தீர்ப்பை UNANIMOUS BUT ANNAVYMOUS தீர்ப்பு என்கின்றார்கள்.

இது ஒருமித்த தீர்ப்பு. ஆனால், அநாமதேய தீர்ப்பு என்கின்றார்கள். ஆனால், இது Unnani mous தீர்ப்பும் இல்லை என்பதே உண்மை. அதற்கு அந்தத் தீர்ப்பே சாட்சி.


## தீர்ப்பில் இன்னொரு பகுதியை மீறும் இந்துத்துவ தீவிரவாதிகள்

இந்தத் தீர்ப்பில் நீதிபதிகள், வழிபாட்டு தலங்களின் சட்டம் 1993–ஐ விரிவாக விவாதிக் கின்றார்கள்.


இந்தச் சட்டம், பாபரி மஸ்ஜித் அல்லாத இந்தியாவிலிருக்கும் எந்த வழிபாட்டுத் தலத்தையும், யாரும் முன் தேதியிட்டுக் கேட்கக் கூடாது எனக் கூறுகின்றது. இந்தத் தீர்ப்பில் இந்தச் சட்டம் இனி செயலில் வரும், இனி எந்த வழிபாட்டுத் தலத்தையும் யாரும் கேட்கக் கூடாது என்கின்றது.

ஆனால், இந்துத்துவவாதிகள், அடுத்த இலக்கு மதுராவிலுள்ள கிருஷ்ண ஜென்ம பூமி எனப் புறப்பட்டுவிட்டார்கள். அங்குள்ள பள்ளிவாச லையும் கோயிலாக மாற்றும் தீர்ப்பை உச்ச நீதிமன்றத்திலேயே பெற்றிட திட்டமிட்டுள் ளாரகள். பாபரி மஸ்ஜித் தீர்ப்பின் ஒரு பகுதியைக் கொண்டாடும் இந்துத்துவ தீவிரவாதிகள், தீர்ப்பின் இன்னொரு பகுதியை மீறிப்படை அமைத்தார்கள். ஆனால் முஸ்லிம்கள் நீதிமன்றங் களை அணுக அஞ்சி நிற்கின்றார்கள்.


(Front Line, Oct-23/2020) - MGM





# இராமர் கோவில் அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் மோடி



ஹாஜி. பி.எம். அப்துல் கரீம், குளச்சல்

*6–8–2020* தந்தி செய்தியை தழுவி எழுதியது.

இராமர் அயோத்தியில் பிறந்தார். அதிலும் பாபர் மஸ்ஜித் இருக்கும் இடமருகே பிறந்தார் என்பது இந்துத்துவா வாதிகளின் வாதம்.அதுபற்றிய வழக்கு, வழக்கு மன்றத்தில் இருக்கும் போதே ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. இந்து அமைப்பினர் நாடு பூராவும் இராமர் சிலையோடு ஊர்வலம் நடத்தி இராம பக்தர்களால் பாபர் மஸ்ஜித் தரைமட்டம் ஆக்கப்பட்டது. அயோத்தி முஸ்லிம் நவாப்களால் ஆளப்பட்ட பகுதி. முஸ்லிம் ஆட்சியில் ஆட்சி யாளர்கள் அதிகாரிகள் வந்தால் தொழுவதற்கு கட்டப்பட்ட இடமே அது.

பாபர் தன் மகனிடம் நீ ஆட்சி செய்யும்போது யாருடைய மனமும் புண்படாமல் ஆட்சி செய்ய வேண்டும். இந்நாடு பல மதங்களை, கலாச்சாரங் களை கொண்ட நாடு என வேண்டுகோள் விட்ட பாபரோ அவர் வழி வந்தவர்களோ கோவிலை இடித்து மஸ்ஜித் கட்டியிருக்க மாட்டார்கள் என்பது உண்மை.

தீபாவளிக்கு அக்காலங்களில் தீபஒளி வீடுகளில், அரசிடங்களில் ஏற்றுவது வழமை. பாபர் தன் ஆட்சியில் காபூலிருந்து ஆட்களைக் கொண்டு வந்து அரசு சார்பாக பட்டாஸ் வெடி பொருட்கள் செய்து தீபாவளியை ஒளியூட்டிய வரென வரலாற்றில் அறிய முடிகிறது. இப்படிப் பட்ட பாபர் ஓர் இந்து கோயிலை இடித்து மஸ்ஜித் கட்டினார் என்பது வடிகட்டிய பொய். ஆட்சியாளர் முஸ்லிம் மன்னரானாலும் தீபாவளி போன்ற திருவிழாக்களை குடிமக்கள் இந்து பெரும்பான்மை என்பதால் அரசவையிலே முகலாய ஆட்சியில் தீப அலங்காரம் மூலம் மதித் துள்ளனர் என்பது வரலாற்றிலே காணலாம்.

பி.ஜே.பி. அரசு வந்தது முதல் அவர்களின் இராமர் கோவில் கட்டும் தீர்மானத்தை அமல் படுத்த *5–8–2020* அன்று பிரதமர் நரேந்திர மோடி இராமர் கோவிலுக்கு சகாக்களோடு அடிக்கல் நாட்டினார்.

அடிக்கல் நாட்டிய பிரதமர் உரையாற்றும் போது நம் உள்ளங்களிலெல்லாம் வாழும் இராமர் நம் கலாச்சாரத்தின் அடிப்படையாக விளங்கு கிறார். இராமரை போன்ற சிறந்த ஆட்சியாளரை காண முடியாது. இராமர் ஆட்சி சமூக நல்லி ணக்கத்துக்கு எடுத்துக்காட்டு. அவர் ஆட்சியில் பாகுபாடில்லை. ஆதரவற்றவருக்கு அவர் ஆட்சி எப்போதும் உண்டு. காந்திஜிக்கு கூட இராமர் வழிகாட்டியாக இருந்திருக்கிறார் என இராமபிரா னின் பாகுபாடற்ற ஆட்சியை புகழ்ந்து பேசினார்.

ஈரான், சீனா போன்ற நாடுகளிலும் இராமர் கதை உண்டு. முஸ்லிம்கள் அதிகம் உள்ள இந்தோனேசியாவில் இராமாயணம் உண்டு.

தமிழில் கம்பர் எழுதிய கம்ப இராமாயணம் இராமரின் புகழை உலகிற்கு பறை சாற்றுகிறது. இராமர் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டியாக உள்ளார். இராமரைப் பற்றிய பிரதமரின் இவ்வுரை அவர் கொண்ட இராம பக்திக்கு சரியானது.

இராமர் ஆட்சி பற்றி நடுநிலையோடு பார்த்தால் அவர் மனு தர்மப்படி பிராமணன், சத்ரியன், வைசியன், சூத்திரன் என்ற வர்ண அடிப்படை ஆட்சி செய்த ஓர் மனுநீதி அரசனென அறிய முடிகிறது.

இராமபிரான் அயோத்தியை ஆண்ட போது அவரிடம் ஓர் வழக்கு வருகிறது. சம்பூகன் என்னும் சூத்திரன் அவன் தலைகீழாக கால் மேலாக தவம் இருக்கிறான். இதனால் பிராமண புரோகிதர் மகன் இறந்துள்ளான். புரோகிதர் மகன் மரணத்திற்குக் காரணம் சம்பூகன் தன் குலத்திற்கு மாற்றமாக தவம் இருந்ததே காரண மென புகார் செய்தார்.

இராமர் ஆளுமையில் இவ்வழக்கு விசாரிக் கப்பட்டு சம்பூகன் சூத்திர நெறிக்கு மாற்றமாக தவம் இருந்ததால் புரோகித பிராமணரின் மகன் இறந்துள்ளான். அதற்கு தண்டனையாக தவம்

இருந்த சம்பூகன் தலையை வெட்ட வேண்டுமென மனுநீதி அடிப்படையில் தீர்ப்பு நல்கினார்.

இராமர் சம்பூகனுக்கு தண்டனையை நிறை வேற்றும் போது ஹே! ஹஸ்த தக்ஸிண மருதஸ் பஸி சோர்த்ஷ ஐஸ்யஹூ ஜீவதலே விஸ்ருஜ சூத்ர முனௌக்கு பானம் என சமஸ்கிருத சுலோகத்தை சொல்லி சூத்திர சம்பூகனுக்கு தண்டனை கொடுத்தார்.

ஓ! வலது கையே இறந்து போன பிராமணச் சிறுவன் மறுபடியும் உயிர் பெற்று எழ சூத்திரத் துறவியை கொல்வதே மருந்தாகையால் கூசாமல் இவனை வெட்டிவிடு, நீ இராமனின் அங்கங்களில் ஒன்றல்லோ? இம்மந்திரம் இராமனால் சொல்லி தவம் இருந்த சம்பூகனின் தலை வெட்டப்பட்ட தாக இராமாயணம் சொல்கிறது. இதுதான் மனுநீதி ஆட்சி.

மனு தர்மப்படி மனிதனை பிறந்த குல அடிப்படையில் பாகுபாடுபடுத்தி பிறந்த ஜாதி அடிப்படையில் பாகுபாடுபடுத்தும் வர்ணா சிரம ஆட்சி செய்தவர் இராமன் என்பதை வரலாறு மூலம் அறிய முடிகிறது.

இந்த நாட்டை நீண்ட நாட்களாக ஆண்ட இந்து, இஸ்லாமிய மன்னர்களிடம் அக்கால சூழ்நிலைக்கு ஏற்ப அவர்களை துதி பாடியவர்கள் சூத்திரனும், வைசியனும், சத்திரியனும், பிராமண னும் மனு ஸ்மிரிதிப்படி வாழ வேண்டும் என சட்டமியற்றியதோடு வேத மந்திரங்கள் பிராமண ரல்லாதார் ஓதக்கூடாது என சட்டம் மூலம் தடை போட்டதால் வேத பாஷையாகிய சமஸ்கிருதம் பேச்சு வழக்கில்லாமல் ஆனது.

இன்று நம் நாட்டை ஆளுவோர் அரசு சார்பாக சமஸ்கிருத வளர்ச்சிக்கு பல கோடி ரூபாய்களை பட்ஜெட்டில் ஒதுக்கியுள்ளது வேத மொழி பேச்சே வழக்கில் இல்லாமல் ஆக காரணம் மேல் ஜாதி பிராமணர்களே, சூத்திரன் ஏனைய பிரிவினரும் வேதம் ஓதுவது கூடாது யென சமூகத் தடை போட் டது உயர் ஜாதியினர். இதனால் சமஸ்கிருதம் வேத சுலோக மொழியாக சுருங்கியது பேச்சு மொழி வழக்கிலானது.

இஸ்லாமியர் அவர் சென்ற நாடுகளிலுள்ள மொழியை தாமும் கற்று அவர்கள் அரபி மொழி யையும் சென்ற நாடுகளில் பரப்பினர். சென்ற நாட்டினரும் அம்மொழியை கற்று ஞானத்தைப் பெற்றனர். யாதானும் நாடாமல் ஊராமல் சார்ந்து ணையும் கல்லாதுவாறு என்ற படி கல்வியை கற்றனர். இஸ்லாமியர் எம்மொழி யையும் தீண்டத் தகாததாக பார்க்கவில்லை.

நபிபிரான் காலத்தில் யூத நஸாராக்களின் தலைவர்கள் கடிதம் மூலம் பல விசயங்களை கேட்டார்கள். தம் இளம் தோழர் செய்யிதி பினு தாபித்தை அவர்களின் மொழியான சுரியானி ஹீப்ரு போன்ற மொழிகளை எழுதவும் படிக்கவும் ஏற்பாடு செய்து மொழிப் புலமையை ஆர்வமூட்டி னார்கள். நபி பிரான் என்பதை அண்ணார் வரலாறு சொல்கிறது.

இஸ்லாம், அரபு வணிகர்கள் மூலமாக இந்தியா, சைனா, மலேசியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு பரவியது என்பது வரலாறு. நம் கேரளாவில் மாப்பிள்ளா முஸ்லிம்கள் இலங்கை பேருவிளையில் உள்ள முஸ்லிம்களும் அரபு கலப்பின முஸ்லிம்களே என்பது பார்ப்போர் புரிவார். இவ்வாறு முஸ்லிம்கள் சென்ற நாடுகளில் உள்ள மொழிகளை உள்வாங்கி அரபி மொழியை யும் வளர்த்தனர். எம்மொழியையும் தீண்டத்தகாத தாக ஒதுக்கவில்லை.

முற்கால மேல் சாதியினர் சமஸ்கிருதத்தி லுள்ள ரிக், யஜுர், ஜாம, அதர்வணம் என வேதங் களை நான்காக பிரித்து அதுவும் பிராமணரே ஓத வேண்டுமென கட்டுப்பாடு வைத்து சமஸ் கிருத மொழியை வளராமல் செய்தன என்பதே உண்மை.

இப்போது ஆட்சி செய்யும் பி.ஜே.பி. ஆட்சி வழக்கிலில்லாத சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு பட்ஜெட்டில் பல கோடி ரூபாய் ஒதுக்கி மொழியை வளர்க்க முயற்சிக்கிறது. நாடு பூராவும் இதற்கு பலத்த எதிர்ப்பு உள்ளது.

இஸ்லாமிய ஆட்சியாளர் அப்பாஸிய கலீபா ஹாரூன் அல்ரஷீத் அவர் அவையில் சமஸ்கிருத பண்டிதர்கள் அரசவையில் அழைக்கப்பட்டு உபசரிக்கப்பட்டார். அதேபோன்று கஜினி முகம்மது சமஸ்கிருத பண்டிதர்களை கனிஜியில் சமஸ்கிருத பண்டிதர்களை வரவழைத்து உபசரித்துள்ளார்.

நம் நாட்டிலுள்ள மனு தர்மத்தில் நாலு வர்ணமும் எந்த மொழி பேச வேண்டும், எந்த தொழில் செய்ய வேண்டும், யாருக்கு எது என்பது என்ற வரையறை சொல்லப்பட்டுள்ளது. இதனால் மனிதனை வர்ண அடிப்படையில் பிரிக்காத இஸ்லாம், கிறிஸ்தவத்தை நோக்கி மக்கள் ஈர்க்கப் பட்டனர்.

நம் நாட்டு வேதத்தில் சூத்திரன் வேதம்

ஒதுவதும் படிப்பதும் கூடாது. ஓதினால் நாக்கை அறுக்க வேண்டும். அவன் ஓதினால் பஞ்சை வைத்து காது கேளாதவாறு செய்ய வேண்டும். போன்ற ஒவ்வாத மொழிகள் காணப்படுகிறது. இஸ்லாமும் கிறிஸ்தவமுமு மனிதன் யாரும் கல்வி கேள்விகளில்திறமையாகவரதடைபோடவில்லை.

பிரதமர் மோடி தமிழில் இராமாயணம் உண்டு, மலேசியாவிலும் முஸ்லிம்கள் அதிகம் உள்ளனர். அங்கு இராமன் வரலாறு உண்டென் றும் பேசியுள்ளார். வால்மிகீ இராமாயணமும், கம்ப இராமாயணமும், வால்மிகீயால் கம்பனால் முறையே இயற்றப்பட்டது. தமிழ் புலவர்கள் கற்பனைக்கோர் கம்பனென்றும், உவமைக்கோர் உமறுப்புலவரென்றும் சிறப்பு சொல்வர்.

குமரி மாவட்டத்தில் பிறந்த சேகுதம்பி பாவலர் சதாவனம் கோட்டாற்றில் தமிழ் சான்றோர் முன் னிலையில் தேங்காப்பட்டினம் ஆற்றுக்கோயா தங்கள் தலைமையில் நடைபெற்ற போது சதாவ தானம் நிகழ்த்திய தமிழ் அறிஞர், அவர் ஜீவிய காலத்தில் அவரை முக்கிய இந்து கோவில்களில் கம்ப இராமாயண உரைக்கு அழைப்பதுண்டு. அவர் கம்ப இராமாயணத்தை இலக்கிய சுவை யிலே ரசித்தவர்தான் இஸ்லாமியனாக வாழ்ந்து மறைந்தவர்.

இராமலிங்க சுவாமி பாடல் பற்றி அது அருட்பாவா? மருட்பாவா? என தமிழகமெங் கும் விவாதம் எழுந்த போது அதுபற்றிய விவாதம் காஞ்சி கோவிலுக்கு முன்பு நடைபெற்ற போது தமிழ் அறிஞர்கள் வீற்றிருந்த அவையில் இராம லிங்க சுவாமியின் அருட்பா அது மருட்பா என்று யாழ்பாணத்து கதிர்பிள்ளை விவாதிக்க சேய்குத் தம்பி பாவலர் இராமலிங்க சுவாமி பாடல் அருட்பா என்று அவையில் தன் திறமையால் நிரூபித்தார். தமிழ் சான்றோர் பாவலரை யானை மீது அமரச் செய்து காஞ்சி கோவிலை சுற்றச் செய்து அல்லா மா மகாமதியென வாழ்த்தினர்.

பாவலரோடு அருட்பா மருட்பா விவாதத் திலே முக்கிய பங்கு பெற்ற கதிர்வேல் பிள்ளை தமிழ் தென்றல் திரு.வி.க.வின் ஆசிரியர் என அறிய முடிகிறது. இவ்வாறு தமிழ் என்று வரும்போது இஸ்லாமிய அருட்கவிகள் பலர் வாழ்ந்து முழு இஸ்லாமியர்களாக தமிழுக்கு தொண்டு செய்துள்ளனர்.

நம் அரசியல் நிர்ணய சபை தலைவர் டாக்டர். அம்பேத்கர் இஸ்லாமா? புத்தமா? இன இழிவு ஒழிய என ஆலோசித்து நாக்பூரில் லட்சம் மக்களோடு புத்த மதத்தில் இணைந்தார்.


டாக்டர் அம்பேத்கர் அன்றைய இந்திய சூழ் நிலையை பார்த்து சனாதன இந்து மதத்தை துறந்து லட்சக் கணக்கான மக்களோடு நாக்பூரில் புத்த நெறியை பின்பற்றினார். நீங்கள் ஏன்? நாக்பூரை மத மாற்றத்திற்கு தேர்ந்தெடுத்தீர்கள் என எல்லோரும் கேட்கின்றனர். வரலாறு பார்க்கும் போது புத்த மதத்தை இந்தியாவில் பரப்ப முன்னணியில் நின்ற வர்கள் நாங்கள். இங்கு திராவிட ஆரிய போர் பல நடந்துள்ளது. அகஸ்திய முனிவரால் காப்பாற்றப் பட்ட நாகர் வழி வந்தோரே திராவிடர். இவர்கள் வழி நடத்த ஆளின்றி இருந்த போது அவர்கள் கண்டது கௌதமரை.

புத்த நெறியை எல்லா நாடுகளிலும் பரப்பி யவர் நாகர்கள். இந்தியாவில் வர்ண பேதங்களை மாற்ற போராடியதில் முக்கிய பங்கு நாகர்களைச் சாரும்.

நாகர்கள் அதிகம் வசித்ததால் நாக்பூராயிற்று. நாக்பூரிலிருந்து 27 மையிலில் நாகர் கனமலை இருக்கிறது. அதனருகே நாக நதி ஓடுகிறது. பல சரித்திர சம்பவங்கள் நடைபெற்றுதான் நான் மத மாற்றத்திற்கு நாக்பூரைத் தேர்வு செய்ததாக அவர் எழுதிய புத்தகத்தில் குறிப்பிடுகிறார். நம் நாகர் கோவிலில் நாகராஜ கோவில் ஜைன கோவிலாக இருந்து இடை காலங்களில் முருகனும் ஏனைய வழிபாடும் வந்ததாக அப்பாத் துரை என்ற தமிழ் அறிஞர் குறிப்பிடுகிறார். திருச்சாணத்துமலை கோவில் கூட ஜைன கோவிலென்பார்.

**பாபர் மஸ்ஜித் இடித்த ஜாப்ரி பாய் தான் அம்மஸ்திஜின் டூமை மேலே ஏறி உடைத்தேன். இன்று டூமை உடைத்த கையாலே நூற்றுக் கணக்கான பள்ளிவாசல் கட்டியுள்ளேன் என வாட்ஸப்பில் கேள்வி கேட்டு பதிலுரைத்தார். இவர் சிறிது நாளைக்கு முன்பு தமிழ்நாட்டில் பல பள்ளிவாசல்களில் பேசினார். நாகர்கோவில் கலாச்சாரப் பள்ளியிலும் வந்து ஜும்ஆவில் உரையாற்றியுள்ளார். பிரதமர் உரை அவர் நம்பியுள்ள கதைக்கு சரி கற்பனை இராமனைப் பற்றி ஏதோ பேசியுள்ளார்.**

# 1453ல் மீண்டும் இஸ்லாம்




## ஜான் பெஃபர் அடுத்து இன்னொன்றையும் குறிப்பிடுகின்றார்

நாங்கள் வெறுப்பை வளர்ப்பதில் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டிருக்கும் போதுதான், முஸ்லிம் உலகில் இன்னொரு பெரும் நிகழ்வு இடம் பெற்றது. அதுதான், முஸ்லிம்கள் தங்கள் உலகத் தலைமையை மீண்டும் பெற்றார்கள். இப்போது துருக்கியர்கள் கிலாபத் (எ) முஸ்லிம்களின் ஒட்டுமொத்தத் தலைமையை மீண்டும் பெற்றார்கள். இதனால் நாங்கள் 'சாராசன்ஸ்' என்ற சொல்லை துருக்கியர்கள் என மாற்றிட வேண்டியதாயிற்று. ஏனெனில் துருக்கியர்கள் பெற்ற வெற்றி மேலை நாட்டவர்களாகிய எங்களை மிகவும் கதிகலங்கிடச் செய்தது. எங்கள் இளைஞர்களிடம் முஸ்லிம்கள் வெல்ல முடியாதவர்கள் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியது.

1453–இல் (முஸ்லிம்கள்) துருக்கியர்கள், கிருஸ்தவ உலகின் மையமாகக் கருதப்பட்ட கான்ஸ்டாண்டி நோபுள் என்ற இடத்தைக் கைப்பற்றினார்கள். இது பைசாந்திய (கிருஸ்தவ உலகின்) பேரரசை ஓர் முடிவுக்குக் கொண்டு வந்தது. 400 ஆண்டுகளுக்கு முன் (செஜ்லூக்ஸ்) (முஸ்லிம்கள்) பெற்ற வெற்றியை ஐரோப்பாவின் நினைவுக்குக் கொண்டுவந்து கிருஸ்தவ ஐரோப்பிய உலகை ஆட்டிப் படைத்தது. இப்போது துருக்கியர்கள் ஐரோப்பிய கிருஸ்தவ உலகின் (Moral Enimies) ஒழுக்கம் சார்ந்த இயல்பான எதிரிகளாக ஆனார்கள்.

தாமஸ் மூர் எழுதியதை (Thomas More) எழுதியதைப் போல், மார்ட்டின் லூதர் அவர்களும், ரோமன் கத்தோலிக்கர்களுடன் இணைந்து துருக்கியர்களை கிருஸ்தவர்களுக்கு எதிரானவர்கள் எனக் கருதினார். ஐரோப்பிய ஒன்றியம் (European Union) என்ற அமைப்பை தொடங்குவதற்கு, துருக்கி எதிர்ப்பு, முஸ்லிம் எதிர்ப்பு என்பவைதான் அடித்தளமாக அமைந்தன என்கின்றார் (Tomaz Mastnak) தோமஸ் மஸ்தாங் என்ற சிந்தனையாளர். மேலை நாடுகளின் சிறந்த சிந்தனையாளர், கோக்கர் வில்லியம் பென் (QuakerWilliamPenn)– இவர்சற்றுசமநிலையான எழுத்தாளர் என்றே கருதப்பட்டார். இவர் 17 ஆம் நூற்றாண்டில், ஐரோப்பா ஒன்றிணைக்கும் – ஒன்றிணைந்ததிலும் – ஒரு எதிர் நண்மை – துருக்கியர்களின் ஆதிக்கத்திற்கு எதிரான கிருஸ்தவ உலகத்திற்கு ஒரு பெரும் பாதுகாப்பு என்றார்.

GREAT SECURITY IT WILL BE TO CHARISTIANS AGAINST THE INROADS OF THE TURKS. - SOURCE : 49

(முஸ்லிம்கள்) துருக்கியர்கள், அதாவது, கிலாபத் என்ற முஸ்லிம்களின் ஒட்டுமொத்த தலைமையை மீண்டும் இந்த உலகில் நிலை நாட்டியவர்கள், நமது நியாயங்களையும் வெற்றி கொண்டு விடுவார்களோ என்ற நிலை தலையெடுத்தபோதுதான் நாங்கள் விளம்பிய வெறுப்புப் பிரச்சாரம் சற்றே பலம் இழந்தது. அல்லது எடுபடாமல் போய்விட்டது.

பிற்றை நாட்களில் முஸ்லிம் நாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக, ஐரோப்பாவின் காலணி நாடுகளாக ஆன பின்னர்தான் எங்களது இஸ்லாத்திற்கெதிரான முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்புப் பிரச்சாரம் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கியது மக்களிடம் எடுபட்டது.

இப்போது நாங்கள் எடுத்து வைத்த பிரச்சாரம், அதாவது, இஸ்லாத்திற்கெதிராகவும், முஸ்லிம்களுக்கெதிராகவும் எடுத்து வைத்தப் பிரச்சாரம் அவர்கள் முஸ்லிம்கள், எதற்கும் லாயக்கற்றவர்கள், அவர்களால்எதுவும்செய்திட இயலாது. அவர்கள் சோம்பேறிகள், தங்கள் வீடுகளிலும், டீக் கடைகளிலும், வாளாவிருந்து விடுபவர்கள். இதில் பல கீழ்த்திசை சிந்தனை யாளர்களைப் போல், பிரஞ்சு நாட்டைச் சார்ந்த தத்துவவாதி இர்ணஸ்ட் ரினான் (Ernest Renan) முஸ்லிம்கள் எதையும் புதிதாகக் கற்றிடும் தகுதி இல்லாதவர்கள். அவர்கள் புதிதாக வரும் எந்த அறிவியலையும் ஏற்றுக்கொள்ள முடியாத வர்கள் என்றார். (ஆதாரம் – 50)

– இங்கே நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும்.

இஸ்லாமும் முஸ்லிம்களும் எங்கே மீண்டும் இந்த உலகை வெற்றிக் கொண்டு விடுவார்களோ என்ற அச்சத்தில் பொய்களை இட்டுக்கட்டி வெறுப்பை வளர்ப்பது இந்த மேலை நாட்டவர் களின், ஐரோப்பியர்களின் முழு நேரப் பணியாக இருந்து வருகின்றது. "Ottaman Emphire" இன் வீழ்ச்சிக்குப்பின் முஸ்லிம்களை எதற்கும் இலா யக்கற்றவர்கள் – கல்வியல் முன்னேற முடியாத வர்கள் எனப் பேசி, பிரச்சாரம் செய்து பரிகசித்து வந்தார்கள். இந்தப் பிரச்சாரத்திற்கு வலு சேர்க்கும் வகையில் பல சதித் திட்டங்களைத் தீட்டினார்கள்.


இப்படித் தீட்டிய சதித் திட்டங்களுள் ஒன்று விஞ்ஞான கல்வி முஸ்லிம்களுக்கு கிடைக்கா மல் செய்தார்கள். அவர்களை வெற்று வேட்டு களாகவே காலமெல்லாம் வைத்திருக்க முடிவு செய்தார்கள். இதற்கு மிகவும் நிதர்சனமான எடுத்துக்காட்டு உலகில் ‘அணுயுதம்’ என் றொன்றை கண்டுபிடித்து மனித இனத்தை அழித்திட தலைப்பட்டார்கள்.

– இன்ஷா அல்லாஹ் தொடரும்.



- எஸ்.எம். முஷ்ரிப்

பாகம்-10




# பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பில் வழங்கப்பட்ட தீர்ப்பைப் பார்த்திடும் போது, நீதிபதி அவர்கள், மிகைத்த வருத்தத்துடன் இருந்திருக்கின்றார்கள். அரசு தரப்பு வழக்கறிஞரும், விசாரணை முகமைகளும் தங்கள் கடமைகளில் பெரிய அளவில் தவறிவிட்டார்கள். இந்நிலையில் நீதிபதி ஓர் கையறு நிலைக்கு வந்திருக்க வேண்டாம். அவர் குழு வழக்கு விசாரணையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து மறைத்தவற்றையெல்லாம் கொண்டு வரச் சொல்லி விசாரணையை உயிரோட்டத்துடன் நடத்தி நீதியை நிலைநாட்டி இருக்க வேண்டும். இப்படிச் செய்வதில் நீதிபதிதைத் தடுப்பார் யாருமில்லை ; எதுவுமில்லை. நீதிபதியே சாட்சியங்களைக் குறுக்கு விசாரணைச் செய்திட வேண்டும். எதிர் சாட்சியமாக மாறி விட்டவர்களை அவர் விசாரித்து, அவர்கள் கொடுத்த வாக்குமூலங்களிலிருந்து அவர்கள் முரண்படுவதை குறுக்கு விசாரணை நடத்தி, உண்மைகளை ஆவணப்படுத்தி இருக்க வேண்டும்.

அதேபோல் அரசு தரப்பில் சாட்சியங்களை வேண்டுமென்றே மறைக்கின்றார்கள் என தெரிந்த இடங்களில் அவர், அரசு தரப்பினருக்கு சற்றே அழுத்தங்களைத் தந்து சாட்சியங்களை ஒப்படைக்கப் பணித்திருக்க வேண்டும். இவை அனைத்தையும் செய்திட வேண்டியது நீதிபதியின் கடமை. இந்தக் கடமையை நாம் மேலே சொன்ன உச்ச நீதிமன்ற தீர்ப்பு கட்டாயப்படுத்துகின்றது. அந்த உச்ச நீதிமன்ற உத்தரவு இப்படிக் கூறுகின்றது.

"அரசு தரப்பு ஏதேனும் ஒரு வகையில் கடமைத் தவறிடுமேயானால், நீதிமன்றம் வழக்கு விசாரணையை முழுமையாகத் தன் கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வந்திட வேண்டும். இதன்மூலம் விசாரணையின் இறுதி இலக்கான உண்மையை நிலை நிறுத்திட வேண்டும்"

உச்ச நீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பை வைத்துப் பார்த்திடும்போது, நீதித்துறை நிச்சயமாகத் தோற்றுப் போனது.

சுவாமி அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலத்தைப் பொறுத்தவரை அது முழுக்க, முழுக்க அவராகவே முன்வந்து மனம் ஒப்பி வழங்கிய வாக்குமூலமாகும். (இதனை அத்தியாயம் 10இல் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்னே். மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு 2007 குற்றவாளிகள் விடுதலை என அதில் தெளிவுபடுத்தியுள்ளேன்.)

இந்த ஒப்புதல் வாக்கு மூலத்தை நீதித்துறை புறக்கணித்தே இருக்கக்கூடாது. நான்கு மாதம் கழித்து அவர் நான் கொடுத்த வாக்குமூலத்தைப் பின் வாங்கிக் கொள்கிறேன் எனக்கூறி இருந்த போதும் நீதிமன்றம் அவரது வாக்குமூலத்தைப் புறக்கணித்தே இருக்கக் கூடாது.

இதில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். அது, நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டது போல், அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலத்தை உறுதிபடுத்த பல துணை சாட்சியங்களும், அத்தாட்சிகளுமிருந்தன. ஆனால் அவை அனைத்தையும் அரசு தரப்பு முற்றாக மறைத்து விட்டது. மறைத்த சாட்சியங்களையும், அத்தாட்சிகளையும் நீதிபதி கேட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கச் சொல்லி உண்மையான குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும். ஆனால் நீதிபதி அதைச் செய்யவில்லை.

ஆனால் இவற்றிற்கெல்லாம் நேர்மாறாக மும்பை சுயர்பன் நகர ரெயில் குண்டு வெடிப்பில் தீர்ப்பு வழங்கப் பெற்றிருந்தது. (7/11–2006).

அங்கே முஸ்லிம் அப்பாவிகளிடம் காவல் துறை சித்திரவதைச் செய்தே ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்றது. சித்திரவதைகளுக்குப் பின்னர்தான் அந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் வாங்கப்பட்டன என்பது நிரூபிக்கப்பட்டது.

அந்த ஒப்புதல் வாக்கு மூலங்களுக்குத் துணையாக எந்த சாட்சியமுமில்லை. அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தைக் கொடுத்தவர்கள் அவற்றிலிருந்து பின் வாங்கினார்கள். அந்தக் குண்டு வெடிப்பில் வேறு எந்த வகையிலும் எந்த சாட்சியமுமில்லை. ஆனாலும் அந்த அப்பாவி முஸ்லிம்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

இதே அநீதிதான் 2006–இல் அவ்ரங்கபாத், ஆயுத கடத்தலிலும், வெடி பொருட்கள் கடத்தலிலும் நடைபெற்றது. (2006)

இவையெல்லாம் நீதித்துறை பாரபட்சமற்றது. தனித்துவமிக்கது. என்பனவற்றை யெல்லாம் மிகப்பெரிய கேள்விக்குறியதாக ஆக்குகின்றது.

இவையெல்லாம் சம்சவ்தா ரெயில் குண்டு வெடிப்பு வழக்கில், உச்ச நீதிமன்றத்திற்கு நாம் மேல்முறையீடு செய்வதற்குப் போதுமானதாகும். ஆனால் மத்திய அமைச்சர் இராஜ்நாத் சிங், 'NIA' என்ற மத்திய புலனாய்வு முகமை இந்தச் சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பு வழக்கில் மேல் முறையீட்டுக்குச் செல்லாது என அறிவித்துவிட்டார். எடுத்த எடுப்பிலேயே அமைச்சர் இப்படி அறிவிக்கின்றார் அவர் கீழ் நீதிமன்றம் அளித்தத் தீர்ப்பைப் படிக்கவில்லை. அது மேல்முறையீட்டுக்கு உரியதா இல்லையா என்பதைப் பற்றி எந்த ஆய்வையும் மேற்கொள்ளவில்லை. ஏனெனில் விடுதலை செய்யப்பட்டவர்கள், அவர் சார்ந்த சங்கப்பரிவாரத்தைச் சார்ந்தவர்கள். இப்படி நாம் சொல்வதற்கான காரணம், சம்சவ்தா (எக்ஸ்பிரஸ்) ரெயில் வண்டி குண்டு வெடிப்பின் தீர்ப்பு சொல்லப்பட்டது மார்ச்சு 20, 2019 தீர்ப்பு வெளியானது. மார்ச்சு–29, 2019.

ஆனால், மத்திய மந்திரி இராஜ்நாத் சிங்–இன் அறிவிப்பு வந்தது. மார்ச்சு 20,2019.

அதாவது தீர்ப்பு வெளியாவதற்கு முன்னரே (9 நாட்களுக்கு முன்னரே) அவர் மேல்முறையீடு இல்லை என அறிவித்துவிட்டார். இது இந்த அறிவிப்பு எல்லாமே ஒரு திட்டத்தோடுதான் நடக்கின்றது என்பதை அறிவுறுத்துகின்றது.

'NIA' என்ற தேசியப் புலனாய்வு முகமை, மேல் முறையீட்டுக்குச் செல்லவில்லை என்றாலும், குடிமகன்களில் யார் வேண்டுமானாலும் மேல் முறையீட்டுக்குச் செல்லலாம் அல்லது இந்தக் குண்டு வெடிப்பில் இறந்தவர்களில் ஒருவருடைய குடும்பத்தவர் யாரேனும் செல்லலாம். வழக்கை மறு விசாரணைக்கு உட்படுத்திட சொல்லலாம். அவ்வாறு யாரேனும் மேல் முறையீட்டுக்குச் சென்றால், அதில் அமைச்சர் ராஜ்நாத் சிங்–ஐயும் இணைக்கலாம். அவரை எதிர் மனுதாரர்களில் ஒருவராக ஆக்கிடலாம். அவருடைய பொறுப்பற்ற அறிவிப்பைக் கூட, வழக்கை மறு விசாரணைக்கு உட்படுத்திட வேண்டிய காரணங்களுள் ஒன்றாகக் குறிப்பிடலாம்.

## மாலேகான் குண்டு வெடிப்பு 2006. இதில் கைது செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம்கள் 5 வருடங்களுக்குப்பின் விடுதலை

i) 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் 8–ஆம் நாள், மராட்டிய மாநிலத்திலுள்ள மாலேகான் என்னுமிடத்தில் 13.50 மணிக்கு மதியம் 1 மணிக்கு 50 நிமிடத்திற்கு நான்கு குண்டுகள் வெடித்தன. மூன்று குண்டுகள் ஹமீதிய்யா மஸ்ஜித்–இலும் படா கபருஸ்தானிலும், ஒரு குண்டு முஷாவராத் சவூக் என்னுமிடத்திலும் வெடித்தன. இதில் 31 பேர் இறந்தார்கள். 312

பேர் காயமடைந்தார்கள்.

ii) தொடக்கத்தில் அங்குள்ள காவல் துறையினர் இந்த வழக்கை விசாரித்தார்கள். அது சரியான திசையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அவர்கள் சில முக்கியமான தடயங்களைக் கண்டுபிடித்தார்கள். ஆனால் மத்திய உளவுத்துறை திடுதிப்பென புலன் விசாரணையில் தலையிட்டது. இதற்காக தங்களுடைய கைப்பாவை கே.ஆர்.ரகுவான் ஷூ என்பவரை பயன்படுத்தியது. இந்த ரகுவான் ஷூ அப்போது மராட்டிய மாநிலத்தின் தீவிரவாதத் தடுப்புக் காவல் பிரிவில் ATS : Anti Terrorism Squad இருந்தார்.

இவரை கையிலெடுத்த மத்திய உளவுத்துறை (IB : Intelligence Bureau) வழக்கை தலைகீழாக மாற்றியது. அப்பாவி முஸ்லிம் இளைஞர்களைக் கைது செய்தது. அவர்கள் பின்வரும் அப்பாவி முஸ்லிம்களைக் கைது செய்தார்கள். பின்னர் அவர்களுக்கெதிராக சாட்சியங்களை உருவாக்கினார்கள்.

1) நூருல்லாஹ் ஷம்சுதாஹ்

2) ஷபீர் அஹ்மத் மசீயுல்லாஹ் ரஹ்மத் துல்லாஹ்

3) ராசிஸ் அஹ்மத் ராஜாப் அலீ மன்சூரி

4) டாக்டர். சல்மான் பார்சி அப்துல் லத்தீப் அய்மி

5) டாக்டர் ஃபரோக் இக்பால், அஹ்மத் மக்தூமி

6) ஷேஹ் முஹம்மத் அலீ ஆலம் ஷேஹ்

7) ஆசிஃப்கான் @ ஜாப்பர்கான் பஷீர்கான்

8) முஹம்மத் ஷாஹித் அப்துல் மஜீத் அன்சாரி.

9) அப்ரார் அஹ்மத் முமீன் குலாம் அஹ்மத்

iii) எனினும் இது ஒரு பெரிய அநியாயம் என அனைத்துத் தரப்பு மக்களும் எதிர்ப்புகளை அள்ளிக் கொட்டினார்கள். ATS என்ற தீவிரவாத தடுப்புப் படைக்கு எல்லா தரப்பிலிருந்தும், எதிர்ப்புகள் வந்து குவிந்தன். இந்த எதிர்ப்புகள் வலுக்கவே வழக்கு CBI - என்ற மத்திய புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டது.

மத்திய புலனாய்வு துறையிடம் வழக்கை ஒப்படைத்திட வேண்டியது வரும் என அறிந்ததும், மத்திய புலனாய்வுத் துறையிடம் வழக்கை ஒப்படைப்பதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னால் (ATS) தீவிரவாத தடுப்புப் படை குற்றப் பத்திரிகையை அதிரடியாகத் தாக்கல் செய்தது. அதில் இந்த அப்பாவி முஸ்லிம்களே குற்றவாளிகளாகக் காப்பாற்றப்பட்டார்கள். பின்னர் மத்திய புலனாய்வுத் துறை இந்த வழக்கை மீண்டும் புலனாய்வுக்கு உட்படுத்தியது என்றாலும், வெளியே சொல்லப்படாத சில காரணங்களுக்காக மத்திய புலனாய்வுத் துறையும், (ATS) இன் அதே குற்றப் பத்திரிகையையே ஆதரித்தது.

ஆனால் அந்தக் குற்றப்பத்திரிகை மிகவும் மோசமான சாட்சியங்களின் கீழ் தயாரிக்கப்பட்டது படிப்பவர்கள் சிரிப்பார்கள் என்ற அளவிலேயே அது இருந்தது. நகைப்பிற்குரிய அந்தப் பகுதிகள் என்னவெனில் அந்தக் குற்றப் பத்திரிகையை தயாரிக்க உதவிய சாட்சியங்கள்.

1) காவல்துறையினரின் கைகளில் இருந்த நான்கு பேரிடம் வாங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள். இவை அவர்களைச் சித்திரவதைச் செய்து வாங்கியவை.

இந்த வாக்குமூலங்களை அவர்கள் பின்னர் மறுத்தனர். நீதிமன்றத்தில் எங்களுடையது அல்ல என்றார்கள்.

2) Cr.P.C. என்றகிரிமினல்புரஜுவர்கோடு– குற்றவியல் தண்டனை முறைமை பிரிவு 165 கீழ் சாட்சியங்களின் கீழ் வாங்கப்பட்ட வாக்குமூலங்கள். இந்த சாட்சியங்கள் யார்? யார்? என்பதை கடைசி வரை சொல்லவில்லை.

3) ஷபிர் மசீயுல்லாஹ்வின் ஆலையில் ஆர்.டி.எக்ஸ் வகை பொருட்களின் வாடை இருந்தது என கட்டுக்கதை. இன்னும் இவை போன்றவை

4) இதில் வெளிப்படும் உண்மை என்னவெனில் ATS என்ற தீவிரவாதத் தடுப்புப் படையும், CBI என்ற மத்திய புலனாய்வு முகமையும் இந்த மொத்த வழக்கையும் முஸ்லிம்கள் மேல் போட வேண்டும் என்ற நோக்கிலேயே காய்களை நகர்த்தினார்கள். இதில் அவர்கள் வேறு



எந்தக் கோணத்திலும் விசாரிக்க தயாராக இல்லை.

ஹேமந்த் கர்கரே அவர்கள் அபிநவ்பாரத் போன்ற அமைப்புகளின் கைவரிசைதான் எனச் சுட்டிக் காட்டிய பின்னரும், இதுவே நடந்திருக்கின்றது. அபிநவ் பாரத்–இன் வேலைதான் இது என்பதை ஹேமந்த் கர்கரே அவர்கள் 2008 ஆம் ஆண்டே சுட்டிக் காட்டினார்கள்.

மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கு 200–ஐ (ATS : Maharashtra Cr.No. 18/2008) ஹேமந்த் கர்கரே அவர்கள், ஓர் உண்மையை தீர்க்கமாக அறிவுறுத்தினார். அதில் அபிநவ்பாரத் என்ற இந்துத்துவ தீவிரவாத அமைப்புத்தான் மாலேகானில் நடந்த இரண்டு குண்டு வெடிப்புகளையும் நத்தேத்–இல் (மஸ்ஜித்–இல்) நடந்த குண்டு வெடிப்புகளையும் நடத்தினார்கள். இந்த அமைப்பைச் சார்ந்த 54 பேர் 2001 நாக்பூரில் வைத்து பயிற்சி எடுத்திருக்கின்றார்கள். குண்டுகளைத் தயாரிக்கவும், அவற்றை வெடிக்கச் செய்யவும். (ஆதாரம் மராத்தி நாளிதழ் 'Sakal' பூனா பதிப்பு 10–நவம்பர், 2008)

ஆனால் ஹேமந்த் கர்கரே 26/11 மும்பைத் தாக்குதலில் கொலை செய்யப்பட்டுவிட்டப் பின்னர், இது ஒட்டு மொத்தமாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. பிணை வாங்குவதற்கு இந்த அப்பாவி முஸ்லிம்களுக்கு மனு போட்ட போதெல்லாம் அதனை இந்த காவல்துறையினர் கடுமையாக எதிர்த்தார்கள். அதனால் அவர்களுக்குப் பிணை கிடைக்காமலே போய்விட்டது.

ஆனால் மத்திய உளவுத்துறையும் (IB) மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புப் படையும் (ATS) உண்மையான குற்றவாளிகளை அதிக நாட்கள் மறைத்து வைத்திட இயலவில்லை. ஏனெனில் ஒரு மூத்த ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுவாமி அசீமானந்தா என்பவர் தானாக முன்வந்து தந்த வாக்குமூலங்கள். இவர் ஹைதராபாத் மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பு இவற்றில் குற்றம் சாட்டப்பட்டவர். இவர் முதன்மை நீதிபதி ஒருவரிடம் டிசம்பர் 2010, ஜனவரி – 2011 ஆகிய நாட்களில் ஒப்புதல் வாக்குமூலங்களைத் தந்தார். அதில் தானும், தன்னோடு உள்ள தீவிரவாதிகளுந்தான் மாலேகான் குண்டு வெடிப்பு 2006 குண்டு வெடிப்பை நிகழ்த்தியவர்கள் எனக் கூறினார்.

ஆனாலும், நவம்பர் – 2011 வரை அந்த அப்பாவி முஸ்லிம் இளைஞர்களுக்கு பிணை கிடைக்கவில்லை. காரணம் மத்திய உளவுத்துறையும் (IB) மராட்டிய மாநில காவல்துறையும், அரசாங்கங்களுக்கு அழுத்தங்களைத் தந்து கொண்டிருந்தன. நீதி மன்றங்களுக்குத் தவறான தகவல்களைத் தந்து கொண்டிருந்தன. காரணம் இந்த அப்பாவி முஸ்லிம்கள் பிணையில் விடுவிக்கப்பட்டால், எல்லா குண்டு வெடிப்பு வழக்குகளிலும் மக்கள் மறு புலனாய்வைக் கோருவார்கள். அத்தோடு நாடெங்கும் சிறைகளில் சிக்கித் தவிக்கும் அப்பாவி முஸ்லிம்கள் (ஆயிரக் கணக்கில்) விடுதலை அடைவார்கள். முடிவில் மத்திய உளவுத்துறையின் விளையாட்டுக்கள், (அதாவது குண்டு வைக்கும் சதிகள்) அனைத்தும் வெளிவந்துவிடும்

– இன்ஷா அல்லாஹ் தொடரும்.




# கொரோனாவில் கற்றுக்கொண்டது என்ன?

இரவு தூங்கப் போகும்போது நிம்மதியான ஓர் உலகத்தில் இருந்துவிட்டு, விடிந்ததும் பார்த்தால் வேறொரு பயங்கர உலகத்தில் இருப்பது போன்ற பிரமை எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கும்.

கோடை வந்தாலே ஊட்டி, கொடைக்கால் என்று மலை வாழிடங்களில் கூட்டம் குவியும். இன்று வாசலைத் தாண்டி வீதிக்கு வரவே மக்கள் அஞ்சும் சூழலில், அத்தனை சுற்றுலா தலங்களும் வெறிச்சோடிக் கிடக்கின்றன. இங்கே மட்டு மில்லை... உலகின் பெருமைக்குரிய அத்தனை அடையாளங்களும் ஆளில்லாமல் காட்சி தருகின்றன. ஈஃபிள் டவர், தயாகரா அருவி என எங்கும் செல்ல மக்கள் நடுங்குகிறார்கள்.

சீனப் பெருஞ்சுவரை சென்று பார்த்து 'உலக அதிசயம்' என்று வியப்பதற்கு மக்கள் தயாராக இல்லை. பாதுகாப்பான அந்தக் கோட்டைச் சுவரைத் தாண்டி, கொரோனா வைரஸ் உலகம் முழுக்க போய்ச் சேர்ந்துவிட்டது.

"வழி மறந்து போச்சா? இத்தனை நாட்களாக ஏன் என்னைப் பார்க்க வரவில்லை?" என்று வழக்கமாகக் கோபித்துக்கொள்ளும் நண்பர் களும் உறவினர்களும் இப்போது மாறிவிட் டார்கள். "யாரும் என்னைப் பார்க்க வர வேண் டாம், தொலைபேசியில் நலம் விசாரித்தலாலே போதும்" என்ற பதறுகிறார்கள்.

நெருக்கமானவர்களைப் பார்த்தால் அரவ ணைப்பதும், குழந்தைகளை செல்லம் கொஞ்சி முத்தமிடுவதும் பலரின் வழக்கம். அன்பைப் பரிமாறும் இந்தப் பழக்கமே இன்று ஆபத்தான ஆயுதமாகத் தெரிகிறது. தனித்திருப்பதும், விலகி இருப்பதுமே இன்று அன்பைச் சொல்லும் வழிகளாக இருக்கின்றன.

இப்படி நம்ப முடியாத பல மாற்றங்கள் உலகில் நிகழ்ந்தன. இந்தியாவை 'அழுக்கு தேசம்' என கிண்டல் செய்வார்கள் அமெரிக்கர்கள். இப்போதோ, அமெரிக்காவைவிட இந்தியா பாதுகாப்பான நாடாக இருக்கிறது. இங்கு சுற்றுலா வந்து சிக்கிக் கொண்ட அமெரிக்கர்கள் பலர், "எங்கள் விசாவை நீடியுங்கள், இங்கேயே நிம்மதியாக இருந்துவிட்டு, அமெரிக்காவில் நிலைமை சீரானதும் திரும்பிப் போகிறோம்" என கெஞ்சுகிறார்கள்.

ஆப்ரிக்க நாடுகளில் வசிப்பவர்களுக்கு, வளமான ஐரோப்பிய நாடுகள் மீது ஆசை இருக் கும். சோமாலியாவில் பிரதமராக இருந்த ஒருவர், பதவி போன பிறகு 'வசதியாக வாழலாம்' என இங்கிலாந்தில் குடியேறினார். அவர் கொரோனா வில் இறந்துவிட்டார். சோமாலியாவில் யாருக் கும் ஆபத்து இல்லை.

> “இந்த உலகத்தையே ஒரே நாளில் அழித்துவிட முடிகிற அளவுக்கு ஆயுதங்கள் அமெரிக்காவிடம் இருக்கிறது. ஆனால், தன் நாட்டு மக்களைக் காபபாற்றும் அளவுக்குக்கூட மருந்துகளையோ, மருத்துவ உபகரணங்களையோ அந்த நாடு வைத்திருக்கவில்லை. ”

மெக்சிகோ நாட்டிலிருந்து பலர் திருட்டுத் தனமாக அமெரிக்காவில் வந்து குடியேறு கிறார்கள் என்று குற்றம் சாட்டி இரண்டு நாடுகளின் எல்லையில் சுவர் கட்ட ஆரம்பித்தார் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப். இப்போது மெக்சிகோவில் பெரிய பாதிப்பு இல்லை. கொரோனாவிலிருந்து தப்பிக்க நினைக்கும் அமெரிக்க மக்கள் பலர், இந்த சுவரைத் தாண்டி ரகசியமாக மெக்சிகோவுக்குப் போகிறார்கள்.

கொரோனாவுக்கு சிகிச்சை பெறும் நோயாளி பிழைத்துக் கொள்கிறார். அவருக்கு சிகிச்சை தரும் மருத்துவர் எதிர்பாராத விதமாக உயிரிழக்கிறார்.

'இயற்கையான வாழ்க்கை முறையே சிறந்தது' என்று முதியோர்கள் சொன்னால் பலர் சிரிப்பார்கள். இன்று, 'இயற்கையான வாழ்வில் கிடைக்கும் நோய் எதிர்ப்பு சக்திக்கு ஈடு இணை எதுவும் இல்லை' என்பதை உலகம் உணர்ந்து விட்டது.

இந்த உலகத்தையே ஒரே நாளில் அழித்துவிட முடிகிற அளவுக்கு ஆயுதங்கள் அமெரிக்காவிடம் இருக்கிறது. ஆனால், தன் நாட்டு மக்களைக் காபபாற்றும் அளவுக்குக்கூட மருந்துகளையோ, மருத்துவ உபகரணங்களையோ அந்த நாடு வைத்திருக்கவில்லை.

கொரோனா பற்றி பயம் உச்சத்தில் இருக்கும் இந்த நேரத்தில் அதிகாரம், செல்வாக்கு, பணம் என்று எல்லாமே மதிப்பிழந்துவிட்டன. அணு ஆயுதங்களை வைத்திருக்கும் நாட்டைவிட, அதிக மருத்துவமனைகளை வைத்திருக்கும் நாடே வல்லரசாகத் தெரிகிறது. கொரோனா நோயாளிகள் நலம்பெற உதவும் தீவிர சிகிச்சைப் பிரிவே இப்போது நட்சத்திர ஹோட்டல் அறையைவிட மதிப்பானதாக உணரப்படுகிறது. எல்லா தொழில்நுட்பக் கருவிகளை விடவும், சுவாசத்துக்கு உதவும் வெண்டிலேட்டரே உயர்ந்ததாகத் தெரிகிறது.

இதிலிருந்து நாம் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ளலாம். 'அடுத்தவர்களை அழிக்க நினைப்பவர்கள் பலரும், தங்கள் பாதுகாப்பு பற்றி நினைப்பதே இல்லை. அடுத்தவர்களைக் காப்பாற்ற நினைப்பவர்களுக்கு எப்போதும் வீழ்ச்சி இல்லை' – உயரிய தத்துவமான 'வாழு – வாழ விடு' என்பதை உலகம் இன்று புரிந்து கொண்டது.

விலங்குகளை எல்லாம் வீதிகளில் நடமாட விட்டு, மனிதர்களை வீட்டுச்சிறைக்குள் அடைத்திருக்கும் இந்த சூழல் நமக்கு ஓர் உண்மையை உணர்த்துகிறது. மனிதர்களின் நடமாட்டம் அடங்கிப்போன இந்த நேரத்தில் கங்கை முதல் காவிரி வரை அத்தனை நதிகளும் தூய்மையடைந்து வருவதும் ஓர் உண்மையை உணர்த்துகிறது.

மனித இனம் இல்லாவிட்டால் இந்த பூமியும், நிலம், நீர், காற்று என அத்தனையும் நன்றாக இருக்கும். இந்த பூமியும், அதன் இயற்கையும் ஆரோக்கியமாக இயங்குவதற்கு மனித இனம் தேவையில்லை. 'நீ எனக்கு எஜமானனாக இருக்க ஆசைப்படாதே... என் விருந்திரனராக இந்த பூமியில் தங்கி இரு" என்று இயற்கை நமக்கு உணர்த்துகிறது.

இதை மனித இனம் புரிந்துகொண்டால், நம் எதிர்கால சந்ததிகள் இப்படி கொரோனா போன்ற பாதிப்புகள் இல்லாமல் ஆரோக்கியமாக வாழலாம்.

## கொரோனாவை நேர்மறையாக இப்படிப் பார்க்கலாம்....

### கொரோனா தாக்கி இறந்தவர்களை விட பிழைத்தவர்கள் பல மடங்கு அதிகம்.

### முதியவர்கள் பலரும் இப்படிப் பிழைத்திருக்கிறார்கள்.

☛ ஈரான் நாட்டின் செம்னான் பல்கலைக்கழக மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 103 வயது மூதாட்டி ஒருவர், வைரஸ் தொற்று நீங்கி விடு திரும்பியுள்ளார். இதேபோல சீனாவிலும் 103 வயது பெண்மணி ஒருவர் ஆறே நாட்களில் குணமடைந்து வீடு திரும்பினார். இவர்கள் இருவருமே கொரோனா தொற்றிலிருந்து தப்பிய முதிர்ந்த நபர்கள் ஆகியுள்ளனர்.

☛ சீனாவின் வூகான் பகுதியில் 100 வயது முதியவர் ஒருவர், அல்ஸீமர் நோய், உயர் ரத்த அழுத்தம், இதயக் கோளாறு என ஏராளமான

பிரச்சனைகளுடன் இருந்தவருக்குக் கொரோனாவும் வந்தது என்றாலும் அவரும் பூரண நலம் பெற்று நம்பிக்கைத் தந்துள்ளார்.

☛ எர்மாண்டோ பைவேடா, 99 வயதாகும் இந்த பிரேசில் நாட்டு முதியவர், இரண்டாம் உலகப் போரில் பங்கேற்ற ராணுவ வீரர். இப்போது கொரோனா தாக்கி நலமுடன் மீண்டு வந்துள்ளார். "போர்க்களத்தில் செய்ததைவிட கொரோனா நோயுடன் போரில் நடத்தியது பெரும் போராட்டம். போரில் நமக்கு வாழ்வா, மரணமா என்பது நிமிடங்களில் தெரிந்துவிடும். ஆனால் இங்கு என்னை வாழ வைக்க டாக்டர்களும் மருத்துவப் பணியாளர்களும் பெரும் போராட்டம் நடத்தினர். இறுதியில் நான் வெற்றியுடன் வீடு திரும்பினேன். எல்லோரும் என்னைப் போல நலம்பெற வேண்டும்" என அவர் நம்பிக்கையுடன் சொல்கிறார்.

☛ கேரளாவில் முதன்முதலில் கொரோனா தொற்றுக்கு ஆளானவர்கள், 98 வயது முதியவர் தாமஸ் மற்றும் அவரின் மனைவி மரியம்மா, பத்தளம்திட்டா பகுதியைச் சேர்ந்த இந்தத் தம்பதியின் மகன் இத்தாலியிலிருந்து கொரோனா தொற்றுடன் வந்தார். அவரிடமிருந்து பெற்றோருக்குத் தொற்றிக் கொண்டது. கோட்டயம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவர்கள் சிகிச்சை பெற்றனர். இதய நோயாளியான தாமஸ் மூச்சுவிடவே முடியாத ஆபத்தான நிலைக்குப் போய் வென்டிலேட்டர் பொருத்தப்பட்டு சிகிச்சை பெற்றார். மரியம்மாவுக்கு பல பிரச்சனைகள் இருந்தன என்றாலும், இருவரும் பூரண நலம் பெற்று வீடு திரும்பி, எல்லோருக்கும் நம்பிக்கை தந்துள்ளனர்.

☛ சென்னையில் ஆரம்பக் கட்டத்தில் பரிசோதிக்கப்பட்டு கொரோனா நோயாளியாக அடையாளம் காணப்பட்ட 74 வயது பெண்மணி, சில நாட்களிலேயே உடல்நலம் பெற்று வீடு திரும்பியுள்ளார்.

எனவே, புள்ளி விவரங்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். தனிப்பட்ட மனிதர்களின் நம்பிக்கையும் மன உறுதியும் அதிசயங்களை நிகழ்த்தும். இந்த நம்பிக்கையுடன் கொரோனாவை வெல்வோம். ●

– நன்றி : முதுமை எனும் பூங்காற்று

## வெள்ளை கிறிஸ்தவ மீடியாக்களின் குதர்க்க பிரச்சாரம்

செப்டம்பர்– 27 –2020 முதல் 44 நாட்களாக நடந்து வந்த அஜர்பைஜான் மீதான அர்மீனியாவின் ஆக்கிரமிப்பு போரில், அர்மீனிய இராணுவத்தின் தளவாடங்கள் மீது மட்டுமே எதிர் தாக்குதல் நடத்தி அஜர்பைஜான் போரை நடத்தியது. இதனால் பெருமளவு அர்மீனிய கிறிஸ்துவ மக்களின் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது. இது சர்வதேச யூத – வெள்ளை கிறிஸ்தவ மீடியாக்களுக்கு பெரும் சலிப்பை கொடுத்தன.

பொதுவாக, இந்த மீடியாக்கள் தாங்கள் விரும்பும் நாடுகள் வென்றால் அதன் வெற்றியை தொடர்ச்சியாக பிரச்சாரம் செய்து சாதனையாக நியாயப் படுத்துவார்கள். இதுவே அவர்கள் விரும்பும் நாடுகள் தோற்க நேரிட்டால் ,அதன் குடியிருப்பு இடிபாடுகள், பெண்கள், குழந்தைகள் படும்பாடுகள் என படம்பிடித்து கரிசனத்தை ஏற்படுத்தும் விதமாக உலக மக்களின் உள்ளங்களை தங்கள் பக்கம் திருப்புவார்கள்.இதையெல்லாம் இவர்களின் ஆயுதங்களே செய்துமுடித்திருக்கும் .

ஆனால் இப்போரில் அஜர்பைஜான் உலக கிறிஸ்துவ சூழ்ச்சியாளர்களுக்கு பிடி கொடுக்காத வகையில் யுத்த தந்திரங்களை பின்பற்றி வெற்றி பெற்றிருக்கிறது.

வேறு வழியில்லாத ரஷ்யா மற்றும் மேற்கத்திய கிறிஸ்தவ நாடுகளின் வெகுஜன பத்திரிக்கைகள் நகர்னோ–கரபாக் பகுதியை அஜர்பைஜானுடையது என தகவல் தராமல், 'பிரச்சினைக்குரிய இடம்' என குதர்க்கவாதம் செய்து செய்திகளை பரப்பி வந்தன . இப்படி தங்கள் சிலுவை சார்பை வெளிபடுத்தின.இப்பகுதி அஜர்பைஜானுக்கு சொந்தமானது என ஐ.நா. வும் (ஆச்சரியம் தான் ) ஒப்புக் கொண்டதோடு, அப்பகுதியை அஜர்பைஜானுக்கு ஆர்மீனியா திருப்பி ஒப்படைக்க உத்தரவிடும் 6 தீர்மானங்களை இதுவரை நிறைவேற்றி உள்ளது கவனிக்கத்தக்கது. –ஜாகிர்.

# நீதித்துறையில் அரசியல் தலையீடு

நூறு குற்றவாளிகள் தப்பித்தாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என்று கூறுவார்கள். ஆனால் இன்று நமது நீதித்துறையின் நிலை மிக மோசமாக உள்ளது. சட்டம், நீதி, சாட்சியத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவதற்கு மாற்றமாக 'சமூகத்தின் கூட்டு மனசாட்சியை திருப்திபடுத்துவதற்கும் ஆட்சியாளர்களை திருப்திபடுத்துவதற்கும் தீர்ப்புகள் (மாற்றி) வழங்கப்படுகிறது.

"JUDGES SHOULD BE LIONS. BUT YET LIONS UNDER THE THRONE"

நீதிபதிகள் சிங்கங்களைப் போன்று செயல்பட வேண்டும். ஆனாலும் சிங்கங்கள் மன்னனின் சிம்மாசனத்திற்குக் கீழ்ப்பட்டே செயல்பட வேண்டும் என்கின்ற பிரான்ஸிஸ் பேகன் கருத்திற்கு ஒப்ப இன்று நீதித்துறை செயல்படுகின்றது.

இந்திய நீதித்துறை வரலாற்றில் இதுவரை நடந்திராத இரண்டு நிகழ்வுகள் சமீபத்தில் நடந்தது. தலைமை நீதிபதியாக இருந்த ஒருவர் மீது இதுவரை பதவி நீக்கத் தீர்மானம் கொண்டு வரப்படவில்லை. முதல் முறையாக அந்தப் பெருமையைப் பெற்றவர் தீபக் மிஸ்ரா, அடுத்து மூத்த நான்கு நீதிபதிகள் பத்திரிகை யாளர்களைச் சந்தித்து இந்திய உயர்நீதித்துறை அழுகி நாற்ற மடித்துக் கிடப்பதை சொல்ல வேண்டியநிலைமைஏற்பட்டது. "சுதந்திரமான நீதித்துறை இல்லாமல் ஜனநாயகம் நீடிக்க முடியாது" என்று அவர்கள் கூறினார்கள்.

தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா மீது பதவி நீக்கத் தீர்மானம் கொண்டுவர முயன்றபோது அவர்கள் சுட்டிக் காட்டிய ஐந்து வழக்குகளில் ஒன்று. ஷராபுதீன் அவர் மனைவி கௌசர் பீவி மற்றும் உதவியாளர் பிரகாபதி ஆகியோர் போலி என்கவுண்டரில் கொல்லப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதி பி.எச்.லோயா அவர்களின் மர்மமான மரணம் பற்றியது.

அமித்ஷா குஜராத்தில் மோடி அமைச் சரவையில் அமைச்சராக இருந்த போது அவரது ஆணையின் பேரில் நடத்தப்பட்ட போலி என்கவுண்டர் படுகொலை அது.

டெல்லியில் நடந்த NRC, CAA –க்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போது நடை பெற்ற கலவரத்தை பற்றி விசாரித்த நீதிபதி முரளிதர் கலவரத்தை தாண்டி பலரது உயிர் பறிபோவதற்கு காரணமான பி.ஜே.பி.யின் முக்கிய பிரமுகர்களான கபில் மிஸ்ரா, அனுராக்தாக், கூர்பர், வேஸ்சர்மா மற்றும் ஏனையோர் மீது முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய நீதிபதி முரளிதர் காவல் துறைக்கு உத்தரவிட்டார். அன்றைய தினமே அவர் இரவோடு இரவாக பணி மாற்றம் செய்யப்பட்டார்.

பாபர் மஸ்ஜித் தீர்ப்பு வருவதற்கு முன்ன தாகவே உச்ச நீதி மன்றம் நம்முடையது தான் அயோத்தியில் ராமர் கோவிலை கட்டியே தீருவோம் எனக்கூறிய உத்திரப் பிரதேச பா.ஜ.க. அமைச்சர் முகுத் பிகாரி வர்மா.

ஒரு சமூகம் கட்டுக்கோப்பாக திகழ்வதற்கு அங்கு நீதி நிலை நாட்டப்பட வேண்டும். மனித மனோ இச்சையினால் உருவாக்கப்பட்ட சட்டங்களால் நீதியை நிலைநாட்ட முடியாத மனிதனைப் படைத்த அல்லாஹ் அவனுடைய சட்டத்தால் மட்டுமே நீதியை நிலை நாட்ட முடியும்.

"(நம்பி உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட) அமானிதங்களை அவற்றிற்குரியவர்களிடம் நீங்கள் ஒப்படைக்க வேண்டுமென்றும், மனிதர் களிடையே தீர்ப்பு கூறினால் நீதமாகவே தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் உங்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் கட்டளையிடுகின்றான். நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு எதனை உபதேசம் செய்கிறானோ அது மிக்க நல்ல தாகும். நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகாவும் பார்ப்பவனாகவும் இருக்கின்றான்." (அன்னிஸா – 58)

"நம்பிக்கையாளர்களே நீங்கள் நீதியின் மீது நிலைத்திருப்பவர்களாக அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாக இருங்கள். (அச்சாட்சி) உங்களுக்கோ அல்லது (உங்கள்) பெற்றோ

ருக்கோ விரோதமாக இருப்பினும் சரியே (நீங்கள் யாருக்காக சாட்சியம் கூறுகிறீர்களோ) அவர் செல்வந்தராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் (உண்மையான சாட்சியம் கூறுங்கள்) ஏனெனில் அல்லாஹ் அவ்விருவருக்கும் (அவர்களை காப்பதற்கு) மிக உரியவன். எனவே நியாயம் வழங்குவதில் மனோ இச்சையைப் பின்பற்றி விடாதீர்கள். மேலும் நீங்கள் மாற்றிக் கூறினாலும் அல்லது (சாட்சிக் கூறுவதைப்) புறக்கணித்தாலும் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் நன்கறிந்தவனாகஇருக்கின்றான். (அன்னிஸா–135)

ஆயிஷா (ரழி) அவர்கள் கூறியதாவது : மக்ஸீமி குலத்தைச் சேர்ந்த ஒரு பெண் திருடி விட்டாள் என்ற செய்தி குறைஷியருக்குக் கவலையளித்தது. அப்போது அவர்கள் அந்த பெண் தொடர்பாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் (பேசி தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கச்) சொல்வது யார்? என்று கேட்டுக் கொண்டார்கள். பிறகு ''அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் செல்லப் பிள்ளைகள் உசாமா பின் ஸைனதைத் தவிர வேறு யார் துணிந்து பேச முடியும்? என்று சொன்னார்கள். அவ்வாறே உசாமா (ரளி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் (பரிந்து) பேசினார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அல்லாஹ் விதித்த தண்டனைகளில் ஒன்றின் விஷயத்திலா (அதை நிறைவேற்றாமல் விட்டு விடுமாறு) நீ பரிந்துரைக்கிறாய்? என்று கேட்டு விட்டுப் பிறகு எழுந்து நின்று பின்வருமாறு உரையாற்றினார்கள்.

''மக்களே! உங்களுக்கு முன்னால் வாழ்ந்த (பனு இஸ்ராயில்) மக்கள் அழிந்து போனதற்குக் காரணமே (அவர்களிடையே உள்ள) உயர் குலத்தார் திருடிவிட்டால் அவர்கள் அவரை (தண்டிக்காமல்) விட்டுவிடுவார்கள். அவர்களிலுள்ள பலவீனர்கள் திருடிவிட்டால் அவர்கள் மீது தண்டனையை நடைமுறைப் படுத்துவார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக (இந்த) முஹம்மதின் மகள் : பாத்திமா திருடியிருந்தாலும் நான் அவரது கையை–த் துண்டித்தே இருப்பேன்.

கலீஃபா உமர் (ரழி) ஆட்சி காலத்தில் உபை இப்னு கஅப் (ரழி) அவர்கள் கலீஃபா உமர் (ரழி) அவர்கள் மீது வழக்கொன்றைத் தொடுத்தார். இவ்வழக்கை விசாரித்து தீர்ப்பு அளிக்குமாறு இருவரும் ஸைத் பின் ஸாபித்திடம் சென்றனர். நீதிபதியாக இருந்த ஸைத், கலீஃபா உமர் (ரழி) அவர்களுக்கு தன் இருக்கையில் இடம் அளித்து உபசரித்தார் கலீஃபா உமர் (ரழி) அவர்கள் நீர் ஆரம்பமாகவே ஓர் அநீதியைச் செய்துவிட்டீர் என்றார்.

நான் என்னுடைய எதிர்க்கட்சிகாரருடனே அமர்ந்து கொள்கிறேன் என்று சொல்லி உபை இப்னு கஅப் அவர்களுடன் அமர்ந்தார் ஸைத் பின் ஸாபித் அவர்கள். உபை இப்னு கஅப்–யிடம் உமர் (ரழி) மீது கொடுத்த வழக்கை விட்டுக் கொடுக்கும்படி சிபாரிசு செய்தார். உடனே உமர் (ரழி) அவர்கள் சினம் கொண்டு இது நீர் செய்த இரண்டாவது அநீதி. உமது பதவியைப் பற்றி நான் சிந்திக்க வேண்டியுள்ளேன் என்று கண்டித்துக் கூறிவிட்டுச் சென்றார்கள்.

கலீஃபா அலீ (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் அவரது கவச ஆடை காணாமல் போனது. பிறகு அது கூபா நகரைச் சேர்ந்த கிறிஸ்தவர் ஒருவரிடம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. தனது கவசத்தை மீட்டுத்தருமாறு ஆட்சியாளர் அலீ (ரழி) அவர்கள் நீதி மன்றத்தில் முறையிட்டார். (ராணுவத்தையோ, காவல் துறையையோ, அடிமைகளையோ பயன்படுத்தவில்லை) வழக்கை விசாரித்த நீதிபதி அலீ (ரழி) உடையதுதான் என்பதற்கு சாட்சி கூறினார். கலீஃபா அலீ (ரழி) அவர்களுடைய மகன் ஹஸன் (ரழி) சாட்சி கூறினார். தந்தைக்காக மகன் கூறும் சாட்சி ஏற்றுக்கொள்ளப்படாது எனக்கூறி கலீஃபா அலீ (ரழி) அவர்களின் வழக்கை இஸ்லாமிய நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அலீ (ரழி) அவர்களும் வெறுமென சென்றார்கள். இந்தச் செயலைக் கண்டு மனம் நெகிழ்ந்துபோன கிறிஸ்தவர் உண்மையை ஒப்புக்கொண்டு கவச ஆடையை அலீ (ரழி) அவர்களிடம் ஒப்படைத்தார்.

''நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களை நேசிக்கிறான்'' (அல்ஹுஜிராத் – 9)

கி.பி. 1757– ஜூன் –23 பிளாசிப் போர் (Battle of Plassey). கல்கத்தா அருகில் நடந்தது. வங்காள நவாப் சிராஜுத் தௌலாத்தை சிலுவை ராபர்ட் கிளைவ் தோற்கடித்தான்.

இவ்வெற்றியின் மூலமே இந்திய துணைக் கண்டத்தில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய (East India company) கம்பெனி ஆட்சி அதிகாரத்தில் காலூன்றியது.

சிலுவையின் சிறிய படை, முஸ்லிமின் பெரிய படையை வென்றது. இதற்கு நவாப் சிராஜுத் தௌலாத் அவையிலிருந்த தலைமை தளபதி விலை போனது தான் காரணம்.

ஆனால் இந்த தளபதி பதவிக்காக ஆசைப் பட்டு சிலுவையை அணுகவில்லை. தங்களுடைய வியாபார தொடர்பிலிருந்தவர்களை பயன்படுத்தி தலைமை தளபதியை அணுகியது. ஆசை வார்த்தை காட்டியது. பின்பு தளபதிக்கும் துரோகம் செய்தது என்பது தனி வரலாறு.

இதற்கு இந்த நாட்டில் பல காலகட்டங்களில் வியாபாரத்திற்கென வந்திறங்கிய அர்மீனிய அப்போஸ்தல கிறிஸ்தவர்களின் வழித்தோன்றல்கள் இடைத்தரகர்களாக செயலாற்றினர்.

அலிபாபாவும் 40 திருடர்களும் திரைப் படத்தில் அலிபாபாவின் சகோதரராக நடித்திருக்கும் சாரங்கபாணியின் பேராசைக்கு வெள்ளை கிறிஸ்தவர்களை ( பிரிட்டிஷ், டச்சு, பிரான்சு, போர்ச்சுகீஸ்.....) உதாரணபடுத்தலாம்.

ஆங்கிலத்தில் idioms (அர்த்தத்தை நேரடியாக குறிப்பிடாமல், மறைமுகமாக வேறொரு பொருளால் எடுத்துக்காட்டும் வரிகள்) ஒன்று உண்டு. அதாவது,

" IT'S RAINING CATS AND DOGS !"

இதற்கு 'பூனை மற்றும் நாய்கள் மழையாக பொழிந்தன' என்று நேரடி அர்த்தம் எடுக்க முடியாது .இந்த வாக்கியம் பிரபலமானதற்கு ஒரு வரலாறு உண்டு.

தொழில் புரட்சி காலகட்டம் மற்றும் அதற்கு முன்பான காலத்தில் (தோராயமாக 19–ம் நூற்றாண்டு முன்வரை ) இங்கிலாந்தில் மழை பெய்தால் பூனைகளும் நாய்களும் மழை நீரால் அடித்து செல்லப்பட்டு, மனிதர்கள் நடமாடும் தெருமுனைகளில் கொத்துக்கொத்தாக குவியலாக இறந்து கிடக்கும். இது ஏனெனில் அங்கு முறையான சாக்கடை வசதிகள், சாலை வசதிகள் மற்றும் சுகாதார விழிப்புணர்வு இல்லாததால் இந்த நிலை.

இந்த குப்பைகளில் பிறந்து வளர்ந்த வெள்ளை கிறிஸ்தவர்கள், ஆசியா கண்டத்தில் குறிப்பாக அரபுகள், இந்திய துணைக்கண்டம், சீனாவில் நுழையும் வாய்ப்பு கிடைத்தவுடன் 'காஞ்சமாடு கம்புலே புகுந்த' கதையாக எந்த தர்மமும், வரம்புமின்றி பொறாமையுடன், பேராசையுடன் கொள்ளையிட்டு சென்றனர். இதற்கு அர்மீனியர்கள் மதப்பற்றுடன் துணை

# இந்திய வரலாற்றில் அர்மீனியர்களின் துரோகம்



புரிந்தனர் என்பதை விளக்கி தான் புரிய வேண்டு மென்பதில்லை.

தங்கள் இனமாக இல்லை என்றாலும் மத நம்பிக்கைக்கு உகந்த வெள்ளை கிறிஸ்தவர் களிடம் அவர்கள் எந்த தேசிய அடையாளமாக இருந்தாலும் நெருங்கி பழகினர். அவர்களின் சுரண்டும் திட்டங்களுக்கு துணை புரிந்தனர்.

இந்த மணவாடு மனநிலைக்கு முதல் உதாரணம் பிளாசிப்போர். பல அர்மீனியர்களில் குறிப்பாக அரடூன் (Aratoon ) அடைமொழி கொண்ட குடும்பத்தை சேர்ந்தவர்கள் தலைமை தளபதி ஜாபருக்கு ஆசை வார்த்தை காட்டி கிறிஸ்தவ ஆட்சிக்கு துணைபுரிந்தனர்.

இதற்கு தங்களுடைய வியாபார தொடர்பை பயன்படுத்தினர். யாரும் சந்தேகம் கொள்ள மாட்டார்கள் என்பதே இதற்கான அடிப்படை.

60,000 போர் வீரர்களை கொண்ட நவாப் சிராஜ் உத் தௌலா படை வெறும் 3000 போர் வீரர்களை கொண்ட பிரிட்டிஷ் ராபர்ட் கிளைவ் படையிடம் தோற்றது .இதற்கு காரணம் போரின்போது தலைமை தளபதி போரிடாமல் சரணடைந்தது .பின்பு சிராஜ்–உத்–தௌலா பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்த போரில் காலூன்றிய கிறிஸ்தவ ஆட்சி, கிறிஸ்தவர்கள் அல்லாத அனைத்து ஜாதிகளையும், முஸ்லிம்களையும் சுரண்டி செயற்கையாக பஞ்சங்களை உருவாக்கியது. இந்த அர்மீனிய கிறிஸ்தவர்களின் இந்த துரோக சேவை பிரிட்டிஷ் கிறிஸ்தவர்களுக்கு தொடர்ந்து கிடைத்துக் கொண்டே இருந்தது.

அர்மீனிய கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் சேர்ந்து கடல் வியாபாரத்தில் ஈடுபட்டனர். இந்த வியாபாரம் முஸ்லிம்களின் ஆட்சிப் பகுதியில் தான் நடந்தது. தங்கள் பகுதியில் வியாபாரத்தில் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டதால் இன்று யூத கிறிஸ்தவ கூட்டணி செய்வது போல் அவர்களுக்கு எதிராக ஒடுக்குமுறையை கையாண்டு வியாபார உலகத்திலிருந்து முஸ்லிம்கள் விரட்டி விடவில்லை.

அக்காலத்தில் உலகின் பொருளாதார வல்லரசுகளாக சீனாவும், அவுரங்கசீப்பின் இந்திய ஆட்சிப் பகுதியும் திகழ்ந்தது. இதைக்கண்டு வியாபார கேந்திரமான பாலஸ்தீனத்தை

## அஜர்பைஜான் மக்களின் நிலை

அர்மீனியா ஆக்கிரமிப்பு போரில் உயிரிழந்த தீவிரவாதிகள் மற்றும் வீரர்களுக் கான 'ஜெப கூட்டங்களை' நடத்தி வருகிறது. இது சர்ச்சுகள் வழியாக ஒருங்கிணைக்கப் படுகின்றன .இது மக்களை அநீதியின் பக்கம் தூண்டும் செயல்.சாமானிய மக்களுக்கும், தீவிர வாதிகளுக்கும் இடையே வேறுபாட்டை காண முடியாத வகையில் இந்த ஜெபக் கூட்டங்கள் சிலுவை தீவிரவாதிகளை ஏற்படுத்திவிடும்.

அர்மீனிய அப்போஸ்தல கிறிஸ்தவர்கள் (இவர்கள் கிறிஸ்துமஸை ஜனவரி 6–ம் தேதி கொண்டாடுபவர்கள்) போர் வெறிக்காக ஜெபக் கூட்டங்கள் என்ற பெயரில் அநீதிக்கு ஆதரவாக அணிதிரட்டப்படும் போது, அஜர்பைஜான் முஸ்லிம்களோ ஆடிப்பாடி கொண்டாடுவதோடு உணர்ச்சிகளை தணித்துக் கொண்டிருக் கிறார்கள்.

அஜர்பைஜான் ஆட்சியாளர்கள் கற்பனையாக நடப்பில் இல்லாத மதச்சார்பின்மை வாதிகளாக கருதிக்கொண்டு ஆட்சி செய்கிறார் கள். மக்களை நீதியின் பக்கம் அணிதிரட்டும் அனைத்துவிதமான வழிமுறைகளையும் பயன் படுத்தாமல் இருப்பது, எதிர்காலத்தில் பிரச்சி னையை உருவாக்கும்.

–ஜாகிர்

ஆண்ட அரபு முஸ்லிம்கள் பொறாமை கொள்ள வில்லை. வெள்ளை கிறிஸ்தவர்கள் செய்த சூழ்ச்சிகளை போல் செய்து இன்று சீனாவோ, அரபுலகமோ,இந்தியாவோ வல்லரசாகி இருக்கலாம்.

கி.பி 1665–ல் அவுரங்கசீப்பின் தயவில் வங்காளத்தில் முர்ஷிதாபாத்தின் சைதாபாத்தில் அர்மீனியர்கள் தங்களுக்கான தனி குடியிருப்பு களை கட்டி கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

'உண்ட வீட்டிற்கு துரோகம் செய்பவர்கள் அர்மீனியர்கள் '

(ஆதாரம்: The Hindu- Magazine-June-24-201)

–ஜாகிர்



# உலக கிறிஸ்தவ தீவிரவாதிகளின் (TEMPLAR KNIGHTS) கனவை கொன்று புதைத்த அஜர்பைஜான்

நவம்பர், 9– 2020 அர்மீனியாவின் பிரதமர் பஷின்யன் அர்மினிய– அஜர்பைஜான் போர் நிறுத்த அறிவிப்பை (சமாதான அறிவிப்பல்ல) முதலில் உலகிற்கு அறிவித்தார். ஆக போரை துவக்கியவர்கள் முதலில் போர் நிறுத்த அறிவிப்பை அறிவித்தது சரியானதுதான்.

பின்பு இவ்வறிவிப்பை உறுதிப்படுத்தி சில மணிநேரங்கள் கழித்து அஜர்பைஜானும், இதற்கு வழிவகுத்த ரஷ்யாவும் வழிமொழிந்தன.

கடந்த செப்டம்பர் –27– 2020 முதல் கிட்டத் தட்ட 44 நாட்கள் தொடர்ந்த அர்மீனியாவின் ஆக்கிரமிப்புப் போர் முடிவுக்கு வந்தது. இப் போருக்கான அழைப்பை அர்மீனிய மக்களுக்கு செப்டம்பர் மாதத்தின் ஆரம்பத்திலேயே நகோர்னோ–கரபாக் அர்மீனிய அதிகாரிகள் அறைகூவல் விடுத்திருந்தனர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. (Nagorno-karabakh news- RT www.rt.com/trends )

1991– 94 ல் கிட்டத்தட்ட 3– ஆண்டுகள் அர்மீனியா நடத்திய ஆக்கிரமிப்புப் போரில் நகோர்னோ–கரபாக் பகுதியையும் அதை சுற்றி அமைந்த 7 மாவட்டங்களையும் அஜர்பைஜான் இழந்தது.

இவ்வாக்கிரமிப்பு போருக்கு அர்மீனிய அப்போஸ்தல கிறிஸ்தவ மதவாதம் தான் காரணம். நகர்னோ–கரபாக் பகுதி அர்மீனிய கிறிஸ்தவ இனத்தவர்களால் ( கிறிஸ்தவர்களை மட்டுமே அப்படி குறிப்பிடுகிறார்கள். அர்மீனி யர்களில் முஸ்லிம்களும் உள்ளனர். ஆனால் அவர்களை அஜர்பைஜான் குடிகள் என கூறுகின் றனர்) ஆக்கப்பட்டு உள்ளதால், அவர்கள் பிரதான அர்மீனிய நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும் என போர் தொடுத்தார்கள்.

பலமான சோவியத் யூனியனின் (USSR) ஒருபகுதியாக இருந்தவரை அர்மீனிய அப்போஸ் தல கிறிஸ்தவ மதவாதம் ரகசியமாக செயலில் இருந்துள்ளது. 1980–களில் சோவியத் கம்யூனிச கட்டமைப்பு வலுவிழக்க, அர்மீனிய கம்யூனிஸ அரசியல்வாதிகளின் மத தீவிரவாதம் வெளிப் படவே, பொதுமக்கள் மதவெறிகொண்டு எழுந் தார்கள்.

மதம் ஒரு அபின் என்ற காரல்மார்க்ஸ் தோற்றார்.

1990 –ல் சோவியத் கம்யூனிச நாடுகளின் கட்டமைப்பு உடைபட, உடனேயே தன்னை தனிநாடு என அறிவித்துக் கொண்ட அர்மீனியா

ஆக்கிரமிப்புப் போரில் குதித்தது. இதனால் கடந்த 30 வருடங்களாக அர்மீனியாவின் ஆக்கிரமிப்பிலிருந்த பகுதிகளை (நகர்னோ–கரபாக் பகுதி மட்டும் இன்னும் முடிவாகவில்லை) குறிப்பாக 7 மாவட்டங்களை மீட்டுள்ளது அஜர்பைஜான்.

இதற்கு மிகப்பெரிய விலையை கொடுத்தார்கள் அஜர்பைஜான் மக்கள். போர் பகுதி அர்மீனியாவின் ஆக்கிரமிப்பு பகுதிதான். ஆனால் அர்மீனிய சிலுவைகள் பிரச்சினைக்குரிய இடத்தில் போரிடாமல், போருக்கு சம்மந்தமில்லாத பொதுமக்கள் வாழும் அஜர்பைஜான் நகரங்களை குறிவைத்து ஏவுகணை மூலம் தாக்கினார்கள். இரண்டாவது பெரிய நகரமான கஞ்சா (Ganja) நகரம் அடிக்கடி தாக்குதலுக்குள்ளானது. பெண்களும், குழந்தைகளும் கட்டிட இடிபாடுகளில் உயிரோடு புதைந்தனர். கிறிஸ்தவர்கள் குழந்தைகளை குறிவைப்பது புதிதல்ல.

( வரலாற்றில்)

1) திப்பு சுல்தானின் மகன்களான சிறுவர்கள் (சுமார் 10 வயது) அடமானமாக வெள்ளை கிறிஸ்தவர்களால் பறிக்கப்பட்டார்கள்.

2) காகசஸ் பகுதியின் போராளி இமாம் ஷாமிலியின் மகனார் சிறுவனை ரஷ்யாவின் கிறிஸ்தவ ஜார் மன்னன் அடமானமாக பிடித்து வைத்துக் கொண்டான்.

3) மருதுபாண்டியர்களில் பெரிய மருது தனது பேர குழந்தைகளான 10, 12 வயது பாலகர்களையும் தன்னோடு சேர்த்து தூக்கில் போடும்போது,'இந்த சிறுவர்கள் செய்த குற்றம் என்ன? நள்ளிரவு வரை எங்கள் மடிகளில் படுத்து கதை கேட்டு உறங்கிய குழந்தைகளை தூக்கிலிட வேண்டிய அவசியம் என்ன? என்று கேட்டு கண்ணீர் வடித்தார்.( தி ஹிந்து, oct-12–2017. வேலு நாச்சியார் மீதான வரலாற்று களங்கம் – கட்டுரையிலிருந்து) பேரன்கள் வெள்ளை கிறிஸ்தவர்களால் தூக்கிலிடப்பட்டனர். இவர்கள்தான் உலகிற்கே நீதி, உரிமை பேசும் மாக்னா கார்ட்டா – magna carta - சட்ட வடிவை கொடுத்ததாக பீற்றிக் கொள்வார்கள். ஆனால் இந்த ஆசான்கள்? இன்றுவரை குழந்தைகளை வேட்டையாடுவது, கொலை செய்வதையும் வாடிக்கையாக கொண்டிருக்கிறார்கள்.

4) முதல் இந்திய சுதந்திர போராட்டத்தின் முகலாய மன்னர் பகதூர்ஷா ஜாஃபர் மகன்களான சிறுவர்களின் தலையை வெட்டி பரிசுப் பொருளாக தந்தைக்கே கொடுத்த கொடூரர்கள் இந்த சிலுவைகள்.

5) காலஞ்சென்ற ஈராக் அதிபர் சதாம் உசேனின் வாரிசுகளை ஒழித்துக்கட்ட அவரின் மகன் உமரை வேட்டையாடி அழித்தார்கள். இன்னும் பலபல.

இதேபோன்று அர்மீனியா நாட்டிற்குள் தாக்க அஜர்பைஜானியர்களால் முடியும். ஆனால் அர்மீனியாவும் ரஷ்யாவும் செய்து கொண்டுள்ள CSTO ராணுவ கூட்டணி உடன்படிக்கை பெரும்தடையாக இருந்தது. இவ்வுடன்படிக்கைபடி ஆர்மீனியா தாக்குதலுக்குள்ளானால் அதன் உறுப்பு நாடுகள் (உறுப்பு நாடுகள் : ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், அர்மீனியா, தஜகிஸ்தான், உஸ்பெகிஸ்தான்) அர்மீனியாவிற்கு உதவ வேண்டும். இதனால் பழிக்கு பழி வாங்க முடியாத நிலை.

அஜர்பைஜானை வெல்ல முடியாது என்பதை போர் ஆரம்பித்த சில நாட்களில் கணித்துக் கொண்ட அர்மீனியா, சக கிறிஸ்தவ நாடான ரஷ்யாவை போரில் இழுக்க திட்டமிட்டு அஜர்பைஜான் பொதுமக்கள் வாழும் குடியிருப்புகள் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

அஜர்பைஜான் இதுபோல் திருப்பி தாக்கினால், அர்மீனிய குடியிருப்புகள் மீது தாக்கினால், ரஷ்யா அஜர்பைஜானை தாக்கி அழிக்கும் என்பதே அர்மீனியாவின் யுத்த வியூகம். (வாசகர்களாகிய உங்களுக்கு ஒரு சந்தேகம் எழும். இவ்விரு நாடுகளும் ரஷ்யாவிடமே ஆயுத கொள்முதல் செய்யும் நிலையில், அர்மீனியாவிடம் மட்டுமே ரஷ்யா ராணுவ கூட்டணி வைத்துள்ளது ஏன்?. காரணம் சிலுவை உறவுதான். இந்த பதில் உங்கள் உள்ளத்தில் நீர்த்துப்போக செய்ய, நீங்கள் ஏமாந்து போக, CSTO உடன்படிக்கையில் சில முன்னாள் சோவியத் யூனியனிலிருந்து விடுபட்ட நொண்டி முஸ்லிம் நாடுகளை வைத்துக்கொண்டு சமாளிக்கிறது ரஷ்யா).

அஜர்பைஜானின் தலைமைக்கு இது சிக்கலாகிப்போனது. அஜர்பைஜான் பொதுமக்கள் இந்த அநீதிக்கு எதிராக அணி திரண்டனர். தங்கள் நாட்டின் தலைமை மீது நம்பிக்கை தெரிவித்தனர்.



இந்த வியூகத்தை தடுத்து நிறுத்த அஜர்பை ஜானும் தனது நவீன தாக்குதல் ட்ரோன்கள் மூலம் அர்மீனியாவின் ஏவுகணை ஏவும் தளத்தின் மீது தாக்குதல் நடத்தி அழித்தது . இருந்தும் சிலுவை விடாது மக்கள் குடியிருப்புகள் மீது ஏவுகணை வீசி தாக்கியது. இதற்கு நடமாடும் (Mobile launcher) ஏவுகணை ஏவுதளம் பயன் படுத்தப்படுகிறது என்பதை அறிந்த அஜர்பை ஜான், யுத்த தந்திரத்தை வலுப்படுத்தியது.

மக்கள் குடியிருப்புகள் மீது தொடர்ந்து ஏவுகணை வீசி அழித்துவிட்டு தன்னை மறை வான இடத்தில் மறைத்துக்கொள்ளும் அர்மீனி யாவின் நடமாடும் ஏவுகணை ஏவுதளத்தை கண்டுபிடிக்க, குறைந்த செலவிலான AN-2 உளவு விமானங்களை எலிபொறியாக பயன்படுத்த ஆரம்பித்தது அஜர்பைஜான்.( இது 1945 –களில் சோவியத் ரஷ்யாவால் வடிவமைக்கப்பட்ட பைலட்களால் இயங்கும் சிறியரக விமானம். இது இன்றைய அஜர்பைஜான் பயன்படுத்தும் நவீன ஆளில்லாத விமானமான ட்ரோன்களின் உருவமைப்பில் ஒத்துப்போகும்.)

இந்த அச–2 விமானம் தானியங்கி விமான மாக மாற்றப்பட்டு பறக்கவிடப்பட்டது. இதை தாக்குதல் ட்ரோன்கள் என நம்பி ஏமாந்து அர்மீனியாவின் நடமாடும் ஏவுகணை ஏவுதளம் சுட, அதன் இருப்பை சட்டென உணர்ந்த தொலைவில் பறந்துகொண்டிருந்த அஜர்பை ஜான் ட்ரோன்கள் தாக்கி அழிக்க தொடங்கியது பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. அஜர் பைஜான் நகரங்கள் பாதுகாக்கப்பட்டன.

இந்த யுத்த தந்திரம் அர்மீனியாவின் தாக்குதல் திறனை முற்றிலும் அழித்தது. அர்மீனி யாவின் ராணுவம் மட்டுமே குறி வைக்கப் பட்டதால், போர் நடக்கும் பகுதியில் கிறிஸ் தவ மக்களின் இறப்பை குறைத்து, பாதுகாத்தது. (இதனால்தானோ என்னவோ, உயிரோடு வெளியேறும் அர்மீனிய அப்போஸ்தல கிறிஸ்த வர்கள் நன்றி விசுவாசமின்றி ஊரையே அழித்து, சிதைத்து, எரித்து விட்டு வெளியேறுகிறார்கள்.) ரஷ்யாவை போரில் இழுக்க வேண்டும் என்ற அர்மீனிய சிலுவையின் நரிதனத்தில் மண் விழுந்தது.

பெரிதாக வருவாய் இல்லாத ஒரு சிறு மலைப் பகுதியான ஆனால் செலவிழுத்துவிடும் பகுதியான நகர்னோ–கரபாக் நிலப்பரப்பிற்காக ஒட்டுமொத்த அர்மீனியாவின் ராணுவ தளவாடங்களை பலிகொடுக்க முடியாத நிலைக்கு வந்தது அர்மீனியா. ராணுவத் தளவாட இழப்பு தன் சொந்த நாட்டின் பாதுகாப்பையே கேள்விக்குறிக்குள்ளாக்குவதோடு, செலவுகளை ஈடுகட்ட மிக அதிக கடன் சுமையில் சிக்கி வேண்டிவரும் என்ற நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டது . அர்மீனியா மிகவும் ஏழை நாடு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த 1991–94 ல் கிட்டத்தட்ட 3 வருட போரை முஸ்லிம் அஜர்பைஜானுக்கு எதிராக தொடர செய்து பெரும் அழிவையும், முஸ்லிம் களின் உயிரிழப்பையும் ஏற்பாடு செய்த வெள்ளை கிறிஸ்தவ உலகம் இப்போரில் அவசரஅவசரமாக போர் நிறுத்தத்திற்கு அஜர் பைஜானை நிர்பந்தம் செய்து பணிய வைத்தன.

அதிசயத்தக்க வகையில் ஏழை நாடான அர்மீனியாவிற்கு இவ்வளவு ஆயுதங்கள் கிடைத்தது எப்படி ?.

உலக அளவில் தேவராஜ்ஜியத்திற்காக யூத – வெள்ளை கிறிஸ்தவ கூட்டணி திட்டமிட்டு

செயலாற்றி வருகின்றன. இவர்கள் பாரம்பரிய மிக்க கட்டிடம் (Heritage), தேவாலயங்கள், பழம்பெரும் நினைவுச் சின்னங்கள், வரலாற்று கட்டிடங்கள், அகழ்வாராய்ச்சிகள் என்ற பணி களில் ஈடுபடுகின்றனர். இதற்காக பல அரசு சாரா நிறுவனங்களையும், சமூக சேவை நிறுவனங்களையும் நடத்துகிறார்கள். இவர்கள் இப்பணிகளின் போர்வையில் ஒவ்வொரு உள் நாட்டு பிரச்சனைகளிலும் தலையிட்டு அதன் ஆட்சி பீடங்களின் தலைமுடியை இழுத்து ஆட்டிப்படைகின்றனர்.

இவர்கள் இத்துடன் நிறுத்துவதில்லை. இவர்கள் ஆயுதங்களை விற்பனை செய்யும் மறைமுக ஏஜென்டுகள். இதற்காக பணத்தை திரட்டுகின்றனர். பணத்தின் வரவால் ரஷ்யா ஆயுதங்களை கிள்ளி தராமல் அள்ளித் தந்துள் ளது. இது தந்த தைரியம் அஜர்பைஜான் மீது ஆக்கிரமிப்பு போர் ஆகும்.

இருந்தும் இப்போரில் சர்வதேச தேவராஜ் ஜிய கருத்தாளர்கள் தோற்றனர். இதற்கு முன்பு சூடானை உடைத்தும், இந்தோனேஷியாவை உடைத்தும், ஈராக்கை உடைத்தும் வெற்றி பெற்றவர்களுக்கு அஜர்பைஜானின் வெற்றி அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

அகன்ற அர்மீனிய கனவு கரைந்து போனது. உலக கிறிஸ்தவ தீவிரவாதத்தின் (Templar knights) கனவை கொன்று புதைத்தது ஷியா– சன்னி (அஜர்பைஜான் –துருக்கி ) ஒற்றுமை.

–ஜாகிர்

# அர்மீனியா சுருக்கமான வரலாறு!

காகசஸ் மலைத்தொடர் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் வாழ்ந்த இன மக்களை இன்று அர்மீனியர்கள் என கூறி வருகிறோம்.

இவர்கள் இப்பகுதியை கி–மு 321 முதல் கிபி 428 வரை ஆண்டார்கள். ஆட்சியாளர்கள் தான் ஆர்மீனிய இனத்தவர்கள். இவர்களுடைய நிலப்பகுதி பிற இனத்தாரையும் உள்ளடக்கியது. பிற இனத்தாரை வெற்றி கொண்ட பகுதிகளை உள்ளடக்கியது. கி.மு 69–ல் இவர்கள் ஆண்ட அர்மீனிய நிலப்பரப்பு உச்சநிலையில் இருந்தது. அதில் இன்றைய அஜர்பைஜான், ஜார்ஜியா, சிரியா, துருக்கி மற்றும் ரஷ்யாவின் சில பகுதிகளும் உள்ளடங்கியது.இதை தான் அகன்ற அர்மீனியா என்கிறார்கள்.

வரலாறு தொற்று ஒவ்வொரு மன்னராட்சியின் எல்லைகளும், அதன் பெயரும் மாறிக் கொண்டே வந்துள்ளது.

கிமு 331 முதல் கிபி 301 வரை ஜொராஷ்டிர மதத்தை பின்பற்றினார்கள் .கி.பி 301 முதல் கிறிஸ்தவம் அங்கு அறிமுகப்படுத்தப்பட்டது. MESROP MASHTOTS என்ற பாதிரி கிறிஸ்தவத்தை பரப்பியதில் முக்கிய பங்காற்றினார். இவர்தான் அர்மீனிய மொழிக்கு எழுத்தை அறிமுகப்படுத்தியவர். இது கி.பி 405 நடந்தது. அர்மீனிய மொழியில் எழுதப்பட்ட முதல் நூலே பைபிள் தான் .இதற்கு முன்பு இம்மொழிக்கு எழுத்து வடிவம் கிடையாது. இலக்கியமும் இல்லை. இம்மொழி பல மொழிகளின் கலவையாகும். ஈரானிய மொழி, கிரேக்க மொழி இன்னும் அருகில் கோலோச்சிய சாம்ராஜ்யங்களின் தாக்கத்தினால் விளைந்த மொழி உள்வாங்கல் போன்றவற்றால் ஆன கலவை அர்மீனிய மொழி.

இன்று கிறிஸ்தவ ஆர்மீனியா உரிமை கொண்டாடும் அர்மீனிய இன பூர்வீகம் உண்மையில், ஜொராஷ்டிர மதத்திற்கு உரியது. இன்றைய கிறிஸ்தவ அர்மீனியர்களின் மூதாதையர்கள் ஜொராஷ்டிரர்ரகளே.இவர்கள் தீயை வணங்கக் கூடியவர்கள். இந்த வணக்க வழிபாட்டை சாத்தான் வழிமுறை என்பதால், மதம் மாறினார்கள் .சாத்தானை வணங்கிய இவர்களின் மூதாதையர்களின் இன உரிமையை கொண்டாடுவது முரண்பாடாகும்.

அர்மீனியா என்ற வார்த்தை கிரேக்க மொழியை சேர்ந்தது. கி–மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து முதலில் பிரயோகிக்கப்பட்டது. இந்த கிரேக்க வார்த்தையில் இருந்து தான் இன்று அந்த பூமியும், மொழியும் அடையாளப்படுத்தப் படுகிறது.

–ஜாகிர்

# போர் நிறுத்த உடன்படிக்கையில் துருக்கி – ரஷ்யா அரசியலின் பங்கு

அர்மீனியாவுக்கு 44 நாட்கள் போரை தாக்குபிடிக்குமளவுக்கு ஆயுத குவியலை அள்ளி வழங்கிய ரஷ்யா , உலகளாவிய தேவாலய கருத்தாளர்களின் நிர்பந்தம் மற்றும் துருக்கி புவியரசியலின் தாக்கத்தால் அர்மீனிய– அஜர்பைஜான் போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்பாட்டை செய்து முடித்துள்ளது.

அர்மீனியாவின் பிரதமர் பஷியன் கடந்த 2018–ல்'வெல்வெட் புரட்சி'என்றழைக்கப்படும் கிறிஸ்தவ மக்களின் எழுச்சியால் ஆட்சியைப் பிடித்தவர். இவர் அமெரிக்க சார்பு ஆட்சியாளர். ஆட்சிக் கட்டிலில் ஏறியவுடன் ரஷ்ய அதிபர் புதினின் நெருங்கிய நண்பரான முன்னாள் அர்மீனிய ஜனாதிபதியின் மீது நடவடிக்கை எடுத்தார். இவரது நடவடிக்கைகள் ரஷ்யாவின் ஆதிக்கத்திற்கு அச்சுறுத்தலாக இருந்தது. எரிச்சலை ஏற்படுத்தியது.

ரஷ்யாவின் எல்லையை பகிர்ந்து கொள்ளும் முன்னாள் சோவியத் யூனியன் பகுதியாக இருந்த உக்ரைன் மற்றும் ஜார்ஜியா நாடுகள் அமெரிக்க சார்பு நேட்டோ அமைப்பில் சேர்ந்து ரஷ்யாவின் எல்லைக்கு அச்சுறுத்தலாக மாறி இருந்தன. இவர்களுடன் அர்மீனியாவும் கைவிட்டுப் போகும் நிலையில் இருந்ததை ரஷ்யா கவனத்தில் கொண்டது.

தன் சொந்த மத பிரிவை சேர்ந்தவர்கள் தன் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறி வரும் நிலையில், மாற்று மதத்தை சேர்ந்தவர்கள். அஜர் பைஜான், துருக்மேனிஸ்தான், உஸ்பெகிஸ் தான், கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான் தன்னை உற்ற நண்பர்களாக இருப்பதை ரஷ்யாவின் அதிகார அமைப்பு உணர்ந்து வந்தது.

மேற்கண்ட முஸ்லிம் நாடுகளுடன் ஈரானும், சிரியாவும் தனக்கு வேண்டப்பட்ட நாடுகளாக இருப்பதை ரஷ்யா உணர்கிறது.

இவர்களுடன் தற்போது பரம்பரை வைரி யான துருக்கியும் தன்னுடன் நெருங்கி வருவதை கவனிக்க தவறவில்லை ரஷ்ய அதிபர் புதின்.

அஜர்பைஜான் – அர்மீனியா 2020 போர் உச்சத்திலிருக்கும்போது அக்டோபர்,22–2020ல் 'வல்டை கலந்தாய்வு கிளப்' (Valdai discussion club ) மாநாட்டில் ரஷ்ய அதிபர் துருக்கி அதிபர் எர்டோகனை பற்றி குறிப்பிடும்போது,

'நம்புவதற்கும், பழகுவதற்கும் ஏற்றவர் எர்டோகன்' (Erdogan a partner with whom one can deal ) என்றார்.



(ஆதாரம் : Armenia lost karabakh war, while Azerbaijan claimed military and political victory : Analyst .www.caspian news.com )

வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்ற இஸ்லாமிய பண்பால் எர்டோகன் 'நம்பத் தகுந்தவர்' என்ற நிலையை அடைந்துள்ளார். நீதி உணர்வை எதிர்பார்க்கும் உள்ளங்கள் இப்பண்பால் ஈர்க்கப்படுவது இயல்புதான்.

(இத்தகைய பண்புகளை ராஜீய உறவுகளில் காட்டிய பல இஸ்லாமிய நாடுகள், யூத – வெள்ளை கிறிஸ்தவ கூட்டணி களால் ஏமாற்றப்பட்டு, ஒடுக்கப் பட்டதை வரலாறு நமக்கு காட்டுகின்றன.)

மேலும் துருக்கி நேட்டோ அமைப்பின் நிறுவனர்களில் ஒன்றாக இருந்தும், அதன் அனேக ஆயுத தளவாடங்கள் அமெரிக்க சார்பு கிறிஸ்தவ நாடுகளுடைய தாகஇருந்தும் ரஷ்யாவுடன் சுமூக உறவை பேண வெளிப்படைத்தன்மையுடன் அணுகுவதை ரஷ்யா நல்லதொரு சந்தர்ப்பமாக பார்க்கிறது.

மிக நவீன ஆயுதமான S-400 வான் பாதுகாப்பு ஏவுகணை தளவாடத்தை ரஷ்யா துருக்கிக்கு ஏற்றுமதி செய்து தன் தரப்பு நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளது. இது அமெரிக்க சார்பு கிறிஸ்தவ நாடுகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடல் எல்லைக்கு அருகில் அமைந்துள்ள துருக்கி ரஷ்யாவை நெருங்கி வருவதால், ரஷ்யாவின் எல்லை பாதுகாக்கப்படும் எனவும் தேவையற்ற ராணுவ போட்டி இருக்காது எனவும் உலக அரசியல் வல்லுனர்கள் கணிக்கிறார்கள்.

தன் எல்லையருகில் உள்ள நாட்டில் தன் ராணுவ தளத்தையோ அல்லது அதை ராணுவ ரீதியாக பலப்படுத்தி வைப்பதை ரஷ்யா தன் முதல் நிலை (BUFFER ZONE) பாதுகாப்பாக கருதி செயலாற்றி வருகிறது. அதில் முக்கிய இடத்தில் துருக்கி உள்ளது.

இந்த ரஷ்ய–துருக்கி நெருக்கம் அஜர்பை ஜானின் நீதிக்கான போராட்டத்திற்கு வலு சேர்த்துள்ளது.

அர்மீனியா ரஷ்யாவை விட்டு விலகல், ரஷ்ய – துருக்கியின் நெருக்கம், முஸ்லிம் நாடுகளின் இஸ்லாமிய பண்பின் நம்பகத்தன்மை, அஜர்பைஜானின் நோக்கத்தில் இருக்கும்



உண்மை தன்மை இவையெல்லாம் சேர்ந்த ஒரு கலவையும் ரஷ்ய– துருக்கியின் ஆதரவுடன் போர் நிறுத்தத்திற்கு வழிவகுத்துள்ளது.

சர்வதேச சிலுவை தீவிரவாதிகள் தங்கள் அவசர போர் நிறுத்த உடன்படிக்கை திட்டத் திற்கு மேற்கண்ட சாதகபாதகங்களை சாதகமாக் கிக் கொண்டனர். ரஷ்யா மற்றும் அர்மீனியா விற்கு இத்தகைய சாதகத்தை எடுத்து சொல்லி இருக்க வேண்டும்.

அதேநேரத்தில் 'எதற்கும் இருக்கட்டும்' என்ற ராஜதந்திர நடவடிக்கையையும் ரஷ்யா கைவிடவில்லை. அர்மீனியாவின் தற்போதைய இருப்பை, பிடியை வலுப்படுத்தும் வகையில் ஒரு தரப்பாக நடந்து வருவதை சில நடவடிக்கைகள் மூலம் அரசியல் வல்லுனர்கள் கவனித்து வருகிறார்கள். ( இதற்கு கடிவாளமிட துருக்கி முயன்று வருகிறது)

'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' என்ற வகையில் ரஷ்யா நடந்து கொள்ளுமா ? என்பதை எதிர்கால அரசியலே நிர்ணயிக்கும்.

–ஜாகிர்




# நெருக்கடியில் இஸ்லாமா அல்லது பிரான்சு அரசா?

மதச்சார்பின்மை என்று கூறிக் கொள்ளுங்கள். ஆனால் மதத்தின் பின்னால் ஒளிந்து கொண்டு மற்ற மதங்களின் மேல் தாக்குதலை நடத்துங்கள். பிரான்ஸ் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறது.

Collective against Islamophobia in France என்ற அமைப்பு தரும் தகவலின்படி, 2019 இல் மட்டும் இஸ்லாத்தின் மீது வெறுப்பைக் கக்கும் 1043 சம்பவங்கள் நடந்துள்ளன. (2017 ஆம் ஆண்டிலிருந்து 77% இது அதிகரித்துள்ளது).

உடல்ரீதியான தாக்குதல்கள் –68 (6.5%) பாகுபாடுகளை ஏற்படுத்திடும் சம்பவங்கள் – 618 (59.3%) வெறுப்புப் பேச்சுகள் ,இன வெறுப்பை தூண்டிடும் சம்பவங்கள் – 210 (20.1%) கொச்சை படுத்தும் சம்பவங்கள் – 93 (8.9%) முஸ்லிம்களின் புனித இடங்களின் மீது நடந்த தாக்குதல்கள் – 22 (2.1%) தீவிரவாதத்திற்கு எதிராக போராடுகிறோம் என்ற பெயரில் நடத்தப்பட்ட துவேசங்கள் –32(3.1%) மதச் சார்பின்மைக்கு பின்னால் ஒளிந்துகொண்டு முஸ்லிம்களுக்கு எதிராக பிரான்ஸ் அரசாங்கம் தினம் தினம் வெறுப்பைக் கக்கி வருகின்றது. இதில் ஊடகங்களும் அங்கே உள்ள மதகுருமார்களும் அடங்கும்.

முஸ்லிம்களை பற்றி பேதங்களைக் கற்பித்து அவர்களை பிரான்சிலிருந்து தனிமை படுத்திடும் செயல்களை சட்ட அங்கீகாரம் கிடைத்தது போல் செய்வதற்கு காரணம் அங்கே வெறுப்பு பேச்சுகளை இயல்பாக, சாதாரணமாக ஆக்கிய தன் விளைவே. அதுமட்டுமல்ல பிரான்சிலும் பிரான்சை தாண்டியும் வசிக்கும் முஸ்லிம்களின் மீது வன்முறைகளை தூண்டி விட இதுவே காரணம்.

உதாரணமாக, ஜூன் 2019 இல் பிரஸ்ட் நகர் பள்ளிவாசலில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு, பள்ளிவாசலின் இமாம் ராசித்தை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல். அக்டோபர் 2019

இல் பயோன் பள்ளிவாசலில் நடத்தப்பட்ட தாக்குதல்.

பிரான்ஸிற்கு வெளியே – நியூசிலாந்தில் கிறிஸ்ட்சர்ச் பள்ளிவாசலில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு. இதில் தொழுது கொண்டிருந்த 51 முஸ்லிம்கள் பலியாகினர். 49 பேர் காய முற்றனர். பிரெஞ்சு சிந்தனைவாதி ரெனாடு காமஸ் என்பவரின் வெறுப்பு பேச்சே என்னை இந்தத் தாக்குதலை நடத்த தூண்டியது என கூறினான் குற்றவாளி.

முஸ்லிம்களின் நம்பிக்கை மற்றும் கலாச்சாரம் சார்ந்த விஷயங்களான ஐந்து நேரம் தொழுவது, தாடி வைப்பது ஹலால் உணவுகளை சாப்பிடுவது போன்ற குறியீடுகளை பிரான்சில் நடக்கும் தீவிரவாத தாக்குதல் சம்பவங்களோடு இணைத்து அக்டோபர் 2019 இல் பேசினார்கள் இமானுவேல் மாக்ரனும் அவருடைய அப்போ தைய அமைச்சர் கிரிஸ்டோஃப் காஸ்ட்னரனும்.

நம்முடைய நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதும் இஸ்லாம் நெருக்கடியில் உள்ளது என்று கடந்த மாதம் (செப்டம்பர்) அறிவித்தார் இமானுவேல் மாக்ரன்.

பள்ளிவாசல்களுக்கு வரும் நிதியை உற்று கவனிப்பதன் மூலம் அந்நிய ஆதிக்கத்திலிருந்து பிரான்சின் இஸ்லாமை விடுவிக்கப் போவதா கவும் அறிவித்தார்.

பிரான்ஸ் ஆட்சியாளரில் மாக்ரன் தான் இப்படி ஒரு அறிவிப்பை முதன்முதலாக செய்துள்ளார் என்றில்லை.

மம்லுக்கின் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து இஸ்லாமையும் முஸ்லிம்களையும் விடுவிக்கப் போகிறேன் என்று கூறிக்கொண்டு தான் எகிப்தின் மீதும் பலஸ்தீனத்தின் மீதும் 1798 இல் படையெடுத்தார் பிரெஞ்சு ஆட்சியாளர் நெப்போலியன் போனபார்ட். ஆனால் அவரின் திட்டம் நிறைவேறவில்லை. பலஸ்தீனத்தில் தோல்வியுற்று திரும்பினார் போனபார்ட். இது அன்று பிரான்சிற்கு இஸ்லாம் உடன் ஏற்பட்ட நெருக்கடி.

30 வருடங்களுக்கு பின்பு அல்ஜீரியாவின் மீது படையெடுத்தது பிரான்ஸ். படையெடுப்பிற்கு பின்வரும் காரணம் கூறப்படுகின்றது.

1790 இல் பிரஞ்ச் இராணுவத்திற்காக அல்ஜீரியாவில் வசித்துவந்த இரண்டு யூதர்களிடம் இருந்து கோதுமையை வாங்கிடும் ஒப்பந்தம் இட்டது பிரெஞ்சு. ஆனால் இதற்கான தொகையை வழங்கவில்லை. கடன் அப்படியே கிடந்தது. இந்த இரண்டு யூதர்களும் அல்ஜீரியாவின் ஆட்சியாளர் ஹுசைன் தாயிற்கு கடன்பட்டு இருந்தனர். பிரெஞ்சு அரசு எங்களுக்கு பணத்தை தந்தால் மட்டுமே நாங்கள் உங்களுக்கு பணத்தை தர இயலும் என ஹுசைன் தாயி இடம் கூறினர் யூதர்கள்.

இந்த விவகாரத்தை தீர்க்கும் விதமாக பிரெஞ்சு தூதர் பியர் திவாலிடம் பேசினார் ஹுசைன். ஆனால் பலன் ஏதும் கிட்டவில்லை. திவால் யூதர்களுடன் சேர்ந்துகொண்டு, திட்ட மிட்டு, வேண்டுமென்றே கடனை தராமல் இழுத் தடிக்கின்றார் என சந்தேகித்தார் ஹுசைன். குறிப்பாக 1820 இல் நடந்த முயற்சியின் போதும் பிரெஞ்சு அரசு கடனை திருப்பித்தரும் மனநிலையில் இல்லை.

1827 ஏப்ரல் 29 அன்று நடந்த ஒரு சந்திப்பில் திருப்திகரமான ஒரு பதிலை திவால் தராததால் அவரை சாமரத்தைக் (விசிறி) கொண்டு அடித்து விட்டார் ஹுசைன். ஏற்கனவே கடனை திருப் பித்தரும் மன நிலையில் இல்லாத பிரெஞ்சு அரசு இந்த அலட்சியப்படுத்துதலை வாய்ப்பாக கருதி ஹுசைனுக்கு எதிரான ராஜதந்திர நடவடிக் கையில் இறங்கியது. ஹுசைன் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கூறினார் பிரெஞ்சு ஆட்சியாளர் சார்லஸ் எக்ஸ். மன்னிப்புக் கோர ஹுசைன் தயாராக இல்லை. இரு நாட்டிற்கும் இடையே பிரச்சனை முத்தியது. 1830 ஜூனில் அல்ஜீரியா வின் மீது படையெடுத்தது பிரெஞ்சு. ஜூலை 5ல் அல்ஜீரியா வீழ்ந்தது. பொருளாதரத் தில் நலிவடைந்து இருந்த பிரெஞ்சு அல்ஜீரியா வின் வளங்களை கொள்ளையடித்தது.

படையெடுப்பிற்கான உடனடி தேவை, இலக்கு என்ன என்று பிரெஞ்சு நாடாளு மன்றத்தில் மார்ச் 2–இல் சார்லஸ் இப்படி பட்டியலிட்டார். அல்ஜீரியா அலட்சியப்படுத்தி யதற்காக பழி தீர்ப்பது, திருட்டை தடுப்பது, கிறிஸ்தவத்திற்கு அல்ஜீரியாவை மீண்டும் கொண்டு வருவது.

அவர்களுடைய இலக்கை நிறைவேற்றும்

வண்ணம் மஸ்ஜிதுகளை கைப்பற்றியது பிரெஞ்சு ராணுவம். துப்பாக்கி முனையில் அவைகள் சர்ச்சுகளாக, ஆலயங்களாக மாற்றப்பட்டன. இதில் *1612* இல் கட்டப்பட்ட மிகப்பெரிய கெச்சோவா மஸ்ஜித் (Ketchaoua Masjid) *1832* டிசம்பரில் புனித பிலிப் ஆலயமாக மாற்றப் பட்டது. அதே வருடம், பெண்கள், குழந் தைகள்எனஎவரையும்விடாமல்குஃப்பைஸ்இன மக்களை அழித்தனர். அவர்களின் அனைத்து உடைமைகளையும் களவாடிக் கொண்டனர். அல்ஜீரியாவின் மீதி பிரெஞ்சு நடத்திய அடா வடித்தனங்களை மார்டின் இவான்ஸ், ஜான் பிலிப்ஸ், பிரவுன் (Martin Evans, John Phillips, Haley C.Brown) ஆகியோர் தங்களுடைய புத்தகங்களில் ஆவணபடுத்தியுள்ளனர்.

பிரெஞ்சு அரசால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்தால் *10* லட்சம் அல்ஜீரியர்கள் மடிந்துள்ளனர். அதாவது அல்ஜீரியமக்கள்தொகையில்மூன்றில்ஒருபங்கு. நகரங்கள், கிராமங்கள் என எவற்றையும் விட்டு வைக்காமல் தரைமட்டமாக்கியது பிரெஞ்சு. அல்ஜீரியாவின் அறிவுஜீவிகளையும் கொன்று போட்டனர். இப்படி காட்டுமிராண்டித் தனங்களை அன்று அவிழ்த்து விட்ட போதிலும் பிரெஞ்சு அரசிற்கு இஸ்லாமுடன் ஏற்பட்ட நெருக்கடி தீரவில்லை.

பல முஸ்லிம் நாடுகளை காலனி ஆதிக்கத் தின் கீழ் கொண்டு வந்தது பிரெஞ்சு. இதனால் இஸ்லாமுடன் ஏற்பட்ட நெருக்கடி இன்னும் அதிகரித்தது. *1901* இல் Questions diplomatique




*1871*–இல் அல் முக்ரானியின் தலைமையில் *150,000* அல்ஜீரிய முஸ்லிம்கள் பிரெஞ்சு ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதில் ஈடுபட்ட ஏராளமானோர் கொல்லப்பட் டனர். ஏற்கனவே *1860* இல் இருந்து *1870* வரை பஞ்சம் தலைவிரித்தாடியது. அதை தடுத்து விட எந்த முயற்சியும் பிரெஞ்சு அரசு எடுக்கவில்லை. பஞ்சத்தால் பலியானோர் எண்ணிக்கையையும்,

et coloniales என்ற பிரெஞ்சு பத்திரிக்கையின் ஆசிரியரான எட்மண்ட் பாசி (Edmond Fazy) ஒரு கேள்வியை முன்வைத்து அதற்கான ஆராய்ச்சி யில் இறங்கினார். அடுத்த நூற்றாண்டில் 'இஸ்லாத்தின் எதிர்காலம்' எப்படி இருக்கும் என்பதே அந்த கேள்வி. எதற்காக இப்படி ஒரு ஆராய்ச்சியில் அவர் இறங்கிட வேண்டும் என்பதையும் நாம் பார்த்திட வேண்டும். உலகம்

முழுவதும் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை கண்டும், ஆப்பிரிக்காவில் இஸ்லாமின் வளர்ச்சி குறித்தும் அவர் கவலை கொண்டார். 2020 இல் இஸ்லாம் நெருக்கடியில் உள்ளது என்று ஏன் கூறுகிறார்கள் என்பது நமக்கு இப்போது புரிந்திருக்கும்.

இஸ்லாத்தின் எதிர்காலம் என்ற கேள்விக்கு பலர் தங்களுடைய பதில்களை அளித்தனர். இஸ்லாமிய இறையியலை எப்படி திரிப்பது, ஐரோப்பா அங்கீகரித்துக் கொள்ளும் நவீன இஸ்லாமை முன்மொழியக் கூடிய உலமாக் களையும், உதுமானிய கிலாஃபத்தை பலவீன ப்படுத்தும் உலமாக்களையும் உருவாக்குவது எப்படி என்றே பலர் தங்களுடைய பதில்களை அந்த கேள்விக்கு வழங்கினர்.

இஸ்லாமிய தத்துவங்களை படித்த பிரென்ச் அறிஞரான பெர்னாட் கரா டி வாக்ஸ் (Bernard carra de vaux) தன்னுடைய பதிலை இப்படி வழங்கினார்.

'இஸ்லாமிய உலகத்தில் கிறிஸ்தவ ஆதிக் கத்தை செலுத்துவதில் அச்சுறுத்தலாக இருக்கும் கொள்கை கிலாபத் எனப்படும் முஸ்லிம்களை ஒரே தலைமையின் கீழ் கொண்டு வருவது. ஏற்கனவே அவர்களின் மத்தியில் இருக்கும் அரசியல், இன வேறுபாடுகளை ஊக்குவித்து முஹம்மதியர்களின் உலகத்தை பிளக்க வேண் டும். அவர்களின் ஒற்றுமையை குலைக்க வேண் டும். தேசியவாத சிந்தனையை வளர்த்தெடுப்ப தற்கும், சமூக ஒன்றிணைப்பை மழுங்கடிப்பதற் கும் வேறுபட்ட இனங்களில் முஹம்மதியர்களாக வாழும் மக்களிடையே சூடானியர்கள் என்றும் சீனர்கள் என்றும் பெர்சியர்கள் என்றும் மலாய் காரர்கள் என்றும் இன வேறுபாட்டை உணர்த் திட வேண்டும்.


முஸ்லிம்களுக்கு இடையே தீவிரப் போக்கு உடையவர்கள் இருக்கிறார்கள், தாராள போக்கு உடையவர்கள் இருக்கிறார்கள். ஒருவர் மற்ற வரை எதிர்க்க வழிவகை செய்திட வேண்டும். ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் ஒருவருக்கு ஆதர வளிக்க வேண்டும். மற்றொரு விஷயத்தில் மற்றொருவருக்கு ஆதரவளிக்க வேண்டும். இந்தத் திட்டத்தில் சில அசௌகரியங்கள் இருக்கின்றன. அதில் சந்தேகம் இல்லை. எனினும் ஒட்டுமொத்தமாக பார்த்தால் இஸ்லாமை இத்திட்டம் பலவீனப்படுத்தும்.

பிரஞ்சுப்புரட்சிக்குமுன்னர்எப்படிஇனவாத அடிப்படையில் செயல்பட்டதோ அதையே அதற்குப் பின்பும் தொடர்ந்து இப்பொழுதும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது பிரெஞ்சு அரசு. இனவாத நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் பிரெஞ்சு, வெள்ளை மேலாதிக்க கிறிஸ்தவ மனோப்பக்குவத்தை மறுத்து, பல ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட திட்டத்தின் பலனை அறுவடை செய்திட இஸ் லாம் நெருக்கடியில் இருக்கின்றது என்கிறது.

பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து லட்சக் கணக்கானவர்களை கொன்று இன அழிப்பில் ஈடுபட்ட பிரெஞ்சு அதற்காக வருந்தி, இன வாதத்தை விட்டால் மட்டுமே அது நெருக் கடியில் இருந்து தப்பிக்கும்.

Joseph Massad - Middleeasteye.net, Daily Sabah, bliis.org

– அபூஹாசின்



அர்மீனிய சிலுவைகளிடமிருந்து மீட்கப்பட்ட பகுதிகளில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் நினைவு சின்னங்களுக்கு இப்படி நடக்கலாம், அப்படி நடக்கலாம் என யூகங்களையும் பொய்களையும் செய்திகளாக பரப்ப ஆரம்பித்திருக்கிறார்கள். அஜர்பைஜான் முஸ்லிம்கள் சிதைப்பார்கள் என கதை கட்டி வருகிறார்கள்.

ஆனால் கடந்த முப்பது வருட சிலுவையின் ஆக்கிரமிப்பில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் 'இனத்தூய்மை' என்ற பெயரில் பூர்வீக பூமியிலிருந்து விரட்டப்பட்டனர். பலநூறு பேர் கொல்லப்பட்டனர். (இப்படி திட்டமிட்டு சதி செய்து விட்டு, அப்பகுதி ஆர்மீனிய கிறிஸ்தவர்களின் பூமி என்றும், பெருபான்மை நாங்கள் தான் என்றும் கூறி வருகின்றனர். இதை நிரூபிக்க தற்போதைய மக்கள் தொகையைக் காரணம் காட்டுகிறார்கள்).

மேலும் அப்பகுதியில் இருந்த காட்சி சான்றுகளான (Material evidence) பள்ளிவாசல்கள், முஸ்லீம் வரலாற்று சின்னங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் பலவும் அழிக்கப்பட்டும், சிலது பராமரிக்கப்படாமல் அதுவாகவே அழிய விடப்பட்டுள்ளது .இதற்கு காரணம் உலக கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களை 'அசுத்தமானவர்கள்' (Dirty people) என வெறுப்பதால் தான். கடந்த காலங்களில் இப்படி தான் இயேசுவை கொலை செய்தவர்கள் என யூத படுகொலைகளை செய்து வந்தார்கள். இதற்கு உதாரண அடையாளம் ஹிட்லர். ஹிட்லரும் கிறிஸ்தவர்.

( இந்த ஹிட்லருடன் கூடிகுலாவியவனை தேசிய நாயகனாக (National Hero) கொண்டாட கூடியவர்கள் ஆர்மீனிய அப்போஸ் தல கிறிஸ்தவர்கள். அவன் பெயர் கரேஜின் ன்ஜ்டாஹ் (Garegin Njdah).

*1991–1994* போரில் அஜர்பைஜானிடமிருந்து ஆக்கிரமிக்கப்பட்ட பிஜூலி (Fizuli) நகரம் சோவியத் ஆட்சியின்போது பெரிய நகரமாக திகழ்ந்தது. அது இப்பொழுது அர்மீனிய சிலுவை தீவிரவாதிகளால் தரைமாக்கப்பட்டுள்ளது. வெற்றி பெற்ற அஜர்பைஜான் வீரர்கள் தங்கள் தேசிய கொடியை பறக்கவிட ஒரு கட்டிடம் கூட இல்லை என தெரிவித்துள்ளனர்.

அதுபோல் ஜங்கிலன் (Zangilan) நகரில் ஒரே ஒரு சிறுவர் பள்ளிக்கூடம் தவிர்த்து, மற்ற அனைத்து கட்டிடங்களும் பயன்படுத்த

# கிறிஸ்தவர்களின் பிடியில் நொறுங்கி சிதைந்த வரலாற்று சின்னங்கள்





முடியாத வகையில் சிதைக்கப்பட்டுள்ளது.

நவம்பர் –4 வரை மீட்கப்பட்ட பகுதிகளில் காணாமல் போன 700–க்கும் மேற்பட்ட வரலாற்று சின்னங்கள் மற்றும் கட்டிடங்களை பற்றி விசாரணை நடத்தப் போவதாக அறிவித்துள்ளார் அஜர்பைஜானின் பிரதமர் அலியேவ்.

அணுகுண்டு வீசாமலேயே அதுபோன்ற அழிவை, சிதைவை அஹ்டம் (Aghdam ) நகரில் செய்திருக்கிறார்கள் கர்த்தரின் பிள்ளைகள். இவர்கள்தான் ஹிரோஷிமா ,நாகசாகி நகரங்கள் அணுகுண்டு அழிவுக்கு காரணம். இவர்களுக்கு மட்டும் அணுகுண்டு 'அமைதியின் ஆயுதம்'. ஒரு நேரத்தில் இப்படித்தான் கூறினார் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜூனியர் புஷ் .

இவ்வூரில் 1,43,000 அஜர்பைஜானியர்கள் வாழ்ந்த இடம். இன்று உறுதியான, உருப்படியான எந்த ஒரு கட்டிடமும் இல்லை. இரட்டை மினாரா (கோபுரம்) கொண்ட 19ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பள்ளிவாசலின் முக்கிய கட்டிட பாகம் மட்டும் விட்டு வைக்கப்பட்டுள்ளது. இதுவும் சரியாக பராமரிக்கப் படாமல் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

இதுபோல் கல்பஜார் (Kalbajar) என்ற ஊரிலும், இன்னும் மற்ற ஊர்களிலிருந்தும் வெளியேறும் கிறிஸ்தவ பொதுமக்கள் (ராணுவம் அல்ல) மதவெறியை பண்போடு தங்கியிருந்த வீடுகளை எரித்து சாம்பலாக்கி விட்டு தங்கள் தாய் நாடான அர்மீனியாவிற்கு திரும்புகிறார்கள். இப்படி முஸ்லிம்களுக்கு உரிய பலவும் நாசமாக்கப்பட்டு வருகிறது . இது ஒன்றும் முஸ்லிமுக்கு புதிதல்ல. இவர்களின் மூதாதையர்கள் முதல் சிலுவை யுத்தத்தின் போது, ஜெருசலம் என்ற புனித நகரை சிதைத்தார்கள், எரித்தார்கள் என்பது அவர்களுக்கு உரிய வரலாறு. இதை இன்றும் ஒவ்வொரு வருடமும் புது வருடத்தை கொண்டாடிய பிறகு உலகின் ஏதாவது ஒரு முஸ்லிம் நாட்டை அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தேவன் அன்பாக இருக்கிறாராம்.

யாரை ஏமாற்றுகிறார்கள் கிறிஸ்தவ மிஷினரிகள்.

ஆதாரம்: Armenians set fire to homes before handing village over Azerbaijan.

https://amp.sbs.com(15-11-20)

Ethnic Armenian villages burn houses before Azerbaijan take over

www.aljazeera.com (14-11-20)

BBC airs reportage from kalbajar : Armenians are taking absolutely everything with them even removing all the windows and toilets.

www.azertag.az (13-11-20)



# கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்வுக்கு கிருஷ்ணய்யர் விருது

ஆசிம், குளச்சல்

2020ம் ஆண்டுக்கான மனித உரிமை மற்றும் சமூக நீதிக்காக பாடுபடு பவர்களுக்கு வழங்கப்படும் 'நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர் விருது' குமரி மாவட்டத்தை சேர்ந்த கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மதுரை சோக்கோ அறக்கட்டளை சார்பில் உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் அஜ்மல்கான் தலைமையில் நாகர்கோவிலில் வைத்து நடை பெற்ற நிகழ்ச்சியில் ஓய்வு பெற்ற ஐ ஏ எஸ் அதிகாரி தேவசகாயம் விருது வழங்கினார்.

தமிழக ஆயர் பேரவை முன்னாள் தலைவர் பிஷப் பீட்டர் ரெமிஜியூஸ், பூஜிதகுரு பால பிரஜாபதி அடிகளார், காலச்சுவடு ஆசிரியர் கண்ணன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்..

தெற்கெல்லை போராட்டம், வன்கொடுமை எதிர்ப்பு, சமூக நீதிக்கான போராட்ட களங்களில் கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் அவர்களின் பங்களிப்பு நினைவு கூறப்பட்டது.

## கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்

குமரி மாவட்டத்தில் ராஜாக்கமங்கலத்திற் கும் ஈத்தாமொழிக்கும் இடையே வெற்றிலை கொடிகள் விவசாயம் செய்த கொடிக்கால் கிராமத்தை பெயரோடு சுமப்பவர்..

பத்மநாபபுரம் அருகில் வாழவிளை பகுதியைச் சேர்ந்த சுப்பையாவுக்கும் கொடிக் கால் பகுதியை சேர்ந்த கிருஷ்ணம்மாளுக்கும் மகனாக **1937** ம் ஆண்டு பிறந்தவரின் இயற் பெயர் செல்லப்பா...

பள்ளியில் படிக்கும் காலத்திலேயே சமூகப் பணியில், அரசியல் களத்தில், குமரிமாவட்ட விடுதலை போராட்டத்தில் பங்கு பெற்றவர் பின்னர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து **1975** ல் குமரிமாவட்ட செயலாளர் பதவிவரை வகித்தவர்.

தெற்கெல்லை போராட்டத்தில் கலந்து **1954**ல் திருவனந்தபுரம் சிறையில் இருந்த காலத்தில் இலக்கியத்திலும் வாசிப்பிலும் ஏற்பட்ட ஆர்வம் **64** ஆண்டுகளாக தொடர்வது பிரமிக்கவைக்கும் சாதனை..

**1966**–ல் ராஜாக்கமங்கலம் ஊராட்சிமன்ற கவுன்சிலராகவும், தொடர்ந்து இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் பதவி வரை வகித்தவர் குமரிமாவட்ட, தமிழக மற்றும் அகில இந்திய அளவிலான பல்வேறு கட்சிகளின் தலை

வர்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ள முடிந்தது.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் மரகதம் சந்திரசேகர், இளைய பெருமாள் போன்றவர்களுடன் பிரதமராக இருந்த இந்திரா காந்தியை சந்தித்து உரையாடியவர்.

தமிழக அரசியலின் இரு துருவங்களான எம் ஜி ஆர் மற்றும் கலைஞருடன் நெருங்கிய தொடர்பு இருந்து போதும் தனக்கென எதுவும் கேட்டு பெறாத பொதுநலவாதி..

எம்ஜிஆர் ஆட்சியில் ஆதி திராவிடர் குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டவர்..

கலைஞர் கருணாநிதியின் மிக நெருங்கிய நட்பு வட்டத்தில் இருந்த வெகுசிலரில் ஒருவரான கொடிக்கால் அவர்கள் பல வருடங்கள் தொடர்ந்து மாலை வேளைகளில் சந்தித்து உரையாடியதை பெருமையாக நினைவு கூர்கிறார்..

தெற்கெல்லை போராட்டத்தில் கலந்து கொண்டதை கவுரவிக்க 1975 ல் கலைஞர் 'தியாகச்செம்மல்' விருதுடன் தாமிரப்பட்டயம் வழங்கி கவுரவித்தது மறக்கமுடியாத நிகழ்வு..

1984 ம் ஆண்டு கலைஞர் தன் கைப்பட எழுதிய கடிதத்தை பொக்கிஷமாக பாதுகாத்து வருகிறார்.

1972 ல் குமரி மாவட்டம் மேல சூரன்குடி விவசாயிகள் போராட்டத்தில் கலந்து சிறை சென்றவர், கொடியன்குளம் மண்டைக்காடு பகுதிகளில் நடைபெற்ற வகுப்பு கலவரங்களில் அமைதி ஏற்பட பாடுபட்டவர்.

கம்யூனிஸ்ட் சிந்தனைவாதியாக ஒடுக்கப் பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாடுக் காக போராட்டம் நடத்தி பலமுறை சிறை சென்று பொதுத்தளத்தில் இயங்கியவரின் வாழ்க்கையில் அடியாருடன் ஏற்பட்ட நட்பு இஸ்லாமிய மார்க்கம் குறித்த தேடலை அதிகரித்தது.

தொடர்ந்து தமிழகத்தின் ஆயிரக்கணக்கான கிராமங்களில் லட்சக்கணக்கானவர்களிடம் சத்திய மார்க்கத்தை எடுத்துரைத்தவர் 1989 ம் ஆண்டு ஷேக் அப்துல்லாவாக தன்னை பகிரங்க மாக அறிவித்து கடந்த 32 ஆண்டுகளாக ஓய்வின்றி களப்பணியாற்றி வருகிறார்.

ஆரம்பத்தில் புதுமைத்தாய் பத்திரிகை வெளியிட்டவர் இஸ்லாமிய மார்க்கத்தை தழுவிய பின்னர் 'உங்கள் தூதுவன்' என்ற பத்திரிகையை நடத்தி வந்தார்..

தமிழகத்திலுள்ள அனைத்து முஸ்லிம் ஜமா அத்களையும் ஒருங்கிணைத்து ஒரே அமைப்பாக இயங்கிட காங்கிரஸ் பிரமுகர் ஜே.எம்.ஆரூண் துவங்கிய தமிழக முஸ்லிம் ஐக்கிய ஜமாஅத் அமைப்பின் துணைதலைவர் பதவி வகித்த ஷேக் அப்துல்லா அவர்கள் ஆரூண் அவர்கள் நடத்திய ஜமாஅத் முரசு வார இதழுக்கும் பங்களிப்பு செய்தவர்.

தனது அரசியல் மற்றும் அதிகாரிகளுடனான தொடர்புகள் மூலம் பெட் பொறியியல் கல்லூரி, மெட் பொறியியல் கல்லூரி மற்றும் யூனிவர்சல் பொறியியல் கல்லூரிகளின் உருவாக்கங்களில் உதவியவர்.

கணபதிபுரம் அன்னவிநாயகா கல்வி நிறு வனங்களுக்கு பல்வேறு உதவிகளை செய்து கொடுத்ததற்கு பிரதிபலனாக புதிதாக ஒரு கோடிரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட கட்டிடத் திற்கு "Kodikkal Sheik Abdullah Block" என்று பெயர் சூட்டி கவுரவித்துள்ளனர்..

இவரது வாழ்க்கை வரலாறு தாங்கிய 'நட்பின் ஆலைகள்' என்ற புத்தகமும், ஆளூர் ஷானவாஸ் எழுதிய 'ஒரு போராளியின் பயணம்' என்ற புத்தகமும், சகோதரர் பாஸல் அலி முயற்சியில் வெளியான 'தமிழக ஊடகவியலாளர் பார்வையில் கொடிக்கால்' என்ற புத்தகமும்,


திருவிதாங்கோடு ஆக்ஸ்போர்டு பள்ளி தாளாளர் எம். எஸ். அலிகான் முயற்சியில் தயாரான 'கொடிக்கால் வரலாறு' ஆவணப் படமும் மிகப்பெரிய வரலாற்று சான்றுகள்.

தற்போது 81 வயதான நிலையிலும் கன்னியாகுமரி கடற்கரை சாலையில் அமைதி இல்லம் என்ற கட்டிடம் கட்டி பல்வேறு சமூகத்தினர் மத்தியில் இணக்கம் ஏற்படும் விதமாக உரையாடல்கள், சந்திப்புகள் நிகழ்த்தி வரும் பெரியவர் கொடிக்கால் ஷேக் அப்துல்லா அவர்களின் அனுபவத்தை, சமூக அக்கறை யுடன் கூடிய பங்களிப்பை கவுரவித்து இந்த விருது வழங்கப்பட்டுள்ளது

# ஒரு நூல் தொப்பிக்கு கிடைத்த மரியாதை!

1987ம் வருடம். ஒரு நாள் நானும் அப்துல்லாஹ் அடியாரும் வேலூர் நோக்கி பேருந்தில் பயணம் செய்தோம்.

அப்துல்லாஹ் அடியார் வேலூர் இஸ்லாமிக் சென் டரில் ஜமாஅத்தே இஸ்லாமி யின் மூத்த தலைவர் ஜமீல் அஹமது அவர்களை சந்திக்க செல்லும் போது என்னையும் அழைத்து சென்றார்.




அடியார் அணிந்திருந்த குல்லாவும், தோளில் தொங்கிய நீண்ட ஷாலும் அவரது இஸ்லாமிய அடை யாளமும் பேருந்திற்குள் ளேயே தனி மரியாதை தந்ததை கண்ணுற்ற நான், பேருந்து வேலூரை நெருங்கும் போது மெல்ல அடியாரிடம் வேறு தொப்பி இருக்கிற தா என்று கேட்டேன்.

என்னை மேலும் கீழுமாக பார்த்த அடியார் தொப்பி எதற்கு என்று கண்களாலேயே கேள்வி கேட்க இருந்தால் நானும் போட்டுக் கொள் கிறேன் என்று பதிலளித்தேன்.

தனது பையை துளாவியவர் கையில் ஒரு பழைய நூல்தொப்பி கிடைக்க அதை என்னிடம் தந்தார்.

நானும் அந்த வெள்ளை நூல் தொப்பியை வாங்கி பெருமிதத்துடன் அணிந்து கொண்டேன்.

வேலூர் பேருந்து நிலையத்தில் இறங்கிய வுடன் என்னை நோக்கி ஓடி வந்த ரிக்ஸாக்காரர்

"வாங்க பாய் ஏரிக்கோங்க, எங்க போகணும் பாய்..." அப்படின்னு அழைத்ததை முதல் முதலாக கேட்ட போது என்னுள்ளே ஒருவித இனம்புரியாத உணர்வு ஏற்பட்டது.

பின்னால் வந்த அடியார் போக வேண்டிய இடத்தை சொல்ல,

'ஓ இஸ்லாமிக் சென்டரா..' என்று கேட்டு விட்டு மிகவும் மரியாதையாக எங்களை அங்கு கொண்டுபோய் இறக்கி விட்டார்.

வேலூரில் தங்கியிருந்த இரண்டு நாளும் நூல் தொப்பி அணிந்து கடை வீதிக்கு செல்லும் போது

ஒவ்வொருவரும் பாய்.. பாய் என்று அழைத்து உற வாடியதும், டீக்கடையில் பாய்க்கு ஸ்பெஷல் டீ என்று கல்லாவில் இருப்பவர் தந்த மரியாதையும் எனக்குள் இஸ்லாம் குறித்த தேடுதலை ஏற்படுத்தியதாக நெகிழ்ந்தார்.

மவுலானா ஜமீல் அஹமதுவும், அப்துல்லாஹ் அடியாரும் என்னிடம் காட்டிய சகோதரத் துவமே என்னை 'புறப்படு நீயும் இஸ்லாத்தை நோக்கி' என்று அறைகூவல் விடுக்க தூண்டியது.

கலைஞர், நஎத, இளையபெருமாள், மரகதம் சந்திரசேகர் உள்ளிட்ட ஆளுமைகளுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த

## கொடிக்கால் செல்லப்பா பெயரில்

1987 ல் வெளியான இந்த புத்தகம் 15000 பிரதிகள் விற்று தீர்ந்ததோடு அரசியல் களத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது..

தொடர்ந்து குறுகிய காலத்தில் ஹிந்தி, மலையாளம், கன்னடம், பெங்காலி மற்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு தாஃவா களத்தில் முக்கிய பங்கு வகித்த நிலையில் 1989 ல் சத்திய மார்க்கத்தை வாழ்வியல் நெறியாக ஏற்றுக்கொண்டு கொடிக்கால் ஷேக் அப்துல் லாஹ் வாக தன்னைஅடையாளப்படுத்தினார்.

– குளச்சல் ஆசிம்

*(கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் அவர்களுடனான உரையாடலின் போது பகிர்ந்து கொண்ட அனுபவம்)*

# ஜெனிசிஸ் வசனங்களும் குர்ஆன் வசனங்களும்



குர்ஆனின் வசனங்களை படிப்பவர்கள், அதன் முன்பின்வசனங்கள்எந்தவித தொடர்ச்சியும் இல்லாமல் இருக்கின்றது என்று கூறுவதை கேட்கலாம். சில சம்பவங்களை, வரலாறுகளை, வசனங்களை குர்ஆனில் தொடர்ச்சியாக கூறிக்கொண்டு வரும் இறைவன் சம்பந்தம் இல்லாமல் வேறொரு வசனங்களை அதன் தொடர்ச்சியாக கூறுவதை காணலாம்.

அதாவது ஒரு விசயத்தில் இருந்து மற்றொரு விசயத்திற்கு வசனங்கள் தாவுகின்றன என்று கூற லாம். இப்படி கூறப்பட்டிற்கும் வசனங்களுக்கு இடையில் ஒரு தொடர்பு இருக்கின்றது என்று சில குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகின்றனர். வசனங்களுக்கு இடையில் மட்டுமல்ல, அத்தியா யங்கள் வரிசைபடுத்த பட்டிருக்கும் முறையிலும் ஒரு தொடர்பு இருக்கின்றது. அதாவது ஒரு அத்தியாயத்திற்கும் அடுத்த அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பு என்ன என்று விளக்குகின்றனர். உதாரணத்திற்கு சில குர்ஆன் வசனங்களை பார்க்கலாம்.

அத்தோடு, இங்கே ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். முன்னர் அருளப்பட்ட வேதத்தை பாதுகாப்பதாக குர்ஆன் கூறுகிறது. பைபிள் அது இறக்கியருளப்பட்ட மொழியில் தற்போது இல்லை. மொழியாக்கங்களே இப்போது உள்ளன. மேலும் அதன் வசனங்கள் மனிதர்களால் மாற்றப்பட்டுள்ளன. அப்படிப் பட்ட வசனங்களை குர்ஆன் சரிசெய்கிறது.

குர்ஆன் *5:48.* மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப் படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாக வும் இருக்கின்றது

வ முஹைமினுன் என்ற வார்த்தைக்கு பாது காத்தல் (Guardian, Criterion) என்று பொருள், மேலும் ஒன்றை பற்றி முடிவெடுக்கும் முன் குர்ஆன் வசனத்தின் அடிப்படையில் முடிவெடுக்க வேண்டும். ஏனென்றால் முந்தைய வேதங்களை அது பாதுகாக்கிறது என்பதைத் தான் மேற்சொன்ன வசனம் கூறுகிறது.

இனி, உதாரணத்திற்குள் வருவோம்.

குர்ஆன் *91:11.* “ஸமூது” (கூட்டத்தினர்) தங்கள் அக்கிரமத்தினால் (ஸாலிஹ் நபியைப்) பொய்ப்பித்தனர்.

*91:12.* அவர்களில் கேடுகெட்ட ஒருவன் விரைந்து முன் வந்தபோது,

*91:13.* அல்லாஹ்வின் தூதர் (ஸாலிஹ்) அவர் களை நோக்கி: “இப் பெண் ஒட்டகம் அல்லாஹ் வுடையது; இது தண்ணீர் அருந்த(த் தடை செய்யாது) விட்டு விடுங்கள்” என்று கூறினார்.

*91:14.* ஆனால், அவர்கள் அவரைப் பொய்ப் பித்து, அதன் கால் நரம்பைத் தறித்து விட்டனர் – ஆகவே, அவர்களின் இந்தப் பாவத்தின் காரணமாக அவர்களுடைய இறைவன் அவர்கள் மீது வேதனையை இறக்கி, அவர்கள் யாவரையும் (அழித்துச்) சரியாக்கி விட்டான்.

*91:15.* அதன் முடிவைப் (விளைவை) பற்றி அவன் பயப்படவில்லை.

ஸமூது கூட்டத்தினர் செய்த பாவத்தின் காரணமாக அவர்களை அழித்ததை கூறும் இறைவன் அதனால் ஏற்படும் விளைவுக்காக பயப்படவில்லை என்கிறான். எதற்காக இறை வன் பயப்படவில்லை என்று கூற வேண்டும்? இறைவன் அனைத்தையும் அறிந்தவன் தானே?

இங்கே தான் பைபிளின் ஆதியாகம (Genesis) வசனத்தை குர்ஆன் சரி செய்கிறது

ஆதியாகமம், அதிகாரம்:6, வசனம்:5,6 – "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகி னது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,

தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கின தற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது."

கர்த்தர் தான் முன்னர் எடுத்த முடிவுக்காக வருத்தப்பட்டார் என்கிறது பைபிள். இறை வனின் பண்பில் எடுத்த முடிவிற்கு வருத்தப்படும் பண்பு இல்லை என்கிறது குர்ஆன். அவன் தான் அனைத்தையும் அறிந்தவன் ஆயிற்றே.

இரண்டாவது உதாரணம்:

வானங்கள், பூமியின் படைப்பை பற்றி பல குர்ஆன் வசனங்களில் இறைவன் கூறுகிறான். ஒரு இடத்தில் மட்டும் கூடுதலாக ஒரு செய்தியை கூறுகிறான். அந்த வசனம்

குர்ஆன் 50:38. 'நாம் வானங்களையும் பூமியையும் அவற்றிற்கிடையேயுள்ள அனைத் தையும் ஆறு நாட்களில் (கால கட்டங்களில்) படைத்தோம். நமக்குக் களைப்பேதும் ஏற்பட வில்லை.'

வானத்தையும், பூமியையும் படைத்தபின் எதற்காக இறைவன் தனக்கு களைப்பேதும் ஏற்படவில்லை என்று மக்களுக்கு உணர்த்த வேண்டும்?

ஆதியாகமம், அதிகாரம்:6, வசனம்:1, 2

இவ்விதமாக வானமும் பூமியும், அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன.

தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்.

ஓய்வெடுப்பது இறைவனின் பண்பில் கிடையாது. களைப்படைந்தவர்கள் தான் ஓய்வு எடுப்பர். இவை இறைவனின் பண்பு அல்ல என்று முந்தைய வேதத்தில் மனிதனால் மாற்ற பட்டிருந்த வசனத்தை குர்ஆன் சரி செய்கிறது.

மூன்றாவது உதாரணம்:

ஆதியாகமம், அதிகாரம்:3, வசனம்:16, 17.

"அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியா யிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார்.

பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத் தோடே அதின் பலனைப் புசிப்பாய். "

தடுக்கப்பட்ட மரத்தின் கனியை சாப்பிடு மாறு ஸ்திரீயை சர்ப்பம் தூண்டியது. சாப்பிட் டால் தேவர்களை போன்று ஆகிவிடலாம் என்றும் கூறியது. அதனை உண்மை என்று நம்பி, தானும் புசித்து தன் புருசனுக்கும் ஸ்திரீ கொடுத்ததாக பைபிள் கூறுகிறது. மேலும் ஸ்திரீ செய்த செயலின் விளைவாக கர்ப்பவதியா யிருக்கும்போது வேதனை பெருகும் என்கிறது'.

குர்ஆன் 7:22.

"இவ்வாறு, அவன் அவ்விருவரையும் ஏமாற்றி, அவர்கள் (தங்கள் நிலையிலிருந்து) கீழே இறங்கும்படிச் செய்தான் – அவர்களிரு வரும் அம்மரத்தினை (அம்மரத்தின் கனியை)ச் சுவைத்தபோது – அவர்களுடைய வெட்கத் தலங்கள் அவர்களுக்கு வெளியாயிற்று; அவர்கள் சுவனபதியின் இலைகளால் தங்களை மூடிக் கொள்ள முயன்றனர்; (அப்போது) அவர்களை அவர்கள் இறைவன் கூப்பிட்டு: "உங்களிரு வரையும் அம்மரத்தை விட்டும் நான் தடுக்க வில்லையா? நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு பகிரங்கமான பகைவன் என்று நான் உங்களுக்கு சொல்லவில்லையா?" என்று கேட்டான்."

ஷைத்தானால் ஏமாற்றப்பட்டது ஆதமின் மனைவி மட்டுமல்ல. இருவருமே ஏமாற்றப் பட்டனர் என்று முன்னர் நம்பிக்கையில் ஏற்பட்ட தவறை சரிசெய்கிறது குர்ஆன்.

– ஹமீதுத்தீன் பராஹியின் விளக்க உரையிலிருந்து

– அபூஹாசின்




# பீகார்

## தேர்தல் முடிவு, தமிழகத்திற்கு வரும் ஆபத்து.

நடந்து முடிந்த பீகார் மாநில தேர்தல் சிந்தனைகளை மக்களிடத்தில் விதைத்துள்ளது. நாம் எப்போதும் சொல்வது போல தேர்தல் வெற்றி என்பதே வாக்கு எந்திரம் யார் வசம் உள்ளதோ அவரிடம் தான் வெற்றி வசப்படும் என்பதே.

பீகார் மக்கள் இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் சென்று தங்கள் உடல் உழைப்பால் வேலை செய்கின்றனர். இந்த மக்கள் கொரோனாவில் ஏற்பட்ட பாதிப்பு மிகப்பெரியது. மேலும் அந்த மாநில அரசு இவர்களை கண்டு கொள்ளவில்லை என்பதே பல்வேறு மக்களின் கோபமாக இருந்தது. இதை தேர்தல் வாக்குறுதியாக மாற்றிய தேஜஸ்வி யாதவ் வெற்றி பெற்றால் 10 லட்சம் வேலை உருவாக்கப்படும் என்றதும் தேர்தலின் பாஜகவிற்கு நிகராக காங்கிரஸ் கூட்டணி உருவெடுத்தது.

தேர்தல் முடிவுகளில் பாஜக கூட்டணி ஒரு கோடியே 57 லட்சத்து ஆயிரத்து 226 வாக்குகள் பெற்றனர். எதிர்த்து களம் இறங்கிய காங்கிரஸ் கூட்டணி ஒரு கோடியே 56 லட்சத்து 88 ஆயிரத்து 458 வாக்குகள் பெற்றனர். வெறும் 12768 வாக்குகள் வித்தியாசம் ஆனால் பாஜக கூட்டணி வெற்றி பெற்ற தொகுதி 126 மற்றும் காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்ற தொகுதி 110.

இந்த முடிவு பல கட்சிகளை ஆச்சரியப்படுத்தியது காரணம் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் 11 தொகுதிகள் அதிகமாகப் பெற்றதே. அத்தனையும் ஆயிரத்திற்கும் குறைவு தான்.

இப்போது இதனை கடந்த நாடாளுமன்றத் தேர்தலுடன் ஒப்பிட்டு பார்ப்போம். நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து பல நாட்கள் ஆகியும் முடிவு அறிவிக்கப்படாமல் இருந்தது நாம் அறிந்ததே அதற்கு காரணம் பதிவான வாக்குகள் என்னவாக இருக்கும் இடைப்பட்ட வித்தியாசம் தான். சுமார் 58 லட்சத்திற்கும் மேல்.

இதனை எவ்வாறு சரி செய்வது என்று தெரியாமலேயே தேர்தல் முடிவு பல நாட்களாக அறிவிக்கப்படாமல் இருந்தது. அதில் கடைசி கட்டமாக நடந்த தேர்தலில் மட்டும் 35 லட்சம் வாக்குகள் வாக்கு இயந்திரத்தில் அதிகமாக இருந்தன.

பீகார் தேர்தலில் மூன்று கட்டங்களாக நடந்தது.

அதில் முதல் இரண்டு கட்டங்களாக நடந்த தேர்தல் முடிவுகள் பல தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணி வென்றுள்ளன. கடைசி கட்டமாக நடந்த தேர்தலில் பாஜக கூட்டணி மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. கடைசியாக நடந்த தேர்தலில் அதிக தொகுதிகள் முஸ்லிம் வாக்காளர்களைக் கொண்ட ஒட்டுமொத்த மக்களே பாஜகவிற்கு எதிராக வாக்களித்து இருக்கும் நிலையில் எப்படி இந்தத் தொகுதிகளில் மட்டும் வென்றனர் என்பது கேள்விக்குறியே.

உளவுத்துறையின் மூலம் முதல் இரண்டு கட்டங்களாக நடந்த தேர்தல் முடிவுகளை அறிந்து பிற்பாடு இதை செய்திருக்கலாம்.

வாக்கு எண்ணிக்கை முடிவு அறிவிக்கப்

பட்ட நேரமும் சந்தேகத்திற்கு உரியது. பல தொகுதிகளில் வேண்டுமென்றே இரவு 12 மற்றும் மறுநாள் வரை வாக்கு எண்ணப்பட்டு உள்ளது. 2019 முடிவு வெளியிடப்பட்டு பின்பு கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல்தேர்தல்ஆணையம்திணறியதுஅனை வரும் அறிந்ததே. அதனை சரிசெய்வதற்காக இதனைச் செய்திருக்கலாம்.

காரணம் தேஜஸ்வி யாதவ் சில குறிப்பிட்ட தொகுதிகளில் தபால் வாக்குகள் சரியாக எண்ணாமல் அதனை நீக்கி விட்டனர் என்று குற்றம் சாட்டி அதற்கு தேர்தல் ஆணையம் இரண்டு நாட்கள் கழித்து நாங்கள் மறு எண்ணிக்கை நடத்தி விட்டதாகவும் அதில் எந்த குறையும் இல்லை என்று கூறினர்.

தேர்தல் ஆணையம் வழக்கம்போல் வாக்கு இயந்திரம் பாதுகாப்பானது என்று சொல்லிக் கொண்டே இருந்தாலும் அவர்களால் கடந்த தேர்தலில் பதிவான வாக்குகளை விட இயந்திரத்தில் அதிகமாக இருந்தன என்பதற்கு இது நாள் வரை விடை கொடுக்க முடியவில்லை.

சுயேச்சை வேட்பாளர் களின் வாக்குகள் இயந்திரத்தால் ஆளும் கட்சிக்கே மாற்றப்படு கிறது என்ற சந்தேகம் பல நாட்களாக உள்ளது. கடந்த தேர்தலில் ஒரு சுயேச்சை வேட்பாளர்கள் 0 வாக்குகள் பெற்றிருந்தார் அவர் கேட்ட கேள்வி மற்றவர்கள் வாக்களிக்க வில்லை என்றாலும் அவர் பதிவு செய்த வாக்கு எங்கே என்பது தான்.

கடந்த தேர்தலில் தமிழகத்தில் தினகரனின் அமமுக கட்சி கிட்டத்தட்ட 2000 வாக்குச் சாவடிகளில் ஒரு வாக்கு கூட கிடைக்கவில்லை. ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் 5 முதல் 10 வரை கட்சிப் பணி யாளர்கள் இருந்தும் எங்கே சென்றன வாக்குகள் என்று தினகரன் கேட்ட கேள்வி இன்னும் விடை கிடைக்கவில்லை.

பீகார் தேர்தலில் ப்ளுரல் பார்ட்டி என்ற புதிய கட்சியில் போட்டியிட்டு சொற்ப வாக்கு களை பெற்றன. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப் பட்டு கொண்டிருந்த நேரத்தில் அந்த கட்சியின் தலைவி அவர்களுடைய வாக்குகள் அனைத்தும் பாஜக கூட்டணிக்கு மாற்றப்பட்டு விட்டதாக குற்றம் சாட்டியுள்ளார்.

தேர்தல் ஆணையத்திடம் அனைத்து தொகுதிகளிலும் ஒப்புகை சீட்டு எண்ணப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைத்தபோது அவர்கள் அப்படி செய்தால் முடிவு அறிவிக்க ஆறு நாட்கள் ஆகலாம் என்று 2019 நாடாளு மன்ற தேர்தலில் கூறினர். இதில் வேடிக்கை என்னவென்றால் இவர்கள் தேர்தல் நடத்தியதே 45 நாட்களுக்கு.

இந்த முடிவுகள் அனைத்தும் தமிழகத்திற்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்தும். 2019 இல் தமிழகத்தில் பாஜக வெற்றி பெறாமல் போன தற்கு ஒரு காரணம் இங்கு அவர்களுக்கு வாக்குச் சாவடிகளில் ஆட்கள் இல்லை என்பதுதான். இங்கே வெற்றிபெற்றால் ஒருவரும் நம்ப மாட்டார்கள் என்பதும்தான். அதனால் தான் இம்முறை அதிமுகவுடன் உறவு வைத்து பல தொகுதிகளை வெற்றி பெற்று தமிழகத்தில் உருவெடுக்க நினைக்கிறார்கள்.

எதிர்க்கட்சிகள் வழக்கம்போல் உறங்கிக் கொண்டிருக்கின்றன எப்போது விழிப்பார்கள் என்றும் தெரியவில்லை.



*அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்*

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் - செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் - பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை - டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 - விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் - அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்–
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 16 ரூ. 10.00

38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? –
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் – பக்கம் :8 ரூ. 10.00

39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? –
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் – அபூ. அஃப்ரஹ் – பக்கம் : 36 ரூ. 25.00

40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்–இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00

41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00

42. கூரியூர் ஜின்னா ஷஹீத் – மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00

43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00

44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00

45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்–
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00

02. மரிஜாப்பி – சி.பி.எம். அரசின் தலித் படுகொலைகள்–
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00

03. குஜராத் கோப்புகள் – மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் –
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

### BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00

02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00

03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00

04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00

05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00

06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00

07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00

08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00

09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00

10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

### BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

### BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது – டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00

02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி – கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.